வாராந்த பதிப்பு விலை சதம் 25

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

சுத்தகம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1997 ஐப்பசி திங்கள் 19-ம் நாள் (4—11—1966) வெள்ளிக்கிழமை மறப் 20 | இதழ் 22

மில்க்வைற்
நீலசோப், பார்சோப்
சிரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்




# மந்திரி சபையில் மாற்றம் விரைவில் ஏற்படாது

## மாவட்டசபை மசோதாவை ராஜாங்கமந்திரி சமர்ப்பிப்பார்?

மந்திரி சபையில் சில மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு என்றும், அநேகமாக 1967 ஆரம்பத்தில் இந்த மாற்றங்கள் நிகழக் கூடுமென்றும் விஷயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது. தற்போதைய மந்திரிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்ற கருத்தும் அரசகத்தில் நிலவுவதாக அறியப்படுகிறது.

கடந்த இடைத்தேர்தலில் ஐ. தே. கட்சியின் தோல்விக்கு அரசாங்கத்தின் வர்த்தகக் கொள்கையும், கல்விக் கொள்கையும் ஒரு காரணமென்று கூறப்படுவதால், இந்த அமைச்சுகள் கைமாறக் கூடுமென்று பேச்சு அடிபடுகிறது.

நாட்டின் வர்த்தகம் அனுபவமிக்க சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கையில் இருத்தல் வேண்டுமென்று பலமாகக் கருதப்படுவதால், வர்த்தக அமைச்சின் பொறுப்பை திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஏற்றுக் கொள்ளக் கூடுமென்றும், தற்போதைய வர்த்தக அமைச்சர் டாக்டர் பிரிஸ் லண்டனில் காலியாயுள்ள இலங்கைத் தூதரின் பதவிக்கு நியமிக்கப்படலாமென்றும் வதந்தி அடிபடுகிறது.

கல்வி அமைச்சர் இரிய கொல்ல சுகாதார அமைச்சை மேற்கொள்ளலாமென்றும், குருநாகல் மரியதேவ கலாசாலையின் அதிபராக பணியாற்றியவரும் தற்போதைய நிதி அமைச்சருமான திரு. வன்னியநாயக்கா கல்வி அமைச்சராகக் கூடுமென்றும் கூறப்படுகிறது. அப்படி நிகழ்ந்தால் சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தனவுக்கு நிதி மந்திரியாகும் வாய்ப்பு மீண்டும் ஒரு முறை கிடைக்கலாம்.

தொழிலாளர் மந்திரி ஜனாப் எம். எச். மகமத் வேறு ஒரு அமைச்சை மேற்கொள்ள முன்வரக் கூடுமென்றும் அரசாங்க வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

வேலையில்லாப் பிரச்சினையையும், வீட்டுப் பிரச்சினையையும் திறமையுடன் தீர்க்கக் கூடியவரும், தொழிலாளிகளால் கூடிய அனுதாபத்துடன் நடவடிக்கை எடுக்கக் கூடியவருமான ஓர் அமைச்சர் தொழிலாளர், வீடமைப்பு அமைச்சின் பொறுப்பை ஏற்கக் கூடுமாம்.

மாவட்டசபை மசோதாவை ஜனப்பிரதிநிதிகள் சபையில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன சமர்ப்பிப்பார் என்று தெரிகிறது. அரசாங்க அமைச்சர்கள் அநேகர் அவரே அந்த மசோதாவைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுள்ளனராம்.

அமைச்சர் திரு. திருச்செல்வம் செனட் சபையில் இருப்பதால் ராஜாங்க அமைச்சரே இம் மசோதாவை சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மந்திரி சபையில் திடீரென மாற்றங்கள் செய்யப்படமாட்டாதென்றும், மாற்றங்கள் சில புதிய ஆண்டிலே நடைபெறக் கூடுமென்றும் அறியப்படுகிறது.

## விடுதலை கோரி மனு

பண்டாரநாயக்க கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற புத்தரக்கித தேரரும், ஜயவர்த்தனவும் விடுதலை கோரி நீதி அமைச்சரிடம் மனுத்தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இவர்களின் மனுவை ஆராய்வதற்கு நீதி அமைச்சைச் சேர்ந்த திரு. சனசூரியர் அனுப்பப்பட்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

சுதந்திர நாளின் போது விடுதலையாகும் கைதிகள் வரிசையில் இவர்களும் இடம் பெறலாம் என்று சிலர் கூறு

(9-ம் பக்கம் பார்க்க)

## இடைத் தேர்தல் தொகுதிகளில் தேர்தல் வழக்குகள்?

### 'சியரட்டா' தகவல்

கடந்த வாரம் இடைத்தேர்தல் நடைபெற்ற மூன்று தொகுதிகளின் பிரதிநிதிகளுக்கும் எதிராக தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்யப்படலாம் என்று 'சியரட்ட' என்ற வார ஏடு ஒரு செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்தவாரம் பண்டாரவளை, பலாங்கொடை, பெந்தர-எல்பிட்டிய ஆகியதொகுதிகளில் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் வெற்றிபெற்ற வேட்பாளர்களுக்கு எதிராக தேர்தல் வழக்குகளைத் தாக்கல் செய்ய பலர் ஆலோசித்து வருவதாக 'சியரட்ட' என்ற வார ஏடு ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறது.

பெந்தர-எல்பிட்டிய, பலாங்கொடை ஆகிய தொகுதிகளின் முன்னைய பிரதிநிதிகள் தேர்தல் வழக்கில் தோல்வியடைந்த காரணத்தினாலேயே இத்தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் நடைபெற்றன. பண்டாரவளைத் தொகுதிப் பிரதிநிதி உடல்நலமின்மை காரணமாகத் தனது பதவியைத் துறப்பதாக அறிவித்தார். இப்பொழுது நடைபெற்ற இடைத்தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளார்கள்.

## நிந்தகம் மசோதாவுக்கு புதிய திருத்தம்

நிந்தகம் மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் ஒரு புதிய திருத்தப் பிரேரணை கொண்டுவருவதற்கு ஆலோசித்திருப்பதாக தெரிய வந்துள்ளது. நிந்தகம் மசோதா சட்டமானதும் உழுபவனுக்கே நிலம் சொந்தமாகிறது. இதேபோன்று மலைநாட்டில் உள்ள தோட்டங்களும் நிலமற்ற சிங்கள விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சியினர் திருத்தம்கொண்டுவருவார்கள் என்று தெரிகிறது.

நிந்தகம் மசோதா இம் மாதம் ஆறும் திகதியன்று பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். அப்பொழுது எதிர்க்கட்சியினர் அம் மசோதா சட்டமாவதை ஆதரிப்பதுடன், அதற்கொரு திருத்தப் பிரேரணையைச்

(9-ம் பக்கம் பார்க்க)

"மெய்கண்டான்"

| | | |
|---|---|---|
| 1. | ஆபிஸ் கலண்டர் (தேதி பிளக்கின் அளவு 5"X7¾") | 5-00 |
| 2. | திருக்குறட் கலண்டர் No. 1 விசேசம் | 2-40 |
| 3. | நன்மொழிக் கலண்டர் No. 2 | 1-35 |
| 4. | மாதக் கலண்டர் (பஞ்சாங்கக் கலண்டர்) | -85 |
| 5. | சிங்களக் கலண்டர் (No. 1 கலண்டர் அளவுள்ளது) | 2-15 |
| 6. | ரேயின் கலண்டர் (பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்) | 5-50 |
| 7. | தகரப் படம் (அழகிய பல மாதிரிகள்) | 2-75 |
| 8. | No. 1 பிளாஸ்ரிக்தமிழ்டயறி (பிளாஸ்ரிக்கவருடன்) | 2-75 |
| 9. | No. 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி ,, | 2-20 |
| 10. | No. 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி ,, | 3-60 |
| 11. | No. 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 2-20 |
| 12. | No. 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 1-75 |
| 13. | No. 6 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி A (பக்கம் 1 நாள்) | 3-85 |
| 14. | No. 7 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி B (பக்கம் 2 நாள்) | 3-35 |
| 15. | No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக்கவர்) | 3-55 |
| 16. | பிளாஸ்ரிக் சிங்கள டயறி ,, | 2-20 |
| 17. | போஸ் சிங்கள டயறி ,, | 3-15 |
| 18. | பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | 5-50 |
| 19. | No. 1 பேர்ஸ் தமிழ்டயறி (பேர்ஸ்சகிதம் WithPurse) | 3-7[illegible] |
| 20. | No. 2 பேர்ஸ் திருக்குறள் டயறி ,, | 3-15 |
| 21. | No. 4 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி ,, | 3-15 |
| 22. | No. 5 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி ,, | 2-75 |
| 23. | No. 6 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1 நாள்) | 4-95 |
| 24. | No 7 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2 நாள்) | 4-40 |
| 25. | No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக்கவர்) | 5-25 |
| 26 | வலற் டயறி (Wallet Diary - மிகச் சிறந்தது) | 6-50 |
| 27. | ஜெம் டயறி (Gem Diary) பிளாஸ்ரிக் | 1-85 |
| 28 | ஜெம் பேர்ஸ் டயறி (Gem Purse Diary) | 2-75 |
| 29. | புரொபெஷனல் பிளாஸ்ரிக் (Appointments) டயறி மிகப் பெரிது 7¼"X9¾" அளவுள்ளது | 7-00 |
| 30. | புரொபெஷனல் பாக்கெட் பேர்ஸ் டயறி | 4-15 |

தங்கநிற (Rolled Gold) பூட்டுடன் கூடிய பேர்ஸ் டயறிகள்

| | |
|---|---|
| No. 2 திருக்குறள் டயறி (பூட்டுடன் போஸ்) | 4-25 |
| No. 2 திருக்குறள் சினிமா டயறி ,, | 4-[illegible]5 |

இன்னும் பல உண்டு.

மெய்கண்டான்
அச்சியந்திரசாலை லிமிட்டெட்
161, செட்டியார் தெரு,
போன்: 79141 கொழும்பு-11

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

அடுத்த இதழ் வெளியூரில் 10-11-66 காலை தலைநகரில் 9-11-66 மாலை கிடைக்கும்




ஊன் உண்ணும் தாவரங்கள் - 2

# நெப்பன் திசு

— அ. ஜவகர்ஷா —

சென்ற முறை 'குரூசரா' என்பதைப் பற்றி விளக்கியிருந்தேன். இம்முறை 'நெப்பன்திசு' பற்றிக் கூறுகிறேன். இத்தாவரம் சதுப்பு நிலங்களில் வாழும். தமக்கு தேவையான புறத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக சிறு பூச்சிகளைப் பொறி முறை மூலம் பிடித்து அவைகளைச் சமிபாடு செய்துகொள்கின்றன. இவைகள் வாழும் இடங்களில் பற்றீரியாக்கள் சேதனப் பொருட்களைத் தகர்க்காததினுல் இவைகள் மேற்கூறிய பொறி முறையைக் கையாளுகின்றன.

பிற மரங்களில் பற்றி ஏறுவதற்கும் பூச்சிகளைப் பிடிப்பதற்கும் ஏற்ற வகையில் இது அமைந்துள்ளது. இலைக் காம்பானது அகன்று ஒளிச் சேர்க்கைக்கு இலைபோன்று உதவி புரிகின்றது. இலையின் அகன்ற பகுதி நீண்ட பற்றியாக மாற்ற மடைந்துள்ளது. இப்பற்றியின் நுனியில் ஒரு கெண்டி உள்ளது. இக் கெண்டிவளர்வதற்குமுன்பே பற்றி தாய்க்கிளையைச் சுற்றிக்கொள்கிறது. கெண்டி செங்குத்தான நிலையில் அமைந்துள்ளது. இது ஒரு குழாய் போன்று நீண்டு உள்ளது. இதன்மேல் பகுதியில் குறுகிய பாகமொன்று உள்ளது. கெண்டிகளின் வாயும் அதன் மூடியும் நிறமுடையனவாகவும் பூச்சிகளை வசீகரிக்கும் தன்மையுடையனவாகவும் காணப்படும். இம்மூடி கெண்டியின் வாயை இறுக மூடிக்கொள்ளும்.

கெண்டி முதிர்ந்த பின்புதான் இது திறந்து கொள்ளும். இம்மூடி கெண்டியினுள் மழை நீர் செல்லாதவாறு பயன் படுகின்றது. கெண்டியின் மீது பல நிறக் கொடுகள் உள்ளன. கெண்டியின் வாய் உட்சரிவானது. இப்பகுதியில் பல அமுதச் சுரப்பிகள் உள்ளன. கெண்டியின் உட்பகுதி வழுவழுப்பானதாக இருக்கும். கெண்டியின் வாயில் வந்தமரும் பூச்சி இவ்வழுவழுப்பான பகுதியை அடைந்தவுடன் வழுக்கி உள்ளே விழுந்து விடுகின்றது. கரப்பான், வண்டுகள் போன்ற பெரும் பூச்சிகள் இவ்வாறு வழுக்கி விழுகின்றன.

கெண்டியினுள் சென்ற பூச்சி வெளியேறமுடியாமல் உள்ளே உள்ள நீரில் மூழ்கி இறக்கின்றது. கெண்டியின் கீழ்ப்பகுதிச் சுவர்கள் சமிபாடடைவதற்கானநொதிச்சத்தைச்சுரக்கின்றன சமிபாடடைந்த உணவு நேரடியாக கெண்டியின் சுவர்களால் உறிஞ்சப்படுகின்றன.

# எலி மகாத்மியம்

—இரா. கைலைநாதன்

குசேலர் தம் ஆயுட் காலத்தில் 27 குழந்தைகளுக்கு தந்தையானது கதை. ஆனால் எலிகள் ஒரு முறைக்கு ஒன்றிலிருந்து பதினைந்து,ஏன் சில சமயங்களில் இருபத்தொரு குட்டிகள் கூட போடும். இக் குட்டிகள் மூன்று மாதத்திற்குள் தாய் தந்தையராகி விடுகின்றன.

இக் கொள்ளைக் கூட்டம் மனிதனின் ஆகாரப் பொருள்களை நாசமாக்குவதுடன் நில்லாமல் கொள்ளை நோய்களையும் நம்மிடையே பரப்புவதற்கு முக்கிய காரணமாகவும் விளங்குகின்றன. எலிகளையும் மனிதர்களையும் பீடிக்கும் பிளேக், டைப்ஸ் சுரம் என்ற கொள்ளை நோய்களை எலிகளே நம்மிடையே பரப்புகின்றன. இவ் விரு வியாதிக் கிருமிகள் உள்ள தெள்ளுப் பூச்சிகள் எலிகளின் உடலில் இவ்வியாதியைப் பரப்புகின்றன. இந்நோய் கண்ட எலிகள் இறந்ததும் அதன் உடலில் உள்ள கிருமிகள் மனிதனை பற்றிக் கொள்கின்றன. நடந்த போர்களில் மாண்ட மனிதர்களைவிட இக்கொடிய நோய்களால் மாண்ட மக்களின் தொகை அதிகமென்று கணிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவில் வாழ்ந்து வரும் எலிகள் மனிதர்களுடன் கடலைக் கடந்து வந்த மரக்கலங்களில் எச் செலவுமில்லாமல் உலகெங்கும் பரவின.

இவ்வெலிகளின் தொல்லை இன்றல்ல என்றென்றும் இருந்ததற்கு அறிகுறியாக கிரேக்க விவசாய நூல் ஒன்றில் எலி ஒழிப்பு திட்டமொன்றைக் காணலாம். அவர்கள் திட்டம் பலிக்கவில்லை என்பதற்கு அத்தாட்சி, கிரேக்க மக்கள் அழிந்தனர். ஆனால் எலிகள் அழியவில்லை. கிரேக்கர் கையாண்டமுறையை பார்க்கவும்.

ஒரு காகிதத்தை எடுத்து 'என் வீட்டில் குடி புகுந்த எலியே,எனக்குத் தீங்குவிளைவிக்க கூடாது. வேறு உன் இனத்தாரும் தீங்கு விளைவிக்க அனுமதிக்க கூடாது. இது என் கட்டளை, நீ குடும்பத்துடன் இக் கணமே என் வீட்டை காலி செய்து நான் குறிப்பிடும் விளைச்சல் நிலத்தில் வாழ்ந்து வா. இனி உன்னை நான் என் வீட்டில் கண்டால் கண்டதுண்டமாக்கிவிடுவேன்' இவ்வகையில் எழுதிய காகிதத்தை எலி வளைக் கருகே வைத்து ஒரு கல்லை அதன் மேல் வைக்க வேண்டும் என்பதே எலி விரட்டும் அதிசய முறை.

## சிரிப்பு

ஒருநாள் தலைமை ஆசிரியருக்கு டெலிபோன் வந்தது. 'என் மகன் இன்று உடம்பு சரியில்லாததால் பாடசாலைக்கு வரமாட்டான்' என்று சொல்லப்பட்டது.

த. ஆ:- (அனுதாபத்துடன்) அப்படியா?,... த்சொ...! பேசுவது யார்?

குரல்: 'எ..கேப்பா சார்!'

# நேருவும் நாவலாசிரியையும்

ஒரு சமயம் நேரு பர்மிங் ஹாமில், ஹொரஸ் அலெக்சாந்தர் என்பவரின் விருந்தினராகத் தங்கியிருந்தார். பிரபல நாவலாசிரியை திருமதி நயமி மிச்சின் அப்போது அங்கே வந்தார். நேருவை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அறிமுகம் முடிந்தவுடன், அந்த ஆசிரியை நேருவுக்கு முன்பு தரையில் உட்கார்ந்து கொண்டாராம். இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த நேரு ஏன் என்று கேட்க, இது தான் மரியாதையாகத் தோன்றுகிறது என்றாராம் அந்த ஆசிரியை! தன்னுடைய கொள்கையையும், லட்சியங்களையும் விட்டுக் கொடுப்பதைவிட, சிறையில் செத்து மடிவதுமேலென்று வாழத் துணிந்து விட்ட தியாக திரு உருவின் முன்னே; கீழே உட்காருவதுதான் மரியாதை என்று,இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னமேயே: ஒரு ஆங்கில மாது நினைத்தாள் என்றால் பெருமைக்குரிய பண்டித நேருவின் புகழுக்கு இதைவிட வேறு என்ன பெரிய விளக்கத்தைக் கூற முடியும்.

---

## ஐன்ஸ்டீனின் நகைச்சுவை!

விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன் ஒரு விருந்துக்கு சென்றிருந்தார். விருந்து முடிந்து அவர் வீட்டிற்கு திரும்பியதும் மனைவியிடம் விருந்தைப் பற்றி விபரித்தார்.

விருந்தில் கலந்து கொண்டவர்களைப் பற்றியெல்லாம் வர்ணிக்க ஆரம்பித்தார். அப்போது அவர் மனைவி குறுக்கிட்டு, 'அது கிடக்கட்டும், அங்கே பெண்கள் வந்திருந்தார்களா? அவர்கள் என்ன மாதிரியான ஆடைகள் அணிந்திருந்தார்கள்?' என்று கேட்டார்.

'அவர்கள் என்ன ஆடை அணிந்திருந்தார்களோ எனக்குத் தெரியாது. சாப்பாட்டு மேசைக்கு மேலே தெரிந்த அவர்கள் உடம்பில் ஒரு துணியுமில்லை. மேசைக்கு அடியில் குனிந்து பார்க்க எனக்குத் தெரியவில்லை' என்றார் மேதை ஐன்ஸ்டீன்.'

அன்புள்ள மருமக்களே,

வணக்கம். சென்ற கிழமை மாமாவின் கடிதம் காணுமல் மாமா மீது கோபமடைந்திருப்பீர்கள். இப்பொழுது அந்தக் கோபமெல்லாம் தீர்ந்திருக்குமல்லவா?

சென்ற வாரத்தில் இரண்டு மேதைகளின் நினைவு தினங்கள் வந்து சென்றன. ஒருவர் சர்தார் வல்லபாய் பட்டேல். பாரதத் திருநாட்டின் அடிமை விலங்கொடிக்க தன்னையே அர்ப்பணித்த மாபெரும் தியாகி அவர். இந்தியாவின் இரும்பு மனிதர் என்று புகழப்பட்டவர். "உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை" என்று முழங்கியவர். அஞ்சுதல் அறியா ஆண்மையாளர். அவரது நினைவு தினம் அக்டோபர் 31-ம் திகதி கொண்டாடப்பட்டது.

மற்றவர் ஆங்கில நாடு தந்த ஒப்பற்ற நாடக மேதையான பெர்ளுட் ஷா வாழ்விலே சூழ்ந்து வந்த தொல்லைகளையும் இடர்பாடுகளையும், தனது வெற்றிக்கான படிக்கற்களாக மாற்றியவர். எந்த நேரத்திலும், எப்பொழுதும், அசைக்க முடியாத தன்னம்பிக்கை கொண்டவர். அவர் கொண்ட அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையால் 'தலைக்கனம்' பிடித்தவர் என்ற பட்டத்தைக்கூட அவர் தாங்க வேண்டி நேர்ட்டது. அப்படிப்பட்ட மாமேதையின் நினைவு நாளை நவம்பர் 2-ம் திகதி உலகெங்கும் கொண்டாடியது.

சர்தார் வல்லபாய் பட்டேலிடம் காணப்பட்ட விடுதலை உணர்ச்சியும் அஞ்சா நெஞ்சமும்; பெர்ளுட் ஷாவிடம் காணப்பட்ட தன்னம்பிக்கையும், தோல்வியையும் வெற்றியாக மாற்றும் மனப் பண்பும் உங்கள் எல்லோரிடமும் வளர வேண்டும் என்பதுதான் மாமாவின் ஆசை.

வேறு என்ன? மீண்டும் சந்திப்போம். அதுவரை வணக்கம்.

அன்புள்ள
வளர்மதி மாமா.

# பலகாரம் விற்ற துணை ஜனாதிபதி

மேலை நாட்டு மேதைகள் ஆட்சித் தலைவர்கள் இவர்கள் எல்லாம் தங்கள் சின்ன வயதிலே மிக்ச் சாமானியர்களாகவே இருந்திருக்கிறார்கள்.

குபேர புரியான அமெரிக்காவின் துணை ஜனாதிபதியான ஹம்ப்ரியும் இதற்கு விலக்கல்ல.

ஹம்ப்ரி கல்லூரியில் படிக்கும் போதே வேலை செய்துதான் படித்துப் பட்டம் பெற்றார். எப்படி தெரியுமா!


அவருடைய மனைவி கல்லூரி மாணவர்களின் ருசிக் கேற்ப சுவையான பலகாரங்களைத் தயார் செய்து விடுவார். பிறகு மாணவர்களுக்கு கல்லூரி மைதானத்திலேயே பலகாரங்கள் விற்பனை செய்யப்படும்.

இப்படி கஷ்டப்பட்டு அத்தம்பதிகள் வாழ்க்கை நடத்தினர். ஹம்ப்ரியும் படித்துப் பட்டம் பெற்று இன்று அமெரிக்காவின் உதவி ஜனதிபதியாக விளங்குகிறார்

# மாணவர் சுற்றுலா

ஸ்ரீலாபம் அரசினர் ரோ. க. த. ஆ. கள் வித்தியாலயத்தின் 50 மாணவர்களும், தலைமை ஆசிரியர் உட்பட 6 ஆசிரியர்களும் சேர்ந்து; 3-9-66 — 7-9-66 வரை இலங்கையின் பல வேறு மாகாணங்களிலும் சஞ்சரித்து சரித்திர, புவியியல், மிருகவியல், தொழில் முறை விடயங்களை நேரில் கண்டு ஒரு பெரிய சாதனையை நிலைநாட்டினர்.

இந்த வித்தியா சுற்றுலாவுக்கு 5 நாட்கள் பிடித்தன. ஏறக்குறைய 800 மைல்கள் வரை பிரயாணஞ் செய்தனர். இந்த வித்தியா சுற்றுப் பயணத்தில் பேராதனை—நுவரெலியாப் பூந்தோட்டங்கள், பராக்கிரமசேனுநாயக்க சமுத்திரங்கள், லக்சபான — கல்லோயா மின்சார உற்பத்திகள், வாழைச்சேனை காகித — அம்பாறை கரும்புச் சீனித் தொழிற்சாலைகள் நேரில் பார்வை இடப்பட்டதினுல் மாணவரின் ஏட்டுப்படிப்பு தத்ருபமாக்கப்பட்டது.



இங்கே காணப்படும் இந்த இராட்சச விமானத்தில் ஏற்றித்தான் ஜெமினி-11 விண்வெளிக் கப்பலுக்கு உபயோகப்படுத்தப்பட்ட இருவர் இருந்து போகக்கூடிய கப்சியூல் (CAPSULE) கேப் கென்னடிக்கு அனுப்பப்பட்டது.




"முகிலன்",
கொச்சிக்கடை.

கே: அண்ணா அவர்களிடம் நீங்கள் என்ன விஷேசமான திறமையை அவதானித்திருக்கிறீர்கள்?

ப: மூக்குப்பொடியின் சாரம் ஏற ஏற பேச்சின் வேகம் ஏறுவதை அவதானித்திருக்கிறேன்.

ஃ

ச. ஆனந்தராசா,
அளிசாவளை.

கே: மூன்று இடைத்தேர்தல்களிலும் எதிர்க்கட்சி வெற்றியடைந்துள்ளது. அவ் வெற்றி எதை எடுத்துக் காட்டுகிறது குயுக்தியாரே?

ப: அம் மூன்று தொகுதிகளிலும் ஐ. தே. கட்சி தோல்வி அடைந்து விட்டதென்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஃ

சு. சிவகுருநாதன்,
கொழும்பு-6.

கே: இ. போ. ச. பஸ்களில் தமிழில் பெயர்ப்பலகை எழுதுவதற்கு ஒரு தமிழ் அறிவுள்ள நபரை அமர்த்தக் கூடாதா? பிழையாக எழுதி ஊர் சுற்றுவது கேலிக்கூத்தாக தோன்றுகிறதே!

ப: தமிழறிவுள்ளவரை அமர்த்தினால், சிங்களவருக்கும் பெயர்ப்பலகையில் தமிழ் எழுதத் தெரியும் என்பதை எப்படிக் காட்டிக் கொள்வது?

ஃ

வே. சிவலிங்கம்,
கல்முனை.

கே: தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்திலிருந்து விலகினால் தேசிய அரசாங்கத்தின் ஆயுட்காலம் தொடருமா?

ப: தொடர்ந்து அரசாங்கத்திலிருப்பதாகக் கட்சி தீர்மானித்துவிட்டதால் இக் கேள்வி எழவில்லை.

கே: மாவட்டசபைகள் அமைக்கப்பட்டதும் முஸ்லிம் பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் நிலை என்னவாகும்? தமிழர்களின் கலை கலாசாரத்தைப் பேணமுடியுமா?

ப: முடியும். தமிழ்ப்பகுதிகளில் நிறுவப்படும் மாவட்ட சபைகளில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் ஏன், சிறுபான்மைத் தமிழர்களுக்குங்கூட—போதிய பிரதிநிதித்துவம்வழங்கப்படுமாதலின் எந்தக் கலாசாரமும் பாதிக்காது.

கே: இடைத்தேர்தலைப் பற்றி உங்கள் கருத்து?

ப: எதிர்க்கட்சிகள் பாராளுமன்றப் பகிஷ்காரத்தைக் கைவிட வழி கோலியுள்ளது இந்த இடைத்தேர்தல்முடிவுகள்.

ஃ

ஆ. நா. தம்பிராசா,
வியாபாரிமூலை.

கே: ஐயா, மறுபிறவியில் நான் ஒரு எம். பி. யாக வருவதற்கு இப்பிறவியில் என்ன செய்யவேண்டும்?

ப: பணம் சேர்க்கவேண்டும் தேர்தல் செலவுகளுக்கு மட்டுமல்ல—அதன் பின் தொடரப்படும் தேர்தல் வழக்குச் செலவுக்கும் சேர்த்து.

ஃ

ஏ. பிட்டர்,
மாதகல்.

கே: ஐக்கியநாடுகள் சபைக்குத் தமிழரசுக்கட்சித் தலைவர் ஒருவர் சென்றிருக்கலாமே?

ப: அவர்களுக்கு உள்நாட்டிலே ஏகப்பட்ட வேலை. தமிழ்பேசும் மக்களையும் தமிழரசுக் கட்சியையும் கொந்தளிப்பான பிரச்சினைகள் பல எதிர்நோக்கியுள்ள இச் சந்தர்ப்பத்திலே கட்சித் தலைவர்கள் வெளிநாடு செல்வது எவ்வகையிலும் அறிவுடைமையாகாது.

ஃ

வே. முத்துக்கிருஷ்ணன்,
அட்டன்.

கே. பெண்களின்கூந்தலுக்கு இயற்கையாகவே மணமுண்டா?

ப: உண்டு! சுரும் பேனும் எந்த மணமோ அந்தமணம்.

ஃ

எம். ஐ. நாதன்,
மூள்ளிவளை.

கே: சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் சில தமிழரசாரில் பொருமை கொள்வதேன்?

ப: தாங்கள் தமிழரசுக்கட்சியை எதிர்த்துப் பிரசாரம் செய்தும்கூட அக்கட்சிதமிழ் பேசும் இனத்தின் பிரதிநிதியாகிவிட்டதே என்பதுதான் பொருமைக்குக் காரணம்!

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: பாகிஸ்தான் பிரதமர் அயூப்கான் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல; 1188
கொழும்பு-12.

இந்த அடையாளத்தையுடைய கேள்வி கேட்ட வாசகர் மூன்று ரூபா பரிசு பெறுகிறார்.

ப: இந்து நாசர் தனக்குத் தெரியாமல் தன்னைக் கலந்து கொள்ளாமல், தன்னை மதிக்காமல், தனது நாட்டுக்கு வராமல் டில்லிக்குச் சென்று மகாநாடு நடத்தியது பற்றி அயூப்கான் கோபத்தால் குதிகுதியென்றுகுதித்துக்கொண்டிருக்கிறாராம்.

கே: தமிழகத்தில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் எந்தக்கட்சி வெற்றிபெற்றால் இலங்கை அரசாங்கத்துக்கு நன்மையுண்டாகும்?

ப: அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் காங்கிரஸ்தான்.

எம். ஜி எம் இக்பால்,
வடத்தல்திவு.

கே: திரு பொன்னம்பலம் தங்க மாலையை தொழிற்சாலைக்கு அளித்தது ஏன்?

ப: அளிப்பதாக அறிவிப்பேயன்றி இன்னும் அளிக்கவில்லை. எனவே 'ஏன்' என்ற கேள்விக்கு நான் பதிலளிக்கவுமில்லை.

ஃ

ரு. ஆ. நா. தம்பிராசா,
வியாபாரிமூலை.

கே: மாவட்டசபை நிறைவேறும் தருணம்பார்த்து தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் சிறுபான்மைத் தமிழரையும், பெரும்பான்மைத் தமிழரையும் பிரித்துவிடப் பார்க்கிறார்களே அரசியல் சூதாட்ட வீரர்கள்!

ப: தேசிய ஐக்கியம் கட்டியெழுப்பப்படும்போது இன ஐக்கியத்துக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பது துரதிர்ஷ்டமே. இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான வழி முஸ்லிம்களுக்கும் சிறுபான்மைத் தமிழர்களுக்கும் சகல உரிமைகளையும் வழங்குவதே!

ஃ

அர்த்தநாரீசுவரன்,
பதுளை.

கே: தினத்தாள்கள் பிரசுரிக்கும் கொள்ளை, கொலை, தற்கொலை, விபசார வழக்கு முதலிய செய்திகளை வாசித்து இளஞ் சந்ததியினர் நாசமடைகிறார்கள் என்பது என் கருத்து!

ப: 'நாசமானாலென்ன தங்களுக்குப் பணம் கிடைக்கும் போது' என்பது அந்தப் பத்திரிகை முதலாளிகளின் கருத்து.

ஃ

எஸ். எஸ். வி. பொன்னுத்துரை'
சாவகச்சேரி.

கே: மனிதன் முன்னேற்றத்தை விரும்புவதின் காரணமென்ன?

ப: காரணம் தேவைதான். தேவைகள் கூடும் போது அவற்றைப் பெற அவன் முன்னேற வேண்டியிருக்கிறது. முன்னேறத் தவறினால் தேவைகளை நிறைவேற்ற முடியாது. தேவைகளை நிறைவேற்றுவிட்டால், மனிதன் அத் தேவைகளாலே நாசமாக்கப்படுவான்.

ஃ

சி. லீலாவதி,
ஒட்டுசுட்டான்.

கே: உங்கள் வாழ்நாளில் ஏதாவது மறக்கமுடியாத சம்பவம் நடந்திருக்கின்றதா?

ப: ஆம்! பாபங்கள் நிறைந்த இந்த உலகைமுதன் முதல் கண்ணைத் திறந்து பார்த்தசம்பவம்.

ஃ

'கடமை மூன்று',
தம்பசிட்டி.

கே: பெண் பேயாவது எப்பொழுது?

ப: ஆண், பேயாக மாறும் பொழுது.

ஃ

க. சிவலிங்கம்,
நோட்டன்பிறிஜ்.

கே: தமிழரசுக்கட்சி சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டால் தமிழ்மக்களுக்கு ஒற்றை ஆட்சியில் சம அந்தஸ்துக் கொடுப்பார்களா?

ப: சாத்தியமில்லை! கொடுத்தாலும்ஒற்றையாட்சியில் சம அந்தஸ்து நிலைத்து நிற்கமுடியாது.

ஃ

கண்ணன்,
நீர்கொழும்பு.

கே: கண்ணைக்காட்டி ஆண்களை மயக்கும் மோகினிகளைப் பற்றி என்ன கூறுவீர்கள்?

ப: அத்தகைய மோகினிகள் இக்காலத்திற் கிடையாது. காரணம், இக்கால ஆண்கள் கண்களை முக்கியமாகக் கருதுவதில்லை. கண்களை மட்டும் காட்டி அவர்களை மயக்கமுடியாதென்பதை அறிந்தவர்கள்தான் இந்த மோகினிகள்.........

ஃ

எம். மங்கையர்க்கரசி,
கொழும்பு-6.

கே: நீங்கள் பிரதமரானால் மொழிப் பிரச்சினையைத் தீர்க்க என்ன செய்வீர்கள்!

ப: நான் பிரதமரானால் 'மௌனப் பாஷை'யை அரசகருமமொழியாகப் பிரகடனம் செய்வேன். 24 வினாடிகளில் இதனை நான் செய்ய முடியும்.



வாழ்க வைத்தியம்!

தென்னாபிரிக்காவின் இனவெறிப் பிரதமரான வேர்வூட்டைக் கொன்றவன் ஒரு வைத்தியக்காரன் என நீதிபதி தீர்ப்பளித்தார்.

—செய்தி

—சிலவேளைகளில் வைத்தியங்கள் நல்ல காரியங்களையும் செய்துவிடுகின்றன போலும்!

சாட்டு!

தமிழ்ப்பல்கலைக் கழகக் கோரிக்கை காரணமாக கிடைக்க விருந்த இந்துப்பல்கலைக் கழகத்தை இழக்க நேரிட்டுவிட்டது.

—உடுப்பிட்டி எம். பி.

—'முடக்கழுதைக்கு சறுக்கியது சாட்டு'

உரலுக்குள் அகப்பட்டது..

டாக்டர் சுபாந்திரியோவுக்கு இராணுவ நீதிமன்றம். மரண தண்டனை விதித்தது.

—செய்தி

—உரலுக்குள் அகப்பட்டது உலக்கைக்குத் தப்ப முடியுமா?

புதுமொழி!

பலாத்காரமாக முத்தங் கொடுத்த இளைஞன் ஒருவனின் நாக்கை இளம் பெண் கடித்துத் துண்டாக்கினாள்.

—செய்தி

—'முத்தங் கொடுப்பானேன்? நாக்கை இழப்பானேன்?' என்பது புதுமொழி.

சேவலின் கூற்று!

இலங்கையின் புகழ் இப்பொழுது நான் ஐ. நா. வில் பரவுகிறது.

— ஜீ. ஜீ.

—தான் கூவா விட்டால் இரவு விடியாது, உலகிற்கு ஒளியே கிடைக்காது என்று கூறியதாம் ஒரு சேவல்.

விட்டமின்!

பஸ் சாரதிகளுக்கு விட்டமின் மாத்திரைகள் இனமாக வழங்கப்படும்.

—செய்தி

—கடகட வொட வொட பஸ்களில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்கும் வழங்கினால் நல்லது என்கிறார் ஒரு பஸ் பிரயாணி.

ஈழத்தில் தனிப்பெரும் சாதனையை ஏற்படுத்தி ஈடு இணையற்று விளங்குவது

கல்கி பீடி



சிறந்தது, சிக்கனமானது சிந்தனையூட்டுவது

சோர்வு நீக்கி உற்சாகத்தை அளிப்பது
புகைக்க புகைக்க இன்பம் பயப்பது

786 கல்கி பீடிகளே

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்
சி. சின்னத்துரை அன் பிரதர்,
44, 3ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

தொழிற்சாலை: 79,79/1, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12.

# பதவியில் 18 மாதங்கள்

தேசிய அரசாங்கம் பதவியேற்று பதினெட்டு மாதங்கள் நகர்ந்து விட்டன. இந்த பாராளுமன்ற ஆயுட்காலத்தில் நாலில் ஒரு பகுதி காலம் கழிந்துவிட்டது. இக்காலகட்டத்துள் தேசிய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளையும், அதன் விளைவுகளையும் அசை போட்டுப் பார்ப்பது இன்றைய சூழ்நிலையில் பொருத்தமுடைத்தாகும்.

தேசிய அரசாங்கம் எழு கட்சிகளைக் கொண்ட ஒரு கூட்டரசாங்கமாகும். இங்கு எந்தத் தனியொரு கட்சியும் அதன் வேலைத் திட்டங்களை முழுதாக அமுல் நடாத்திவிட முடியாது. எழு கட்சிகளுக்கும் இயைவான ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே தேசிய அரசாங்கம் செயல்பட்டு வருகிறது.

## ஜனநாயகம்

தேசிய அரசாங்கக் கட்சிகள் அடிப்படை நோக்கத்தில் ஒருமைப்பாடு உடையன என்றும் கூறிவிட முடியாது அடிப்படை அரசியல் நோக்கில் வேறுபட்டிருப்பதுடன் மட்டுமல்லாது நாட்டின் அரசியல் அமைப்பில் தீவிர மாறுதல்களை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்குடைய கட்சிகளும் உள்ளன. என்றாலும் இக் கட்சிகள் அனைத்தும் இந் நாட்டில் ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டுமென்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையன. இந்த ஒரு இலட்சியமே இக் கட்சிகளை ஒன்றுபடுத்தியுள்ளது.

சுதந்திர— இடதுசாரிக் கட்சிகளின் கூட்டரசாங்கத்திடமிருந்து தேசிய அரசாங்கம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கையில் எதிர்காலம் பெரும் கேள்விக்குறியாகவே இருந்தது. இன, மத அடிப்படையில் மக்கள் பிளவுபட்டுக் கிடந்தனர். பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை குரோதக் கண்ணுடனும் சிறுபான்மையினர் பெரும்பான்மையினரைச் சந்தேகக் கண்ணுடனும் நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

## கஜனா காலி

நாட்டின் பொருளாதார நிலை என்றுமில்லாத அளவுக்கு படுமோசமாகப் படுகுழியில் வீழ்ந்து கிடந்தது. மக்களுக்கு வேண்டிய அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெறுவதற்கே போதிய பணம் இல்லை. நாட்டின் கஜனா காலியாகக் கிடந்தது. இந்தச் சூழ்நிலையில் தான் தேசிய அரசாங்கம் கோலோச்சும் அதிகாரத்தைப் பெற்றது.

அதிகார ஆசை ஒன்றை மட்டுமே கொண்டிருந்த முந்திய ஆட்சியாளர்கள் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சிறிதும் அக்கறை கொண்டிருக்கவில்லை. தேசிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் முதலில் மக்களின் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு வழி தேடும் முயற்சியில் ஈடுபட்

# தேசிய அரசின் சாதனைகள்

**க. செங்கதிர்ச்செல்வன்**

டது. அதேநேரத்தில் நாட்டின் நிர்வாக இயந்திரத்தையும் முழுதாக சீர் செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. உயர் தர அரசாங்க அதிகாரிகள் சிலர் சர்வாதிகாரிகளைப் போன்று பல அரசியல் அதிகாரங்களைக் கொண்டிருந்தனர். அத்தகையவர்களின் எல்லையற்ற அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி அவர்களைப் பொறுப்புள்ளவர்களாக மாற்றியமைக்க வேண்டியிருந்தது.

## வகுப்புவாதம்

இச்சந்தர்ப்பத்தில் ஆட்சி அதிகாரத்தை இழந்த எதிர்க்கட்சியினர் நாட்டில் வகுப்புவாதக் கூச்சலை எழுப்பினர். மீண்டும் ஒரு 1958ம் ஆண்டை நிலைவுப்படுத்தும் முறையில் இரத்தவெறிகொண்டு அலைந்தனர். அவர்களையும் சனநாயக வரம்புக்குள் நின்றுகட்டுப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

கோஷ்டி சேரக் கொள்கை என்று கூறிக் கொண்டு முந்திய ஆட்சியாளர் ஆடிய இரகசிய நாடகத்தின் பலனாக உலக நாடுகள் இலங்கையைச் சந்தேகக் கண்கொண்டுநோக்கின. அந் நிலையை மாற்றி உண்மையான நடுநிலை நாடு இலங்கை என்று உலக அரங்கில் நிரூபிக்க வேண்டிய பொறுப்பும் தேசிய அரசாங்கத்திடமிருந்தது. இத்தனைக்கும் பின்னரே தேசிய அரசாங்கம் ஆக்க பூர்வமான முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

முதல் அரை ஆண்டு காலமும் சீர் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த தேசிய அரசாங்கம் அக்கால கட்டத்துள் உருப்படியாக எதையும் அமுல் நடாத்தவோ, சாதிக்கவோ முடியாது போய்விட்டது. ஆறு மாத அரும் பணியின் பின்னர் - நிர்வாக இயந்திரம் ஓரளவு சீர் செய்யப்பட்ட பின்னர் - சில குறிப்பிடக் கூடிய சாதனைகளைத் தேசிய அரசு செய்திருக்கிறது. தனித்தனியே ஒவ்வொரு அமைச்சினையும் எடுத்து ஆராயப் புகின் அது நீண்டு விரிந்து விடும் என்ற காரணத்தில் சில குறிப்பிட்ட சாதனைகளை மட்டும் இங்கு பார்ப்போம்;

## புதிய முயற்சிகள்

தேசிய அரசாங்கம் புதிதாக உருவாக்கிய இராசாங்க அமைச்சு இந்நாட்டுக்கு வருவாயைத் தேடித் தரும் பணிகள் பலவற்றைச் செய்திருக்கிறது. குறிப்பாக உல்லாசப் பிரயாணிகளைப் பெருமளவில் கவர்ந்து அதன் மூலம் நாட்டின் அன்னிய செலாவணியைப் பெருக்கலாம் என்ற திட்டம் காலத்திற்கு ஏற்ற முயற்சியாகும். அதே போன்று மீன்பிடி கைத்தொழில் அமைச்சு மீன் பிடிக் கூட்டரவை உருவாக்கி அதன் மூலம் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யஎடுத்த முயற்சிகளும் பாராட்டுக்குரிய திட்டமாகும்.

மீன் பிடிக் கூட்டரவு இந் நாட்டில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக மீன் பிடித் துறைமுகங்களுடன் இயந்திர வள்ளங்கள் முதலிய வசதிகளையும் மீனவர்களுக்கு செய்து கொடுத்திருக்கிறது - கொடுத்து வருகிறது. அத்துடன் பொது மக்களுக்கு நியாய விலையில் மீன் கிடைக்கக் கூடிய முறையில் மீன்பிடி விற்பனவு நிலையங்களையும் ஆங்காங்கே நிறுவியுள்ளது.

உள்ளூராட்சி அமைச்சு அமைச்சின் நிர்வாக இயந்திர முறையையே பெருமளவில் மாற்றியமைத்துவிட்டது. உள்ளூராட்சி ஊழியர்களுக்குப் புதிதாக சில சலுகைகள் செய்யப்பட்டிருப்பதுடன், சாதாரண பொதுமக்களின் குறைகள் பல போக்கவும் புதிய சட்டங்களை ஆக்கியுள்ளது. ஒரே உள்ளூராட்சி மன்ற எல்லைக் கடப்பட்டவர்கள் வரி செலுத்துவதில் அவர்களின் வசதியை யொட்டி தொகையை நிர்ணயிப்பதற்குச்சட்டம் ஆக்கப்பட்டுள்ளது. இது ஒரு சிறந்த ஜனநாயக சோசலிசத்திட்டமாகும். உள்ளூராட்சி மன்றங்களுக்கான மானியம் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன் அம் மன்றங்கள் தனித்து நின்று சில ஆக்க பூர்வமான பணிகளை மேற்கொள்வதற்கும் சட்ட பூர்வமான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

## போராட்டம்

பல அத்தியாவசியப் பொருட்களை முந்திய அரசாங்க காலத்தில் கண்ணுற் காண்பதே உலக அதிசயங்களில் ஒன்றாக இருந்தது. இன்று மக்களுக்குத் தேவையான பல அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பழைய அரசாங்கம் விவசாயத்துறையை முற்றாகப் புறக்கணித்திருந்தது. இன்றைய அரசாங்கம் மீண்டும் விவசாயத்துறைக்குப் புத்துயிர் கொடுத்து வருகிறது. தேசிய அரசாங்கத்தின் திட்டம் உரிய பயனைக் கொடுத்தால் தொடர்ந்து ... உணவில் இலங்கை தன்னிறைவு பெற்ற நாடாகவும் மாறலாம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முந்திய நிலையுடன் நாட்டின் இன்றைய பொருளாதார நிலையை நாம் ஒப்பு நோக்குகையில் இன்றைய முன்னேற்றம் எந்தளவு உயர்ந்துள்ளது என்பது தெளிவாகும்,

உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக முந்திய அரசாங்கம் பிரச்சாரம் செய்து கொண்டதே அன்றி அதற்கான கிரியையில் இறங்கவில்லை. தேசிய அரசாங்கம் இந்நாட்டு முதலாளி வர்க்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் பகிரங்கமாகவே இறங்கியது. அதில் குறிப்பிடக்கூடியது ஜவுளி விலைக் கட்டுப்பாடாகும். நைலோன், டெறலின் புடவைகள் குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தினரின் உடையென்ற நிலையை மாற்றி, 'கனவுக்கன்னியாக' ஏழை நடுத்தர மக்களுக்கு இருந்த அப்புடவை வகைகளை இன்று சாதாரண மக்களும் குறைந்த விலையில் பெறக் கூடிய நிலையை ஏற்படுத்தியது தேசிய அரசாங்கம். ஜவுளி விலைக் கட்டுப்பாட்டை அமுல் நடத்தும் பொழுது தேசிய அரசாங்கம் இந்நாட்டு முதலாளி வர்க்கத்துடன் பகிரங்க போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டது.

## தமிழ் ஊழியர்

ஒரு தலைப்பட்சமாக முந்திய பிரதமர் திருமதி சிறிமாவோ இந்தியப் பிரதமருடன் செய்து கொண்ட உடன்படிக்கையிலுள்ள குறைகளை நீக்கி அதனை சனநாயக முறையில் அமுல் நடாத்த முன்வந்தது தேசிய அரசாங்கம். கட்டாய நடுகடத்தல் என்ற முந்திய அரசாங்கத்தின் கொள்கை அகற்றப்பட்டுவிட்டது.

தமிழ் அரசாங்க ஊழியர் விடயத்தில் பிரச்சினைகள் பல தீர்க்கப்படாதிருந்த போதிலும் பல சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதை நாம் மறுக்க முடியாது.

இரண்டு அமைச்சுக்களே பிரச்சினைக்குரியதாக இருக்கின்றன. ஒன்று வர்த்தக அமைச்சு, மற்றது கல்வி அமைச்சு. கல்வி அமைச்சின் நடவடிக்கைகள் சில சிறுபான்மையினரின் உணர்ச்சிகளைச் சோதிப்பதாக உள்ளது.

பத்து ஆண்டுகால ஒழுங்கற்ற ஒரு நிர்வாகத்தின் பின்னர் பதினெட்டு மாத எல்லைக்குள் நிர்வாகமுறையைச் சீர் செய்து இந்தளவு நடவடிக்கைகளைத் தேசிய அரசாங்கம் எடுத்திருப்பது நிச்சயம் பாராட்டுக்குரியது என்பதை எவரும் மறுக்க முடியாது.

# புதிய தொழிற் சங்கம்

தமிழ் தட்டெழுத்தாளர்களுக்கான புதிய மொழிவழித் தொழிற் சங்கம் ஒன்று அண்மையில் நிறுவப்பட்டுள்ளது. அதன் பதவியாளர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: செ. குமாரசுலிங்கம், துணைத்தலைவர்கள்: எம். எம். மக்கீன், சி. மதியாபரணம், பொதுச் செயலாளர்: நா. சண்முகலிங்கம், துணைச்செயலாளர்: செ. பாக்கியராசா, பொருளாளர்: ந. நடனசிகாமணி.

ஒன்பது பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. அதில் நால்வர் பெண்கள்.


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

(போலிகளை வாங்கி ஏமாறாதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடமிருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,

கொழும்பு-14

# சிங்கள ஊழியர்களுக்குத் தமிழ் வகுப்புகள்

## சங்கப் பலகை

### புது உலகம்

ஆசிரியர்: பசுபதி.
விலை: ரூபா 2. 25

வெளியீடு: எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் 94, 2/7 யோக்கட்டடம். யோக் வீதி, கொழும்பு.
விமர்சகர்: செம்பியன் செல்வன்

காலம் சென்ற 'யாழ்ப்பாணக் கவிராயர்' என்ற பசுபதியின் கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளனர். பசுபதி ஒரு குறிப்பிட்ட இயக்கத்துக்காக வாழ்ந்தவர்—பாடியவர். அவர் ஒரு school of writer என்கின்றமையால், அவரது சிந்தனை பூர்வமான ஆக்க விளைவுகள் அனைத்தும் அந்த இயக்கத்திலேயே ஆழமாக வேரூன்றியவை. ஆகவே:-

இந்நூலைப் படித்து முடிக்கும் போது மனிதகுலம் முழுவதற்கும் உரித்தான ஒரு கவிஞனைக் காணுவதற்குப் பதிலாக, ஒரு இயக்கத்தின் பிரச்சாரகனையே நம்மால் காண முடிகிறது. கவிதையின் குறை நிறைகளை ஆராயும் போது-அவை இயக்கத்தின் குறை நிறைகளாகவே அமைந்துவிடுகின்றன.

'புது உலகம்!' ஒரு கவிஞனின் புத்துலக வேட்கையை உலகப்பொதுவுடமை எதிர்நோக்கும் அவாவின் வெளியீடாக காட்சி தருகினும், அந்தப் புது உலகம் அமைப்பதற்குரிய சூழ்நிலைகளைக் கவி காட்டவில்லை. பாரதியும் தான் ஒரு சுதந்திர பாரத மாதாவை மட்டும் கற்பனையில் காணவில்லை. அந்த மாதாவின் அடிமைத் தளையை அறுக்க பல வழிகளையும் காட்டிக் கொடுத்தான்.

ஆனால் பசுபதியின் புது உலகம் வெறும் கற்பனை வாதமாக மின்னுகிறதே யன்றி, ஒரு ஆக்க பூர்வமான விளைவாகக் காணவில்லை. அத்துடன் நிகழ்கால சமுதாயத்தில் அவர் காண்கின்ற புது உலக அமைப்பு இல்லை என்று அவரால் எப்படிக் கூற முடியும்?

இன்று நாடு நமக்கே சொந்தம். சாதி சமய பூசல்கள் அருகிவருகின்றன. உழுபவனுக்கே நிலம் சொந்தமென அரசாங்கமும் நிலம் வழங்குகின்றது.—இவற்றை கவிஞர் ஏன் கற்பனையில் காணவேண்டும் என்று புரியவில்லை. ஆகவே,-கவிஞரின் நோக்கு இதற்கு மேலும் எதையோ எதிர்பார்க்கிறது. அது இயக்கத்தின் வளர்ச்சியையோ?...

'புரட்சி கீதம்,' 'புரட்சி வாழ்க!'—போன்ற கவிதைகளைப் படிக்கும் போது அவை மக்களின் நல்வாழ்வுக்காக எழுப்பப்பட்ட கீதமாக கேட்காது, ஜனநாயக ஆட்சிக்கு எதிராக எழுப்பப்பட்ட குரலாகவே கேட்கின்றது. அதேவேளையில் 'செங்கொடி பறக்கின்றது!' என்ற கீதமும் ஜனநாயகம் வேண்டாம், இன்னொரு குறிப்பிட்ட ஆட்சி வேண்டும் என்பதையே கூறுகிறது. அந்தச் செங்கொடி ஆட்சி எத்தகைய புதுமைகளைப் படைக்கும் என்பதனைப் பற்றிய விளக்கமும் இல்லை.

புரட்சி... புரட்சி... என்றும், செங்கொடி என்றும் பாடும் கவிஞர்— புரட்சியின் பின் என்ன வித நம்பிக்கை ஏற்படும் என்பதனைக் கூறவே இல்லை. அத்துடன் அவர் தாம் சொல்ல வந்த கருத்திலேயே தெளிவின்மை நிறைய உள்ளது என்பதனைப் பல பாடல்களில் காணலாம்.

'போரை நோக்கிப் புறப்படடா! ...ஜெகப்
புரட்சி வருகுது புறப்படடா'
பாரை ஆள்பவர் நாமன்றோ'...
படைத்துக் காத்தவர் நாமன்றோ!

—இதில் மக்களை ஒருவரை ஒருவர் வெட்டிப்புதைக்கவா கூறுகிறார். பாரை ஆளுகின்ற நாம்... யார் புரட்சிக்குப் போக வேண்டும்.

ஆகவே —, இதில் இருக்கின்ற முதல் மூன்று பகுதிகளில் தெளிவற்ற, அரசியல் பேசப்படுகின்றதால், இயற்கை பற்றிய பாடல்களில் காணப்படுகின்ற கவிஞனின் அரைகுறை உயிரும் சிதைந்து—தொகுப்பு ஒரு கட்சி அறிக்கை போல் காணப்படுகிறது.

---

வரப்பெற்றோம்

### மாணவ நேசன்

ஆசிரியர்கள்: த. தங்கவேல், தியாகமகார்க்கண்டு, து.தேவராஜா.
வெளியீடு: வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி—யாழ்ப்பாணம்

### இளம் பிறை
(இளைஞர் மலர்)

நிர்வாக ஆசிரியர்: எம். ஏ. ரஹ்மான்.
அலுவலகம்: 231, ஆதிருப்பள்ளித்தெரு கொழும்பு-13
விலை: சதம் 30.

### தாய் நாடு
(அண்ணா மலர்)

ஆசிரியர்: வேலணை நா. வீரசிங்கம்.
அலுவலகம்: 67, புதிய சோனகத்தெரு, கொழும்பு.
விலை: சதம் 50.
(மதிப்புரை வேண்டுவோர் ஒவ்வொரு புத்தகத்திலும் இரு பிரதிகள் அனுப்ப வேண்டும்.)

## கல்வி அமைச்சில் நடைபெறுகின்றன

### "எத்த தரும் தகவல்"

"கல்வி அமைச்சில் சிங்கள ஊழியர்களுக்கு தமிழ் போதிப்பதற்கான வகுப்புகள் இப்பொழுது வெற்றிகரமாக நடைபெறுகின்றன" என்று 'எத்த' (31-10-66) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

'ஏனைய அமைச்சுகளிலும், திணைக்களங்களிலும் தமிழ் வகுப்புகள் விரைவாக ஆரம்பிப்பதற்கு அங்கு பணியாற்றும் தமிழ் ஊழியர்கள் முயற்சிசெய்கின்றனர்.

கல்வி அமைச்சில் உதவிக் காரியதரிசிகளான திரு. ஏ. துரைசிங்கம், திரு. பாஸ்கரலிங்கம் ஆகியோர் அந்த அமைச்சில் தமிழ்வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு முன்னணியில் நின்று பாடுபட்டனர்;

திணைக்களத்தின் மொழிபெயர்ப்பாளரான திரு: மாணிக்கவாசகர் இந்தவகுப்புக்குப் பொறுப்பாக இருப்பார்.

கல்வி அமைச்சரும் இந்த வகுப்பு நடத்த அனுமதி வழங்கியிருக்கிறார்.

சிங்கள அதிகாரிகள் தமிழ் படிப்பதற்காக வேலை நேரத்தில் 2 மணிநேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. குமாஸ்தாக்கள் சுமார் 10 பேர் இப்பொழுது இந்த வகுப்புகளில் சேர்ந்து தமிழ் படிக்கின்றனர்' என்று 'எத்த' மேலும் எழுதியிருக்கிறது.

## சிங்கள இதழ்களில்...

### ஓர் இடைக்கால வரவு-செலவு திட்டம்

"கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதைப் போல, எதிர்பார்த்தபடி வெளிநாட்டு உதவி கிடைக்காததால், அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் மூன்று மாதங்கள் பூர்த்தியாக முன்பே வீழ்ச்சியடைந்துவிட்டது.

இடைக்கால வரவு—செலவுத் திட்டமொன்றினைச் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த வரவு—செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் பற்றிய அறிக்கையொன்றை நிதி மந்திரி மந்திரி சபைக்குச் சமர்ப்பித்து அங்கீகரித்திருப்பதாக அறியப்படுகிறது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை அடுத்த மாதம்வாக்கில் புதிய நிதி மந்திரி ஒருவர் சமர்ப்பிப்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது"

—எத்த (29-10-66)

### எல்லாம் சிங்களம்

அகில இலங்கை அரசாங்க சேவை லிப்பிகரு சங்கத்தின் கிளை ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் நேற்று நடத்தியஒரு விசேட கூட்டத்தில் எல்லா திணைக்களங்களிலும் 1967 ஜனவரி முதலாந் திகதிமுதல் சிங்களத்தில் மட்டும் அலுவல்களைச் செய்வதென்றும், தமிழ், ஆங்கிலக் கடிதங்கள் எல்லாவற்றையும்பகிஷ்கரிப்பதென்றும் தீர்மானித்தனர்.

### இனத்தின் பாவம்!

சவஸ (24-10-66) 'இனத்தின் பாவம்!' என்ற தலைப்பில் கீழ்க்காணும் தலையங்கத்தை எழுதியுள்ளது.

'அரசாங்கப் பண்டகசாலைத் திணைக்களத்தின் அலுவல்கள் இதுவரை சிங்களத்திலேயே நடைபெற்றன. அண்மையிலிருந்து இந்த அலுவலகங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடைபெறுகின்றன. இந்த மாறுதல் செய்வதற்கு யார் அதிகாரமளித்தது? ஏன்?

இந்தத் திணைக்களம் மட்டுமன்றி பல அரசாங்க அலுவலகங்களிலும் அரசகரும மொழி குற்றுயிராகியுள்ளது. இதுபற்றி விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்தின் பெரியவர்கள் முன்வராதிருப்பது இனத்தினதும், மொழியினதும் துரதிர்ஷ்டமாகும்'

### திணைக்களத்தில் தமிழரசு ஆதிக்கம்

'ஊழல்களின் இருப்பிடமென்று கூறப்படும் கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் ஏழுகூட்டு ஆட்சி' நிறுவப்பட்ட பின்னர் அத் தோல்விக்க—தமிழரசு ஆதிக்கம் ஏற்பட்டுள்ளது. சிங்கள-பௌத்த அதிகாரிகளை ஒதுக்கிவைத்து அவர்களுக்குப் பலவிதமான இன்னல்களை விளைவிக்கும் இத்திணைக்களத்தின் அதிபர் ஒரு தீவிர தமிழரசுவாதியாவார்!' இவ்வாறு 'திணைக்களத்துள் தமிழரசு' என்றதலைப்பில் 'எத்த' (31-10-66) வெளியிட்டுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.

### உதவி நிதி நிறுத்தம்

'சமூகசேவை அமைச்சால் நன்கொடை வழங்கப்பட்ட இரு சிங்களப் புத்தகங்கள் யாழ்ப்பாணத்தில் இரு ஸ்தாபனங்களுக்குச் சிங்களத்தில் முகவரி எழுதி அனுப்பப்பட்டன. அவற்றைத் திருப்பி அனுப்பி விட்டன அந்த ஸ்தாபனங்கள். ஆகவே அந்த ஸ்தாபனங்களுக்கு வழங்கும் நிதி உதவியை உடனடியாக நிறுத்தும்படி சமூகசேவா அமைச்சர் திரு. அசோக கருணாரத்ன தமது காரியதரிசிக்குக் கட்டளையிட்டார்' என்று தவஸ (31-10-66) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

'இவ்விரு ஸ்தாபனங்களுக்குப் நிதி உதவி அளித்தல் நேற்றிலிருந்து நிறுத்தப்பட்டு விட்டது'

'தனது அமைச்சில் உள்ள திணைக்களங்களில் நிர்வகிக்கப்படும் எந்த நிறுவனத்துக்கும் அரசகரும மொழியில் முகவரி எழுதி அனுப்பப்படும் கடிதங்கள் திருப்பி அனுப்பப்படுமாயின், அந்த நிறுவனத்துக்கு தமது அமைச்சால் வழங்கப்படும் எல்லாவித உதவிகளையும் நிறுத்தும்படி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்' என்று தவஸ மேலும் கூறுகிறது.

### பிரதமருக்கு ஒரு தண்டனையா

'பௌத்த சமயத்தைத் தழுவ வேண்டாமென்று தமிழர்களுக்குப் புத்திமதி சொல்லும் அமைச்சர் திருச்செல்வத்தைத் தனது மந்திரி சபையில் வைத்துக்கொள்ளும்வரை பிரதமர் திரு: டட்லி சேனநாயக்கா உட்பட ஏனைய பௌத்த அமைச்சர்களை பௌத்த விழாக்களுக்கோ பௌத்த ஆலயங்களுக்கோ அழைக்கக் கூடாதென்று நாட்டிலுள்ள எல்லா பௌத்த சங்கங்கள், ஸ்தாபனங்களிடம் கேட்டுக் கொள்வதற்காகச் சிறிலங்கா பௌத்த சம்மேளனம் ஏற்பாடு செய்து வருகிறது"

—ஜனதின (29-10-66)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூளைச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-1

# தீபாவளிக்குப் போதிய துணிமணிகள் விநியோகிக்க ஏற்பாடு செய்க!

## வர்த்தக மந்திரிக்கு இ.தொ.க.தலைவர் கடிதம்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு அதிக அளவு துணிகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்க உடன் ஒழுங்குகளை மேற்கொள்ளும் வண்ணம் வர்த்தக அமைச்சர் டாக்டர் பீரிஸ் அவர்கட்கு இ. தொ. கழகத் தலைவரும் சாவகச்சேரித் தொகுதிப் பிரதிநிதியுமான திரு. வ. ந. நவரத்தினம் கடிதம் எழுதியுள்ளார்.

அட்டனில் நடைபெற்ற இ. தொ. கழக நிர்வாக சபைக் கூட்டத்தைத் தொடர்ந்து இக் கடிதத்தை திரு. நவரத்தினம் அமைச்சருக்கு எழுதியுள்ளார். அக்கடிதத்தில் மேலும் அவர் கூறியிருப்பதாவது:

"தீபாவளி இந்துக்களின் முக்கிய தினங்களில் ஒன்றாகும் இந்நாளில் புத்தாடை அணிவது அனைவரதும் வழக்கமாகும். எதிர்வரும் 11-ம் திகதியன்று வரும் இந்நாளுக்கு வேண்டிய ஜவுளிகளை நாடு பூராவிலும் கிடைக்கக் கூடியதாகச் செய்யவும்.

"இப் பிரச்சினையையிட்டு நான் தலைமை தாங்கும் தொழிற்சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. கூட்ட முடிவில் இந்துக்களுக்குத் தேவையான சேலை, வேட்டி போன்ற ஜவுளி வகைகள் நாடு பூராவிலும் கிடைக்க வசதி செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பாக மலைநாட்டில் இவ்வகைகள் போதியளவு கிடைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

"இப்பெருநாளை யொட்டி ஜவுளிகளை எடுப்பவர்கள் அந்த ஆண்டுக்கே தேவையான துணிவகைகளை எடுத்து வைப்பதும் உண்டு. ஆகவே மலை நாட்டை பொறுத்தவரை கூடியளவு துணி வகைகள் கூப்பனுக்குக் கிடைக்கக் கூடியதாக ஒழுங்கு செய்யவும்."

## இலங்கை மாதே, எண்ணிப்பார்!

—'முகில் வண்ணன்'—

தலை விறைக்கக் கூடை தாங்கித் தளிர் கொய்து
காலை மாலையின்றி கஷ்டமும் நோக்காது
மலை முகட்டில் ஏறியிறங்கும் மங்கையெங்கள்
நிலையை எண்ணிப்பார் நீ இலங்கை மாதே!

கங்கை போல் ஓடியாடி காடெல்லாம் களனியாக்க
தங்கை தாய் தந்தை தனயருடன் நாங்கள்
அங்க மெலாம் வருந்திடவே அல்லலுற உழைக்கின்றோம்
எங்கள் நிலையை நீ எண்ணிப் பார் தாயே!

கலங்கிட மழையில் கடும் பனி குளிரிலும்
வளம்வரும் சூரியன் வாட்டிடும் ஒளியிலும்
நலந்தர நாங்கள் உழைத்திடும் விதத்தை
இலங்கை மாதேநீ எண்ணிப் பார்த்ததுண்டோ?

உழைத்தது போதுமென்றே ஊரைவிட்டுப் போகச் சொன்னாய்!
பிழையிது உன்செய்கைகண்டு பொங்கியே இயற்கைசிறும்!
மழையெனப் பொங்கும் கடலும் மாறிடும் காற்றும் புயலாய்!
விளைந்திடும் நிலத்தை யழித்து வேதனைகண்டு சிரிக்குமன்றோ!

நாட்டினில் செல்வம் கொழிக்க நலம்பெற நாமும்வாழ
வீட்டினில் மக்களெல்லாம் வேண்டியது பெற்றுமகிழ
திட்டிடு திட்டமொன்று தியார் தம்மைச் சாடி
சாட்டிடு உன் திறத்தை களிப்புடன் நாம் வாழ

## கேகாலை தமிழ் இலக்கிய மன்றம்

கேகாலை மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களை ஓர் அணியில் திரட்டி அவர்களிடையே தமிழுணர்வையும், தமிழ் இலக்கிய இரசனையையும் உருவாக்கும் நோக்குடன் தமிழ் இலக்கிய மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இம் மன்றத்தின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- எஸ். சுந்தரம் பிள்ளை பி. ஏ. உபதலைவர்:- எஸ். கந்தசாமி இணைச்செயலாளர்கள்:- ஜே.அந்தோனிப்பிள்ளை, சிவசாமி. பொருளாளர் பி. ஜே. அந்தோனி உதவிப்பொருளாளர்:- எம். சண்முகவேல். செயற்குழு உறுப்பினர்கள்:- திருவாளர்கள் பி. எம். கனகரத்தினம், எஸ். சிவசம்பு, எஸ். விஜயகாந்தன், எஸ். கணேசன், பி.பண்டாரம், வி. கந்தையா, எல். எஸ். வைரமுத்து, எம். எஸ். பெர்னன்டோ, எம். பவுல், ஏ. புஷ்பராஜேஸ்வரன், சி. செல்வநாயகம்.

## லேசி கோஷ்டிக்கு வெற்றி

கடந்த 21-9-66ல் பிட்டக்கந்தைகுருப்பைச் சேர்ந்த, சின்ன செல்வக்கந்தை தோட்ட பி.எம். லேசி கோஷ்டியினர் முக்கிய கைப்பந்தாட்டக் கோஷ்டியினரை தோற்கடித்து தங்கள் சாதனையை நிலைநாட்டினர்.

பி. எம். லேசிகோஷ்டியினருக்கும் வெட்டசியாய, கந்தேநுவர பணிய டிவிசன், மேல் டிவிசன், தமிழக் கொலை, மாத்தளை பொலிஸ் ஆகிய கோஷ்டியினருக்கும் நடந்த இந்த ஆட்டத்தில் பி. எம். கோஷ்டியினர் வெற்றி அடைந்தனர்.

அதே சமயத்தில் வத்தேகமத்தைச் சேர்ந்த செம்பியன் குழுவினரான உண்ணஸ்கிரிய கோஷ்டியினரை 15-4-15-7-15-0 ஆகிய புள்ளிகளால் பி. எம். லேசி கோஷ்டியினர் தோல்வி அடையச்செய்தனர்.

## நுவரெலியா தோட்டப்பாடசாலை ஆசிரியர் சங்கம்

இச்சங்கத்தின் கூட்டம் பீட்றூ தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியர் எஸ். செல்வரட்னம் தலைமையில் நடைபெற்றது.

அகில இலங்கைத் தோட்டப்பாடசாலை ஆசிரியர் சங்கக் காரியதரிசி திரு. கே. நித்தியானந்தன் தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதற்கு, தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைக்கண்டு ஏற்ற ஒழுங்குகள் செய்திருப்பதாகக் கூறினார்.

பின்பு தலைவர், காரியதரிசி முதலானோர் தற்போதைய தோட்டப்பாடசாலை ஆசிரியர்களின் நிலைமைகளை விளக்கிப்பேசினார்கள். புதுவருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. ஆசிரியர் எஸ் செல்வரட்ணம் தலைவராகவும், திரு. சே. பற்குணநாதன் காரியதரிசியாகவும், திரு. கே இரத்தினசபாபதி தனதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## தோட்டப் பிள்ளைகளுக்கும் இலவச பகல் உணவு வேண்டும்

இலங்கையில் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு பகல் உணவாக பணிசும் பாலும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால் தோட்டக்குழந்தைகளுக்கு மட்டும் இதில் ஏனோ விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஏன் இந்தப் பாரபட்சம்?

உணவு அளிக்கும் விஷயத்தில் தோட்டக் குழந்தைகளுக்குப் பாரபட்சம் காட்டுவது பாவம் என்பது ஒருபுறமிருக்க மன்னிக்க முடியாத குற்றமுமாகும். சிறுவர்களின் நலன்களைப் பேணிக்காப்பதற்காக 'சிறுவர் வாரம்' கொண்டாடும் இந்நாளிலே தோட்ட சிறார்களை மட்டும் பாரபட்சமாக நடத்துவது அநீதியாகும்.

தோட்டத் தொழிலாளர்கள் அனைவருமே— நூற்றுக்கு நூறு பரம ஏழைகளாகும். உழைப்புக்குத் தகுந்த ஊதியம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை, அரை வயிறு கால் வயிறு என போசாக்கற்ற உணவையே அவர்கள் உண்ண முடிகிறது. ஆனால் மாடுபோல உழைக்க வேண்டும். அவ்வாறு உழைப்பதற்கு போதிய ஊட்டம் உடலுக்கு வேண்டாமா? அது தான் கிடைப்பதில்லை தோட்டத்தொழிலாளர்களுக்கு.

ஆகவே அவர்கள் அன்று முதல் இன்றுவரை உழைத்து உழைத்து ஓடாகிக்கொண்டிருக்கின்றனர். இத்தகைய ஒரு ஏழ்மை நிலையிலுள்ள அவர்கள் தங்களின் குழந்தைகளுக்கு போசாக்குள்ள உணவுவகைகளை எப்படித் தேடிக்கொடுப்பது? இதனால் அந்தக் குழந்தைகளின் வளர்ச்சிகுன்றி திடகாத்திரமற்றவர்களாகி விடுகின்றனர். இதுதான் தோட்டச் சிறார்களின் இன்றையப் பரிதாப நிலை. எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கும் அவர்களைப் பார்த்தாலே இந்த உண்மை விளங்கும்.

ஏனைய பாடசாலைப்பிள்ளைகளுக்குக் கொடுப்பதைப் போல தோட்டப் பிள்ளைகளுக்கும் பணிசும் பாலும் வழங்கினாலென்ன? ஏனைய பிள்ளைகளுக்கு மாவு கொடுத்துதவும் 'கெயார்' ஸ்தாபனம் தோட்டப் பிள்ளைகளுக்கு மட்டும்) அதனைக் கொடுக்க மறுத்து விடுமா?

தோட்டச் சிறார்களுக்கு இலவசமாக பகல் உணவு அளிக்கப்பட்டால், அது அக்குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும் கல்வி முன்னேற்றத்துக்கும் ஏதுவாக இருப்பது மட்டுமன்றி, பெற்றோருக்கும் ஒரு பேருதவியாகவும் ஆறுதலாகவும் இருக்குமே!

கல்வி விஷயத்திற்தான் தோட்டப் பிள்ளைகளுக்குப் பாரபட்சம் காட்டப்படுகிறது. உணவு விஷயத்திலுமா அந்தப் பாரபட்சத்தைக் காட்ட வேண்டும்?

இது சம்பந்தமாக கல்வி இலாகா உடனடியாக நடவடிக்கை எடுத்து, கெயார் ஸ்தாபனத்தையும் அணுகி, தோட்டப் பிள்ளைகளுக்கு இலவச பகல் போசனமளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தேசிய அரசாங்கம் இதில் பாராமுகமாக நடக்கக் கூடாது.

## மலையகத்தில் கலைமகள் விழா

கடந்த 22-10-66. மாலை 7மணிக்கு அட்டனைச் சேர்ந்த அஸ்பர் தோட்டத்து பாரதி மன்றத்தினரால் கலைமகள் விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தேவாரம், திருவாசகம் மனனப் போட்டிகள் நடைபெற்றன. சமய சம்பந்தப்பட்ட பேச்சுப்போட்டிகளும் இடம் பெற்றன.

விழாவிற்கு தலைமை தாங்கிய மன்றத்தின் தலைவர் திரு.ப. நந்தகோபால் கலைமகளின் சிறப்பினையும், கலைமகள் விழா எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் அங்கு குழுமியிருந்த சுமார் 501க்கு மேற்பட்ட மக்களுக்கு அழகாக விளக்கிக்கூறினார்.

நவராத்திரியில் கலைமகளின் மகிமை என்னும் பொருள்பற்றிதிரு.எஸ்.ஆர். ஜெபமாலை உரை நிகழ்த்தினார். மன்றத்தினரின் தேவாரப்பாட்டுடன் கூட்டம் முடிவுற்றது.

வெற்றி பெற்றவர்களுக்கு மன்றத்தின் தலைவர் பரிசு வழங்கினார்.

## புற்று நோய்க்கு புதிய சிகிச்சை

நியூட்ரோன் அணுத்துகள்களை உற்பத்தி செய்யக்கூடிய மின்குழாய் ஒன்றை உருவாக்குவதில் பிரிட்டிஷ் வைத்திய விஞ்ஞானிகள் இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டுவருகிறார்கள். புற்று நோய்களுக்கான சிகிச்சை துறையில் இது புதிய திருப்பத்தை ஏற்படுத்தி விடலாமென நம்பப்படுகிறது.

பிரிட்டிஷ்எலெக்ட்ரோனிக் ஆய்வு கூடத்தில் நடாத்தப்பட்ட பூர்வாங்கப் பரீட்சைகளிலிருந்து, புற்று நோய்களுக்கு 'எக்ஸ்ரே' மூலம் அளிக்கப்படும் சிகிச்சைகளைவிட இது மிக சக்திவாய்ந்ததாய் விளங்குமென்பது ஊர்ஜிதமாகியுள்ளது.

## பத்திரிகையாளர் காங்கிரஸ்

இம்மாதம் பேர்லினில் நடைபெற்ற சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனத்தின் 6வது காங்கிரஸில் 69 நாடுகளைச் சேர்ந்த 138 பிரதிநிதிகளும் 287 பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டனர்.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் பிரதமர் திரு. விலி ஸ்டொப்பும் காங்கிரசில் பேசினார்.




மலச்சிக்கல் மற்றும் அஜீரணக்கோளாறுகளுக்கு

ரிஷிலேகியம்

66 வருடங்களாகப் புகழ் பெற்றதும் வைத்திய பரம்பரை ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் அவர்களால் தயாரிக்கப்பட்டதுமான அபூர்வ சஞ்சீவி.

ரிஷி லேகியம் நாள்தோறும் மலத்தை ஒழுங்காக வெளியேற்றி, கைகால் அசதி, கை கால் கணுக்களில் வலி, தேககாங்கை, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வாய்வு, வாதம், தேகமெலிவு, பசியின்மை, கண் எரிச்சல், நெஞ்செரிவு, வாய்ப்புண், சோம்பல், சூதக சிக்கல், உள்மூலம், வெளிமூலம், இரத்த சிற்மூலம் முதலிய வியாதிகளை அதிவிரைவாக குணப்படுத்துகிறது. ஆப்ரேசனின்றி மூலவியாதியை குணப்படுத்த விரும்புவோர் ரிஷி லேகியம் சாப்பிட்டால் உடன் பலனடைவர். கர்ப்பிணிகளும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை.

15 நாள் மருந்து ரூ. 3-50
30 நாள் மருந்து ரூ. 6-50

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு.

# அன்னிய ஆஸ்தியை அள்ளிக் கொடுக்கும் முத்துவளம்

கடலிலிருந்து பெறப்படும் செல்வங்களில் முத்தும் ஒன்று. சரித்திரகாலந் தொட்டு இலங்கையின் முத்துக்களுக்கு மிகுந்த கிராக்கி இருந்து வந்திருக்கிறது. நமது நாட்டை மீண்டும் முத்துவளம் கொழிக்கும் நாடாக மாற்ற, முத்துக் குளிப்புத் தொழிலுக்கு அரசாங்கம் ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். பண்டைய முத்துக் குளிப்பு முறைகளுக்கு பதிலாக விஞ்ஞான ரீதியான நவீன முறைகளைக் கையாண்டால் முத்து 'அறுவடையை' பன்மடங்கு பெருக்க முடியும். இதனால் நமது வெளிநாட்டு ஆஸ்தியைப் பெருமளவு பெருக்குவதற்கு இடம் கிடைக்கும்.

'முத்தக்கள் தலைமறைவாக மறைந்துள்ள நாடு இலங்கை' என்று நம்முடைய நாட்டைப் புகழ்ந்தான் எட்வின் ஆர்னோல்ட் என்ற கவிஞன் தனது 'ஆசிய ஜோதி' என்ற கவிதையில். வரலாற்றுக் கெட்டாத காலந்தொட்டு இலங்கையின் முத்துக்களுக்கு உலகில் தனியிடம் கிடைத்து வந்திருக்கிறது. மேற்கு நாட்டு இளவரசிகள் பலர், நம்முடைய முத்துக்களை வாங்குவதற்குத் தங்கள் செல்வம் அத்தனையுமே கொட்டிக்கொடுக்கவும் காத்திருந்தார்கள். அந்த அளவுக்கு, ஈழநாட்டு முத்துக்கள் பெயர்பெற்றிருந்தன. இந்நாட்டு முத்துக்கள் கலப்பற்ற மிகச்சுத்தமான முத்துக்களாகும்.

ஆதிகாலத்தில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களில் முத்துக்கள் முக்கியத்துவம் பெற்றவையாக திகழ்ந்தன. மன்னார்க் கடற்கரையோரம் முத்துக் குளிப்பதில், 3000 ஆண்டுகளுக்கு மேலாக, பிரசித்தி பெற்று விளங்கியதுடன், முன்னணியிலும் நின்றது.

மன்னார்ப்பகுதியில் முத்துக்குளிக்கும் இடங்கள், கடலிலிருந்து 20 மைல் தள்ளி, 24 அடியிலிருந்து 60 அடி ஆழமானதாக இருக்கின்றன.

## 'இரட்சா பந்தனம்'

அன்றும் சரி, இன்றும் சரி, சுழியோடி முத்துக் குளிக்கும் தொழிலாளி ஒருவன், சுறுமீன்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள தகுந்த ஏற்பாடுகளின்றி கடலில் இறங்க மாட்டான் என்றும் சுறுமீன்களின் பயங்கரத் தாக்குதல்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மந்திரம் ஓதப்பட்ட ஒரு 'இரட்சாபந்தனத்தை' அணிந்து கொள்ளுவான் என்றும் இந்த இரட்சாபந்தனம் ஒரு நாளைக்கு மட்டுமே பலன் செய்யும் என்றும் எனவே புதியதாக ஒவ்வொரு நாளும் 'இரட்சாபந்தனங்கள்' அணிவான் என்றும் பல கதைகள் கூறப்படுவதுண்டு.

## சிந்தாபாத் கதையில்...

மிகப்பழைய காலத்தில் எழுந்த எழுத்தோவியங்கள் பலவற்றில் இலங்கையின் முத்துக்கள் புகழப்பட்டுள்ளன. அரேபியாவிலிருந்து ஆசியநாடுகளுக்கு வியாபார நோக்கமாக வந்தவர்கள் தங்கள் நாட்டுக்குத் திரும்பியபின், இந்த அதிசயத்தீவைச் சுற்றியுள்ள கடலில் முத்துக்கள் குவிந்து கிடப்பதைப் பற்றிப் பல கதைகளையும், மர்மங்களையும், அங்குள்ள கதை எழுதுபவர்களுக்கு விளக்கிக் கூறியிருக்கிறார்கள். சிந்த்பாத்தின் கதையில் குறிப்பிடப்படும், முத்து விளையும் நிலம் புராதன ஈழமாகத் தானிருக்க வேண்டுமென்று வரலாற்றுநூலாசிரியர்கள் கருதுகிறார்கள்.

பிளினி என்னும் எழுத்தாளர், தமது நூல்களில் இலங்கை முத்துக்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவுக்குப் பின் 45ம் ஆண்டளவில் இலங்கை அரசன் ரோமாபுரிச் சக்கரவர்த்தியான குளோடியசுக்கு இலங்கை முத்துக்களைப் பரிசாக அனுப்பி வைத்திருக்கிறான்.

## தமிழரிடம் முத்துககுவியல்

எதிரிசி என்னும் அரேபியக் கல்விமான் கிறிஸ்துவுக்குப் பின் 12ம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். அவர் எழுதிய 'கிழக்கத்திய நிலவியல்' என்ற நூலில் நம் நாட்டு முத்துக்களை வெகுவாக வர்ணித்திருக்கிறார்.

இபன் பட்டுட்டா என்ற அரேபிய யாத்திரீகர் கி. பி. 1344ம் ஆண்டளவில் புத்தளத்தில் வந்திறங்கினார். சிவனொளிபாத மலைக்கு யாத்திரை செய்வதற்காகவே அவர் இங்கு வந்திருந்தார். ஒரு தமிழ் தலைமைக்காரரின் உதவியும், பாதுகாப்பும் அவருக்குக் கிடைத்தது. இந்த தமிழ் தலைமைக்காரர், தன்னிடமுள்ள முத்துக்குவியலை யாத்திரீகரிடம் காட்டினார் என்றும், அந்த முத்துக்குவியல் தன்னை மிகவும் கவர்ந்து விட்டதாகவும், அந்தத் தமிழர் தனக்குச் சில முத்துக்களைப் பரிசளித்ததாகவும் இபன் பட்டுட்டா தன்னுடைய நூலில் எழுதியுள்ளார்.

மிகப்பழைய காலத்தில் சீனர்கள், நமது முத்துக்களை வாங்குவதற்கு இலங்கைக்கு வந்துள்ளனர். கி. பி. 412ல் பாகியன் இலங்கைக்கு யாத்திரை செய்தகாலத்திலேயே நமது முத்துச் சுரங்கத்தைப் பற்றியும் இரத்தினக் கற்களையும் சீனர்கள் அறிந்து விட்டனர்.

## முத்துக்கு முஸ்லிம்கள்

அக்காலத்தில் இலங்கையின் முத்து ஏற்றுமதி முஸ்லிம்களின் கையில் இருந்தது. ஏனைய மக்கள் வியாபாரத்தில் அக்காலத்தில் அதிக அக்கறை காட்டவில்லை. 15-ம் நூற்றுண்டின் துவக்கத்தில் போர்த்துக்கீசர் இந்நாட்டில் புகுந்த நேரத்தில் கடலோரத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் செல்வந்தர்களாகவும் செல்வாக்குள்ளவர்களாகவும் வாழ்ந்தமைக்கு, அவர்கள் ஈடுபட்டிருந்த முத்து ஏற்றுமதி வியாபாரமே முக்கிய காரணம் எனலாம்.

கி. பி. 1923ல் இலங்கைக்கு வந்த மார்க்கோபோலோவையும், முத்துக் குளித்தல் கவர்ந்திருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. இலங்கையில் சுழியோடி முத்துக் குளிக்கும் முறைகளை தனது நூலில் வர்ணிக்கிறான் போலோ.

## அரச குடும்பச் சொத்து

இந்தக் கடல் அறுவடையில் அதே முறைகள் தான் அநேகமாக இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. முத்துக் குளிப்பவர்கள் உயிரைத் திரணமாக மதித்து, இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். அதனால் தான் போலும் டெனன்ட் என்னும் வரலாற்று நூலாசிரியர் முத்துக்குளிப்பவர்களைக் 'குறுகிய காலம் வாழ்பவர்கள்' என்று குறிப்பிடுகிறார்.

இங்கிலாந்து நாட்டை ஆண்ட முதலாவது எலிசபெத் அரசியார், தனது கூந்தலில் முத்துக்களை வைத்து அலங்காரம் பண்ணியிருந்தார். அவரது அரண்மனை உடையில் 'கண்ணீர்துளி' போன்ற சிறிய முத்துக்கள் பொருத்தப்பட்டிருந்தன.

அவரது பரம்பரையில் வந்த தற்போதைய மகாராணி எப்பொழுதாவது அருமையாகத்தான் முத்துமாலை இன்றிக் காணப்படுவார். அன்னை எலிசபெத் அரசி முதல், பிரிட்டிஷ் அரச குடும்பத்துப் பெண்கள் எல்லோரும், முத்துமாலை அணிவதையே அதிகம் விரும்புகிறார்கள்.

## மாறாத 'பாஷன்'

உலகிலே மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவரான பரோடாவின் முன்னாள் மகாராணியான சீதாதேவி, முத்துக்களைக் கொண்டு பல விதமான ஆபரணங்களைச் செய்து வைத்திருக்கிறார். அவரது தோடுகளில் இரு பெரிய முத்துக்களைப் பதித்திருக்கிறார்.

உடையில் நிமிஷத்துக்கு நிமிஷம் 'பாஷன்' மாறுவது போல, நகையிலும் 'பாஷன்'கள் காலங்கள் தோறும் மாறி மாறித்தான் வந்தன. ஆனால், முத்துமாலை அணியும் வழக்கம் மட்டும் நீண்ட நெடுங்காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது.

## கறுப்பு முத்துக்கள்

கடல் முத்து மட்டுமின்றி ஆறுகளிலிருந்து எடுக்கப்படும் முத்துக்களும் உண்டு. ஐரோப்பாவின் பல பகுதிகளிலும், யப்பானிலும் ஆறுகளில் இந்த முத்துக்கள் காணப்படுகின்றன.

முத்துக்கள் சாதாரணமாக பால் போன்ற நிறமுள்ளவை. ஆனால், இயற்கையிலேயே இளஞ்சிகப்பு, கருப்பு போன்ற நிறங்களிலும் முத்துக்கள் உள்ளன. கறுப்பு முத்துக்கள் மிகவும் அருமையானவை. மிகவும் விலை உயர்ந்தவை; மெக்ஸிகோ குடாக்கடலில் கறப்புமுத்து அதிகம் காணப்படுகிறது.

செயற்கை முத்துக்களும் இப்பொழுது மிகவும் பிரசித்தியடைந்து வருகின்றன. வெள்ளை, இளஞ்சிகப்பு கறுப்பு ஆகிய நிறங்களில் செயற்கை முத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. இவை

(14-ம் பக்கம் பார்க்க)

# ஞாபக மறதியா? கவலை வேண்டாம்

"வரவர ஞாபக மறதி அதிகமாகி வருகிறது. என்ன செய்வது என்றே தெரியவில்லை" என்று சலித்துக் கொள்ளுகிறீர்களா? அப்படி இருக்கவில்லை உங்களுக்கு இருந்தால் அந்தக் கவலையை உடனே விட்டொழியுங்கள்!

பரீட்சை மண்டபத்திலே இருந்துகொண்டு, 'சே, எத்தனைமுறை படித்தாலும் ஞாபகம் வருகிறதில்லையே, இந்தக் கேள்விக்கு உரிய விடையை இன்று காலையில்கூட படித்தேனே' என்று மனம் வெதும்பித், கையை வகையைப் பிசையும் மாணவர்களே! உங்களுக்கும் இந்தக் கவலை இனித் தேவையில்லை.

எத்தனைமுறை சொல்லிக் கொடுத்தாலும், மறந்து விடுகிறதே, 'ஓட்டைக் குடத்தால் ஒழுகவிடுகிறதே' என்று ...ங்கள் பிள்ளைகளை நீங்கள் வைது கொள்ள வேண்டியதில்லை.

## அதியற்புத ஔடதம்

அமெரிக்க விஞ்ஞானிகள் உங்கள் பிரச்சினைக்கு முடிவு கட்டும் ஆராய்ச்சியில் இப்பொழுது இறங்கியிருக்கிறார்கள். எந்த ஒரு பிள்ளையையும், கல்வி ஆர்வமுள்ள பிள்ளையாக மாற்றும் ஒரு அதி அற்புத ஔடதத்தைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் அவர்கள் முனைந்திருக்கிறார்கள். வாயில் போட்டு மென்று விழுங்கக்கூடிய சிறிய அளவிலான மாத்திரையாக இந்த ஞாபக சக்தி மாத்திரை இருக்கிறது.

இந்த மாத்திரை ஒரு குழந்தைக்கு அழியாதஞாபக சக்தியைக் கொடுக்கிறது. இந்த மாத்திரையை பாவிப்பதன் மூலம், பாடசாலையில் படிப்பிக்கும் நூல்களை பாடம் செய்து, பரீட்சைகளில் சுலபமாகசித்தியடையும் வாய்ப்பை ஒரு பிள்ளை அடைய முடியும்.

பல்கலைக் கழகத்தில் படிக்கும் வைத்திய மாணவர்கள் இந்தப் புதிய மாத்திரை தங்கள் ஞாபகசக்தியை அதிகரிக்கச் செய்கிறதா என்பதை அறியும் ஆராய்ச்சியில் இறங்கியுள்ளனர்.

## பிரச்சினைக்குரிய கண்டுபிடிப்பு

எதிர்வரும் ஆண்டுகளில் இந்த மருந்து ஒரு பிரச்சினைக்குரிய கண்டுபிடிப்பாக மாறிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனெனில் கல்வி கற்றலை இந்த மாத்திரை இலகுவாக்கிவிட்டால், சாதாரண வகுப்பறைப் படிப்புக்கள், மறந்துவிட நேரிடுமல்லவா?

அமெரிக்காவின் பல பல்கலைக்கழகங்களில் நடைபெற்றுவரும் இந்த அறிவியல் ஆராய்ச்சியின் வெற்றி தொடர்ந்தால்' இன்னும் 'சில காலத்தில் இந்தப் புதிய மாத்திரை, உலகெங்கும் விற்பனைக்கு வந்துவிடும்.

இந்தப் புதிய ஞாபக சக்தி மாத்திரைக்கு 'சில்லேட்' (Cylert) என்று வர்த்தகப் பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

## உபயோகம் என்ன?

'வயது அதிகரிக்க அதிகரிக்க மக்களுக்கு வேகமாக ஏற்படும் ஞாபகசக்திக் குறைவை, இந்த மாத்திரை சிறிது கட்டுப்படுத்தும். மனநோய் உள்ளவர்களுக்கும் இந்த மாத்திரை உதவி புரியும்.

தொழில் செய்வோர், தொழில்களுக்கு செல்லும்போது, தங்கள் ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்ய இந்த மாத்திரையை உபயோகிக்கலாம்.

பிறமொழிகளை வெகு விரைவில் சுலபமாக படித்துக்கொள்ளலாம்.

பல்கலைக்கழக மாணவர்கள், கடினமான சோதனைகள் எடுக்குமுன்பு தாங்கள் படித்த உண்மைகளை நினைவு படுத்திக்கொள்ள இந்த மாத்திரையை உபயோகிக்கலாம்.

## எப்படி வேலைசெய்கிறது

'சில்லேட்' எப்படிதனது வேலையை செய்கிறது? சங்கிலித் தொடர்போன்ற ஒரு சக்தியான விளைவை மூளையில் ஏற்படுத்துகிறது. இதனால் மூளையின் பலம் அதிகரிக்கிறது. மூளைக்கு அவசியம் தேவையான 'றைபோநியூக்ளிக் அமில' உற்பத்தியை அதிகரிக்கச் செய்கிறது.

ஆனால் இறுதியாக ஒன்று: கொடுத்த கடனை கடன் கொடுத்தவன் திருப்பிக் கேட்கும்போது சிலருக்கு ஏற்படுகிறதே ஞாபக மறதி, அதைமட்டும் இந்த மருந்தினால் மாற்றிவிட முடியாது.

# சுதந்திரன்

SUTANTIRAN

1966 நவம்பர் மாதம் 4-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183


## முளையிலே கிள்ளியெறிக!

வகுப்புவாத நஞ்சு இலங்கை அரசியலிலே கலந்து 10 ஆண்டுகளாகிவிட்டன. 1956க்குப் பின்னர் பெரும்பான்மையோரின் பிரதிநிதிகள் பலர் வகுப்புவாதக் கொள்கையைக் கையாண்டதால் ஈழத்தின் புனித அரசியற் காற்று நச்சுத் தன்மையைப் பெறறது. எந்த நாட்டிலும் பெரும்பான்மையோரின் வகுப்புவாதம் மிக பயங்கரமானதாகவே இருக்கும். இந்நாட்டிலும் அதே நிலைமைதான்.

இங்கு தோன்றிய வகுப்புவாதம் முற்றிலும் இனத்துவேஷமாகும். தமிழ்பேசும் இனத்தின்மீது பெரும்பான்மை இனத்தை ஏவினர், இரு இனங்களையும் மோதவிட்டு அரசியல் ஆதாயம் பெற எண்ணிய தலைவர்கள் இவ்வாறு ஈராண்டுகளாக இனத்துவேஷம் படிப்படியாக வளர்க்கப்பட்டு 1958ல் உச்சநிலையடைந்து, ஒரு பயங்கர இனக்கலவரத்தில் முடிந்தது.

இனக்கலவரம் ஏற்படும்போது அதனால் பெரிதும்பாதிக்கப்படுபவர்கள் சிறுபான்மையோரே. அவர்கள் மத்தியிற்தான் அதிகமான உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்படும். அதுதான் நிகழ்ந்தது 1958ம் வருட இனக்கலவரத்தின் போதும்.

திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்திலும் வகுப்புவாதம் உரமிட்டு வளர்க்கப்பட்டது தெரிந்ததே.

ஆனால் 1965ல் தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் நிலைமையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்தது. வகுப்புவாதத்தை ஒழித்து, இரு இனங்களிடையே ஒற்றுமை உணர்ச்சியை வளர்த்து, தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதில அரசாங்கம்தீவிரமாகமுனைந்தது.

இன ஒற்றுமை ஏற்பட்டால், தங்களின் கையிலிருக்கும் அரசியல் ஆயுதமான வகுப்புவாதத்தின் கூரிய முனைமழுங்கிவிடுமோ என்று அஞ்சி நடுங்கினர் சிங்கள வகுப்புவாத அரசியல் வாதிகள். ஆகவே அவர்கள் தேசிய அரசாங்கத்தின் தேசிய ஐக்கியத்தை உருவாக்கும் முயற்சியை எதிர்த்தனர். அந்த முயற்சியை முறியடிப்பதற்காக மீண்டும் இனவெறிக் கூத்தாடமிட்டனர். இந்த வெறி படிப்படியாக வளர்ந்து, கடந்த ஜனவரி 8-ந் திகதி நிகழ்ந்த சம்பவத்துடன் தற்காலிகமாகப் பின் வாங்கியது.

கடந்த இடைத் தேர்தலின்போது மீண்டும்இனத்துவேஷம் தூண்டிவிடப்பட்டது. எனினும் இன்றைய சிங்கள வாக்காளர்கள் வகுப்புவாத உணர்ச்சிக்குப் பலியாகும் எண்ணங்கொண்டவர்களல்ல என்பதை இடைத்தேர்தலில் அவர்கள் வாக்களித்த முறை எடுத்துக்காட்டியது.

அவர்கள் தொழிலாளர் முனையிலும், பொருளாதார முனையிலும் விட்ட குறை தொட்ட குறைகளுக்காக ஐ. தே. கட்சியை எதிர்த்துவாக்களித்தார்களேயன்றி, சுதந்திரக்கட்சியின் தலைவர்கள் தூபம் போட்டு ஆடவைத்த வகுப்புவாதப் பேயிக்காக வாக்களிக்கவில்லை.

ஆயினும், அந்தப் பேய் இன்று ஆடத் தொடங்கிவிட்டது. பழைய மொழி வெறியர்களும் இன வெறியர்களும் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கிவிட்டனர். மாண்டு மடிந்த வகுப்புவாத ஸ்தாபனங்கள் புத்துயிர் பெற்று நடமாடத் தொடங்கிவிட்டன. ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஒரு மொழிவெறி ஊர்வலம் கொழும்பிலிருந்து அனுராதபுரம் செல்லவிருக்கிறது. சிங்கள மொழியைப் பாதுகாப்பதாக அங்கு சத்தியப்பிரதிக்ஞை செய்தபின்னர், இந்தஊர்வலத்தினர்கிராமம் கிராமமாகச் சென்று பிரசாரம்செய்யவிருக்கின்றனராம். சாதாரணசிங்கள மக்களிடையே மொழி வெறியையும் இன வெறியையும் தூண்டிவிடும் இந்த முயற்சியின் விளைவு எவ்வளவு பயங்கரமாக இருக்குமென்பதை நாம் விளக்கிக் கூறவேண்டியதில்லை.

1956-ம் ஆண்டு தேர்தல் சமயத்தில் சிங்கள மக்களிடையே வகுப்புத் துவேஷத்தை வளர்ப்பதில் முன்னணியில் நின்ற "பாஷா பெரமுன" என்ற ஸ்தாபனம் பின்னர் மாண்டுபோயிற்று. இப்பொழுது அது புத்துயிர் பெற்று எழுந்துவந்து, ஒரு பெரிய மொழிவெறி ஊர்வலத்தையே நடத்துகிறது.

நாட்டிலே துவேஷ உணர்ச்சியை இந்தஊர்வலம் தூண்டிவிடும் என்பதில் ஐயமில்லை நாட்டிலே இன ஐக்கியத்தைக் கட்டியெழுப்பும் இச்சந்தர்ப்பத்திலே இத்தகைய ஊர்வலங்களை அனுமதிப்பது அறிவுடைமையாகாது.

அடுத்த ஜனவரி முதலாந் திகதி முதல் அரசாங்கத் திணைக்களங்களில் அலுவல்களைச் சிங்களத்திலேயே நடத்துவதென்றும், தமிழ், ஆங்கிலக் கடிதங்களைப் பதிஷ்கரிப்பதென்றும் சில இலங்கை அரசாங்க லிகிதர் சங்கம் தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

இது தெல்லைத் தடுத்து அரசகரும மொழியை அமுல் நடத்த முயல்கின்றனர். அரசாங்க அலுவல்களில் தமிழ் மொழியை உபயோகிப்பதற்கான முயற்சியை நசுக்க வேண்டுமென்பதற்காகவே இந்த ஏற்பாடு. இந்த நடவடிக்கை அரசாங்க திணைக்களங்களில் வகுப்புவாத உணர்ச்சி மீண்டும் தலைவிரித்தாடுவதற்கு வழிவகுக்கும் செயலாகும்.

இவ்வாறு பல்வேறு உருவங்களுடன் வகுப்புவாத நடவடிக்கைகள் உருவாகிவருவதை அவதானித்தால், இந்நாட்டிலே படிப்படியாக ஓர் இனக்கலவரத்தைத் தூண்டிவிட வழிகோலப்படுகிறதென்றே கூறலாம்.

ஆதலின் தேசிய அரசாங்கம் வெள்ளம் வந்த பின்னர் அணைபோட முயற்சி செய்யாமல், வகுப்புவாதப் பிசாசை முளையிலேயே கிள்ளியெறிய ஆவன செய்யுமாறு வற்புறுத்துகின்றோம்.

# வர்த்தக ஊழியர் வேலை நிறுத்தம்

## தலைமைப் பீடத்தின் ஓர் அவசர முயற்சி

வேலை நிறுத்த வியாதி மீண்டும் பரவத் தொடங்கிவிட்டது. வர்த்தக ஊழியர் சங்கத்தினரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். முதலாளிமார் சம்மேளனத்துடன் கூட்டு ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட நெருக்கடியே வேலை நிறுத்தத்திற்குக் காரணமாகும்.

வேலை நிறுத்தம் பற்றிய செய்தி பிரதமருக்குத் தெரிவிக்கப்பட்டதும், பேச்சுவார்த்தை நடத்த அவகாசம் பெறுவதற்காக பிரதமர் வேலை நிறுத்தக் கெடுவை சில தினங்களுக்கு ஒத்திவைக்கும் வண்ணம் வர்த்தக ஊழியர் சங்கச் செயலாளர் திரு. பாலதம்புவிற்கு கடிதம் அனுப்பினார் பிரதமரின் வேண்டுகோளை ஏற்க முடியாது என்றும், வேலை நிறுத்தம் செய்வதென்று ஊழியர் சங்கப் பொதுச் சபை தீர்மானித்திருப்பதால் அதனை மாற்றியமைக்கும் உரிமையும் பொதுச் சபைக்கே உண்டு என்று திரு. பாலதம்பு பிரதமருக்குத் தெரிவித்துவிட்டார்.

### பிரதமர் கேட்ட அவகாசம

வேலை நிறுத்தம் ஆரம்பிப்பதற்கும் பிரதமருக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டதற்கும் உள்ள கால இடைவெளி 48 மணி நேரமாகும். பிரதமர் வேலை நிறுத்தத்தைக் கைவிடும் வண்ணம் எச்சந்தர்ப்பத்திலும் கேட்கவில்லை. முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சு வார்த்தை நடாத்துவதற்கு மட்டுமே தனக்கு அவகாசம் வேண்டும் என்று கேட்டிருந்தார்.

பிரதமருக்கு வேலை நிறுத்தச் செய்தி பற்றி போதிய முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தால் அவர் நிச்சயம் ஊழியர்களின் கோரிக்கைக்கு ஒரு சாதகமான நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருப்பார்.

கடந்த பதினெட்டு மாத காலத்திலும் நடைபெற்ற எந்த வேலை நிறுத்தத்திற்கும் கொடுக்காத முக்கியத்துவத்தை பிரதமர் இதற்குக் கொடுத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தோட்டத் தொழிலாளர்கள் 17. 50 கோரிக்கையை முன்வைத்து லட்சக்கணக்கில் பல நாட்கள் வேலை நிறுத்தப் செய்த காலத்தில் கூட பிரதமர் இந்த அளவுக்கு அக்கறை செலுத்தவில்லை.

வேறு பல வேலை நிறுத்தங்கள் தேசிய அரசின் காலகட்டத்தில் நடைபெற்றிருக்கிறது. அப்பொழுதெல்லாம் பிரதமர் தலையிடவில்லை. ஆனால் இவ் வேலை நிறுத்தத்தில் என்றுமில்லாத அக்கறை காட்டுகிறார் பிரதமர். அதற்கும் சில காரணங்கள் உண்டு.

### விரோதிகளா?

வர்த்தக ஊழியர் சங்கமும், அது சார்ந்தவர்களும் தேசிய அரசாங்கத்தின் விரோதிகள் அல்லர். மேலும் வர்த்தக ஊழியர் சங்க வேலை நிறுத்தம் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தால் ஏற்படக்கூடிய பொருளாதார நஷ்டத்தை நாட்டிற்கு ஏற்படுத்தாவிட்டாலும் நாட்டின பல முக்கிய கருமங்களை உடனடியாகஸ்தம்பிதமடையச் செய்துவிடும்.

பங்குவியாபாரம், தேயிலை, கொப்பரா ஏற்றுமதி, உல்லாசப் பிரயாணிகள் வருகை போன்ற பல விடயங்களை இவ்வேலை நிறுத்தம் ஸ்தம்பிதமடையச் செய்துவிடும். அத்துடன் வர்த்தக ஊழியரின் வேலை நிறுத்தம் தலைநகரின் சிறப்பைக் கெடுத்து சவக்களை ஏற்படுத்திவிடும். இவற்றையெல்லாம் உத்தேசித்தே பிரதமர் இப்பிரச்சினையில் உடன் தலையிட எண்ணினார் என்று கூறுகின்றோம்.

சுதந்திரன் அரசியல் நிருபர்

பிரதமர் பேச்சுவார்த்தையில் தலையிட முன்வந்ததால், அதைச் செய்வதற்கு அவருக்கு அவகாசம அளித்திருக்க வேண்டியது வர்த்தக ஊழியர் சங்கத்தின் தவிர்க்க முடியாத கடமையாகும். அதுதான் உண்மையான தொழிற்சங்க வாதம்.

இன்று தொடங்கியிருக்கும் வர்த்தக ஊழியரின் வேலை நிறுத்தம் சில கோரிக்கைகளை ஊழியர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் கோரிக்கைகளைப் பெற்றுக் கொடுப்பதுதான் வர்த்தக ஊழியர் சங்க நிர்வாகிகளின் நோக்கமென்றால் முடிந்தவரையில் அவற்றைப் பேச்சுவார்த்தை மூலம் பெற்றுக் கொடுக்க முனைந்திருக்க வேண்டுமல்லவா?

### கடைசி ஆயுதம்

வேலை நிறுத்தம் என்பது கடைசி ஆயுதம். பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முயல வேண்டும். எல்லாக் கதவுகளும் அடைக்கப்பட்டால் வேலை நிறுத்தம் தவிர்க்க முடியாததாகலாம். இதுவே தொழிற்சங்க முறையுங்கூட.

வேலை நிறுத்தக் களத்தில் நின்றுகொண்டு பேச்சு வார்த்தை நடத்தினால் தொழிலாளரின் கை பலமாக இருக்குமாம். என்றாலும் தொழிலாளர் வேலை நிறுத்தம் என்ற ஆயுதத்தைக் கையிலேந்தி விட்டால் முதலாளிகள் பிடிவாதம் செய்வார்கள். இந்த உண்மையை நாம் பலசந்தர்ப்பங்களில்பார்த்துவிட்டோம். அண்மையில் நடைபெற்ற தோட்டத் தொழிலாளரின் வேலை நிறுத்தத்தின்போதும் இதையே முடிவில் கண்டோம்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் ஒரு பொது அமைப்பின் கீழ் வேறு தொழிற்சங்கங்களுடனும் இணைந்திருக்கிறது. ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், வங்கி ஊழியர் சங்கம், தோட்ட உத்தியோகஸ்தர் சங்கம், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் ஆகியன ஒரு புதிய கூட்டமைப்பின் கீழ் இயங்கிவருகின்றன.

### காலை வாரினர்

தோட்டத் தொழிலாளர்கள் 17-50 கோரிக்கையை முன்வைத்து ஜ. தொ. கா. தலைமையில் வேலை நிறுத்தத்தில் குதித்தபொழுது இ. தொ. காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய மலைநாட்டுத்தொழிற் சங்கங்கள் அவ் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு கொடுத்தன. வேலை நிறுத்தக் கூட்டங்களில் திரு. பாலதம்புவும் வர்த்தக ஊழியர் சங்கப் பிரதிநிதியாகச் சென்று கலந்து கொண்டிருக்கிறார். வேலைநிறுத்தம் நீடித்ததும் அதற்கு ஆதரவான அனுதாப வேலைநிறுத்தங்கள் நாட்டின் இதர பகுதிகளிலும் நடைபெற வேண்டும் என்று ஜ. தொ. கா. வினர் விரும்பினர்கள். குறிப்பாக தோட்டப்பகுதிகளில் நடைபெறும் வேலை நிறுத்தம் நாட்டு மக்களின் கவனத்தை ஈர்க்க வேண்டுமெனில் அதற்கு ஆதரவான வேலை நிறுத்தம் தலைநகரிலும்நடைபெற வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்த்தனர்.

ஜ. தொ. கா. வினர் அனுதாப வேலைநிறுத்தம் ஒன்றைத் தலைநகரில் நடாத்தும் வண்ணம் வர்த்தக ஊழியர் சங்கத்தினரைக் கேட்டிருந்தனராம். முதலில் சம்மதம் தெரிவித்திருந்ததாகக் கூறப்பட்ட வர்த்தக ஊழியர் சங்கம் முடிவில் காலைவாரிவிட்டது.

வர்த்தக ஊழியர் சங்கத் தலைமை நிலை ...ற-பிரச்சினைகளுக்கிடமான தலைமை என்பது நடைபெற்ற சம்பவங்களிலிருந்து புலனாகிறது.

### சிந்தனை வேண்டும்

இப்பொழுது வர்த்தக ஊழியர்கள் போராட்டக் களத்தில் குதித்துவிட்டார்கள். அவர்களின் கோரிக்கை நியாயமானது. ஆனால் நாட்டின் பிரதமரது வேலைகோளுக்கும் செவிசா[illegible] திருக்கவேண்டும் அவரு[illegible] ஒரு சந்தர்ப்பம் நிச்சய[illegible] கொடுத்திருக்கவேண்[illegible]

தொழில் அமைச்ச[illegible] பிரச்சினையை 'ஐஸ் ... யில்' போடுவது[illegible] இதனையும் ஆரம்பத்தில் ... பெட்டியில் போட்டு[illegible] என்பதையும் நாம் மறுக்க முடியாது. என்றாலும் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும். ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளைத் தெரிப்பது முதலாளிமார் சம்மேளனத்தின் தவிர்க்கமுடியாத கடமை. பிரதமர் இப்பொழுது பிரச்சினையில் தலையிட்டார். பிரதமரின் அவசர முயற்சிக்கு இருபகுதியினரும் விட்டுக்கொடுக்கவேண்டும். நாட்டின் நன்மைகருதி இதைச் செய்வது அவசியம்.

பேச்சுவார்த்தைகள்மூல[illegible] எல்லா வழிகளையு[illegible] கையாண்டு, அந்த வழி[illegible] ளெல்லாம் அடைபட்டு[illegible] போன பிறகுதான் வேலை நிறுத்தத்தில் குதிக்கவேண்[illegible] மென்ற சாதாரண தொழி[illegible] சங்க நியதியை எதிர்கா[illegible] லாவது புறக்கணிக்காம[illegible] நடந்துகொள்ள வேண்டிய[illegible] வர்த்தகச் சிப்பந்திகள் ச[illegible] கத்தின் கடமையாகும்.

# விரைவில் மாவட்ட சபை மசோதா

## டாக்டர் ஈ. மு. வி. தகவல்

மாவட்டசபை மசோதா இந்த பாராளுமன்றத் தொடர்க்கூட்டம் முடிவடைவதற்குள் சமர்ப்பிக்கப்படும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் நமது நிருபரிடம் கூறியுள்ளார். மாவட்ட சபை அமைப்பு முறையைத் தள்ளிப்போடுவது மக்களின் உரிமைகளை அபகரிப்பதற்குச் சமமாகும் என்று கூறிய டாக்டர் மேலும் மாவட்ட சபை அமைக்கப்பட்டால் அதனால் நன்மையடைபவர்கள் இலஙகை முழுவதிலும் வாழும் மக்களே அன்றி இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் மட்டுமல்ல என்றும் கூறினர்.

இப்பிரச்சினைபற்றி டாக்டர நாகநாதன் நமது நிருபரிடம் மேலும் கூறியதாவது: "ஜனநாயக நாட்டில் அதிகாரம் ஓரிடத்தில் குவிந்திருக்காது பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டாலே மக்கள் ஆட்சி முறையில் நேரடியாகப் பங்குகொள்ள முடியும். உண்மையான ஜனநாயக மலர்ச்சியையும் நாம் அப்பொழுதுதான் தரிசிக்க முடியும்.

"ஜனநாயக ஆட்சி நிலவும் எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் அங்கெல்லாம் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதை நாம் கண்ணூடாகக் காண முடியும். பகிர்ந்தளிக்கும் முறை நாட்டுக்கு நாடு மாறுபட்டிருக்கலாம். சில நாடுகள் சமஷ்டி ஆட்சிமுறையின் கீழ் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்துள்ளன. இன்னும் சில நாடுகள் பிரதேச சபைமூலமும், வேறு சில நாடுகள் பஞ்சாயத்துச் சபை மூலமும், தமது அதிகாரத்தைப் பகிர்ந்தளித்துள்ளன. வேறு சில நாடுகள் மாவட்ட சபை அமைப்பையே ஏற்றுக்கொண்டுள்ளன.

"நமது அண்டை நாடும் உலகில் பெரிய ஜனநாயக நாடு என்று கூறப்படும் பாரத நாட்டிலும் இங்ஙனமே ஆட்சிஅதிகாரம் பரவலாக்கப்பட்டிருக்கிறது. ஆட்சி அதிகாரம் பரவலாக்கப்படாது ஒரே இடத்தில் குவிந்திருப்பின் அது ஜனநாயக முறைக்குப் பேராபத்தாகும். இங்ஙனம் ஆட்சி அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்திருப்பின் அது ஜனநாயக முறைக்கு விடுக்கப்படும் பெரும் சவாலாக இருப்பதுடன், தனிநபர் சர்வாதிகார ஆட்சிக்கும் வழி கோலும்.

"அதிகாரம் பரவலாக்கப்பட்டால் மக்கள் தங்கள் தேவைகளை தங்கள் இடத்திலிருந்தே பெற்றுக்கொள்ள முடியும். உதாரணமாக ஒரு கிராமத்திற்குப் பாடசாலை ஒன்று அவசியமாயின் இன்றைய ஆட்சிமுறையின் பிரகாரம் அக்கிராம மக்கள் மத்திய அரசிடமிருந்தே அதிகார அனுமதியை எதிர்பார்க்க வேண்டும். அப்பாடசாலையை அமைக்கும் உரிமை கேட்பதற்கு அவர்கள் தலைநகருக்கே வர வேண்டியிருக்கிறது. அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தால் அவர்கள் தங்கள் இடத்திலிருந்தே பாடசாலை கட்டுவதற்கான அனுமதியைப் பெற்றுவிட முடியும்.

"மாவட்ட சபை அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் அதிகார ஆசையுடையவர்களாக இருக்க வேண்டும். எதற்கும் குறிக்கப்பட்ட சிலரின் கையையே எதிர்பார்க்க வேண்டும் என்று விரும்புபவர்களே மாவட்டசபைகள் அமைக்கப்படுவதை எதிர்ப்பார்கள்.

மாவட்டசபைகள் அமைக்கப்படுபொழுது குறிப்பிட்ட சிலரின் குறிப்பாக அமைச்சர்களின் அதிகாரங்கள் பல பறிக்கப்படலாம். இதனைச் சிலர் விரும்பாமலும் இருக்கலாம்.

"மாவட்ட சபை அமைப்பு முறையை நாம் தள்ளிப்போடுகிறோம் என்றால் அது மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறுகிறோம் என்பதே பொருளாகும். மாவட்ட சபை அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களோ அல்லது அது தள்ளிப் போடப்பட வேண்டுமென்று விரும்புபவர்களோ இதனை நிச்சயம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

'மாவட்டசபைகள் அமைக்கப்பட்டால் அதனால் ஆதாயம் பெறுபவர்கள் இலங்கைத் தமிழரசுக்கட்சியினர் மட்டுமே என்று ஒருதப்பான பிரச்சாரம் செய்யப்படுகிறது. இது முற்றிலும் தவறு. மாவட்டசபை அமைப்பு இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்மை பயக்கக் கூடிய ஓர் திட்டமாகும். குறிப்பாக பெரும்பான்மையின மக்கள் இதனால் கூடிய நன்மை பெறுவார்கள். அதே போன்று பின் தங்கிய பகுதிகளினதும்' பின் தாங்கிய மக்களினதும் முன்னேற்றத்திற்கு இம்முறை பெரிதும் உதவியாக இருக்கும்."

'மாவட்டசபை மசோதா இனியும் காலம் தாழ்த்தப்படமாட்டாது. இப்பாராளுமன்ற தொடர்காலத்துள் அது சட்டமாக்கப்படும்' என்று கூறி முடித்தார் திரு. நாகநாதன்.

### நாடகக் கருத்தரங்கு

இலங்கைச் சாகித்திய மண்டலத் தமிழ் நாடகக் குழு நடாத்தும் கருத்தரங்கு இன்று (4-11-66) கொழும்பு றோயல் கல்லூரிமண்டபத்தில் நடைபெறும். கருத்தரங்கு காலை 9-30 மணியிலிருந்து பிற்பகல் 5-00 மணிவரை நடைபெறும்.

'தமிழ் நாடக வளர்ச்சி' என்னும் பொருள் பற்றி காலையில் நடைபெறும் கருத்தரங்கில் இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை 'பண்டைய நாடகம்' என்னும் தலைப்பிலும், ஆசிரியர் திரு. த. சண்முகசுந்தரம் 'நாட்டுக்கூத்து' என்னும் தலைப்பிலும், இலங்கை வானொலி அறிவிப்பாளர் திரு. சி. வி. இராசசுந்தரம் 'நாட்டிய நாடகம்' என்னும் தலைப்பிலும், ஆசிரியர் சி. மகாதேவா (தேவன்-யாழ்ப்பாணம்) 'நவீன நாடகம்' என்னும் தலைப்பிலும் உரை நிகழ்த்துவார்கள்.

'நடகம் எழுதுதல்' என்னும் பொருள்பற்றி நடைபெறும் பிற்பகல் நிகழ்ச்சி 2-00 மணிக்கு ஆரம்பமாகும். 'பாடசாலை நாடகம்' பற்றி திரு. இ. முருகையனும், 'வானொலி நாடகம்'பற்றி திரு. சி. கிருஷ்ண பிள்ளையும், 'சமூக நாடகம்'பற்றிதிரு. அ. ந. கந்தசாமியும், 'வானொலி நாடகம்' பற்றி திரு. வ. அ. இராசரத்தினமும், 'ஓரங்க நாடகம்' பற்றி திரு. க. கைலாசபதியும் உரை நிகழ்த்துவார்கள்.

காலை நிகழ்ச்சிக்கு இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி சு.வித்தியானந்தனும், பிற்பகல் நிகழ்ச்சிக்கு இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. க. செ. நடராசாவும் தலைமை தாங்குவார்கள்.

### தினசரியின் புதிய யுக்தி

தமிழ்த்தினசரிப்பத்திரிகை ஒன்று செய்திகள் சேகரிப்பதற்கு ஒரு புதுவிதமான யுக்தியைக் கையாண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

செய்திகள் கிடைக்காவிட்டால் ஒரு பிழையான செய்தியை அல்லது ஒரு கற்பனைச் செய்தியை முதல் நாள் பிரசுரித்துவிட்டு மறுநாள் அச்செய்தியுடன் சம்பந்தப்பட்டவரின் மறுப்புச்செய்தியை வாங்கி பிரசுரித்து வருகிறதாம்.

இந்த யுக்தி சில நாட்களாகப் பலன் கொடுத்தது. ஆனால் நாளடைவில் எல்லோருக்கும் இந்தத் தந்திரம் விளங்கி விட்டது. எனவே இப்பொழுது கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள் என்று தெரியவருகிறது மறுப்புகள் கிடைக்காததால் இப்போது அந்தப் பத்திரிகை உண்மையற்ற செய்திகளை மட்டுமே பிரசுரித்து வருகிறது இதனால் இப்பத்திரிகைக்குத் 'தினப்புழுகு' என்று நாமம் சூட்டியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

### புதிய......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிப்பதற்கும் ஆலோசித்து வருகிறார்கள்.

எதிர்க்கட்சியினரின் திருத்தப் பிரேரணை மலைநாட்டில் உள்ள தேயிலை, இரப்பர் தோட்டங்களை அன்னிய கம்பெனிகளிடமும், முதலாளிகளிடமுமிருந்து அபகரித்து நிலமற்ற விவசாயிகளுக்கு சொந்தமாக்கும் வண்ணம் கோரும் என்று தெரிகிறது.

### விடுதலை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர். நீதி அமைச்சின் காரியதரிசி திரு. கனகராயர் விசாரணை நடத்திய பின்னர் அவரது அறிக்கையின் மீது நீதி அமைச்சு அவசியமாயின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கக் கூடும்.

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் குற்றவாளியாகக் கண்ட சோமராம தூக்குத் தண்டனை பெற்றது வாசகர்கள் அறிந்ததே.

## அறிவிப்பாளருக்கு அபராதம்

கடந்த வாரம் நடைபெற்ற இடைத் தேர்தல் முடிவுகளைச் சிங்களத்தில் ஒலிப்பரப்பிய இலங்கை வானொலி தேசிய ஒலிப்பரப்பைச் சேர்ந்த சிங்கள அறிவிப்பாளர் ஒருவருக்கு இலங்கை வானொலி மாஅதிகாரி திரு. நெவில் ஜெயவீர ரூபா 54 அபாரதம் செலுத்தும் வண்ணம் உத்தரவிட்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது

இந்த அறிவிப்பாளர் பெந்தர - எல்பிட்டிய தொகுதி முடிவுகளை அறிவிக்கும் பொழுது முதலில் 'பெந்தர - எல்பிட்டிய தேர்தல் தொகுதியின் முடிவுகள் பின்வருமாறு. சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ...' என்று கூறிவிட்டு இசைத் தட்டுகளைய தொடர்ந்து ஒலிப்பரப்பத் தொடங்கிவிட்டாராம். சுமார் பதினைந்து நிமிடங்கள் இசைத்தட்டுகளை ஒலிபரப்பிய பின்னரே மீண்டும் தேர்தல் முடிவுகளை அந்த அறிவிப்பாளா ஒலிபரப்பினார். முதலில் ஏற்பட்ட தவறுக்குகூட இந்த அறிவிப்பாளர் மன்னிப்புக் கோரத் தவறிவிட்டார் என்று தெரிகிறது.


**அண்ணா மலர்**

'தாய் நாடு' அறிஞர் அண்ணா விழா மலர். தனிப்பிரதி வேண்டுவோர் 50 சதத்திற்கு முத்திரைகளை அனுப்பவும் விற்பனையாளர்களுக்கு 20 விகிதம் கழிவுடன் V. P. P. யில் அனுப்பி வைக்கப்படும். 'தாய் நாடு'

67, புதிய சோனகத் தெரு, கொழும்பு.

பின் வரும் ஊர்களில்

**சுதந்திரன் விற்பனை செய்வதற்கு முற்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை**

| | |
|---|---|
| காலி | வத்தேகம |
| மாவிட்டபுரம் | காரைநகர் |
| தெல்தெனியா | அம்பாந்தோட்டை |
| அப்புத்தளை | கந்தப்பளை |
| பொத்துவில் | லியங்காவலை |

விண்ணப்பிக்கவும்
நிர்வாகி,
சுதந்திரன்
த. பெ. இல. 1183
கொழும்பு.

**வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்**

**லீலா! லீலா!! லீலா!!!**

**1967**

**லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்**

**லீலா டயறி**

பல வர்ணங்களில்
தமிழ், சிங்களம், ஆங்கிலம்
ஆகிய மும் மொழிகளிலும்
துரிதமாய் தயாராகின்றன
வியாபார அன்பர்களே
லீலா விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்
பலவிதமான புதுப் புது அம்சங்களுடன்
1967-ம் வருடத்துக்குரிய கலண்டர்
தயாராகின்றது
வேறு எந்தக் கலண்டர்களிலும் பார்க்க
சகல துறைகளிலும் முன்னிற்பது
லீலா தயாரிப்புகளே!

ஏகவிநியோகஸ்தர்கள்:

**லீலா ஸ்டோர்ஸ்**

249, நோறிஸ் வீதி, கொழும்பு-11

# கருத்துற்றது

நான். அகம்பாவத்தின் எதிரொலி? இல்லை.

'பின்பு?' நான். வெறும் நான்தான்! இது...என்னைக் குறிக்கும் சொல்.

'அப்படி யென்ருல்...?' உலகப்பிரசித்தம்உண்டா? இவ்வாறு...அறியும் முயற்சி உங்களிடம் தலைதூக்குகின்றது. உணர்கின்றேன்.

'ஆ...ஹா...?' அதிர்ச்சியடைந்து விடாதீர்கள். நான்...வெறும்நான்தான். எத்துறைப் பிரசித்தமும் எனக்கில்லை.

'கூறும்?' கூறித்தொலைப்பதற்குத்தானே வந்துள்ளேன். எனது வரலாறு... ...மிகவும் சுவையற்றது. சாதாரணமாக...பல சம்பவங்கள் மனிதர் வாழ்வில் நிகழும். ஆனால், என்வாழ்வில்...ஒன்றுமே நிகழவில்லை.

'ஏன்?' அப்படியான வாழ்வு கிட்டியிருந்தால் தானே. நான்...' ஓர் சாக்கடைப் புழு.

'சொல்லு?' எதைச் சொல்வது? எனது சுய புராணத்தினையா? இன்றேல்..., எப்படி இந்த நிலைக்கானேன் என்பதையா? அல்லது...வெற்றிகரமாக இன்று அமுங்கியுள்ளேனே, அந்த சோரம் போன வாழ்க்கை அத்தியாயத்தினை மட்டுமா?

'ச்-சீ...அசிங்கம்... ...இல்லை?' எது அசிங்கம்? நான் அசிங்கமா? இன்றேல்...சோரம்போன என் வாழ்வு அசிங்கமா? யாரால் இந்த நிலைக்கானேன்?

'சமூகத்தால்?' இல்லை! சமூகத்தினைக் குற்றம் சாட்ட முன்வரவேயில்லை

'ஆண்கள்?' இல்லை. அவர்களையும் குற்றம் கூறுவதற்கில்லை. அவர்கள்... ...எனக்கு உடந்தையாக இருந்தார்கள். அவ்வளவு தான்!

'சந்தர்ப்பம் ...சூழ்நிலை?' எனக்கு அதிக படிப்பறிவு இல்லை. ஆகையால்...நீங்கள் கூறுவது எனக்குவிளங்கவேயில்லை! மேலும்...!

## எமது சிறுகதை

...இவைகள் மேல் பழி சுமத்தி, உண்மைத்துவத்தினை நிலைநாட்ட வேண்டிய அவசியமுமேயில்லை!

'பின் யார்?' உங்கள் சிந்தனை இதற்குமேல் ஓடாது? அப்படித்தானே? ஒத்துக்

கே. ரி. இராசசிங்கம்

கொள்ள மாட்டீர்கள்! எப்படி முடியும்? ஐம்பம் விடுமா? இந்த நிலைக்குக் காரணம்...

'சொல்வேன்?' பதருத காரியம் சிதருது. அவசரப்படேல். சொல்வதற்குத் தானே இங்கு வந்துள்ளேன். ஆனல்...அதற்கு முன்பு ஓர் சந்தேகம்...

'என்ன?' அசிங்கம். அப்படி என்ருல் என்ன? இது பற்றி நீ முன்பு குறிப்பிட்டாய். இல்லை? கொஞ்சம் விளக்கேன்.

'புரியவில்லை?' புரிகின்றது. குறிப்பிட்டுக் கொள்வதைப் புரிகின்றேன். எனது வாழ்க்கை? இது தான் அசிங்கம்? இல்லை?

'சொல்லித்தான் ஆக வேண்டும்?' அவசியம் இல்லை. எனக்குத்தான் புரிகின்றதே. உமது...மத்திய வகுப்பு மனப்பான்மை! உண்மையில்..., ...அசிங்கம் நான் நடாத்தும் வாழ்வில் இல்லை!

'பின்பு?' உங்கள் மனதில் தான் இருக்கின்றது. இது தான் உண்மை! நான் அப்படித்தான் கருதுகின்றேன். உடலால் எழுவது அசிங்கம். உள்ளத்தால் கெடுவது...? இதுமட்டும் அசிங்கமில்லை? அப்படியாகில்..., ...உலகில் தூயவர்கள் இருக்கின்ருர்களா?

'குதர்க்கமா?' இல்லை. உண்மையைக் கூறினேன். வேறு ஒன்றும் இல்லை!

'எது உண்மை?' உண்மை? ...உண்ரும் நிலை

(14-ம் பக்கம் பார்க்க)

# அழகு அனைவருக்கும்!

—காசி. ஆனந்தன்—

சிரித்தவள்நீ! அழகான கண்ணிமையால்
சிறகடித்து வந்தவள்நீ
செவ்வானத்தை
உரித்துவைத்த வாயிதழை உண்ணென்று
தந்தவள்நீ! எனக்காக
உயிர் வாழ்ந்தாய் நீ!
பிரித்தெடுக்க முடியாத பிணைப்பாகி
விட்டாய் நீ! ஒருவனுக்கே
பெண்ணுனாய் நீ!
எரித்தபடி பார்க்கின்ருய் அடுத்தவரை
என் நண்பன் அழுகின்ருன்
என்செய்தாய் நீ?

கற்பொழுக்கம் தவருத கண்ணகியா?
அது சரிதான்....இருந்தாலும்
கவர்ச்சியுள்ள
பொற்சிலை நீ! ஆதலினுல் உன்அழகு
பூமிதனில் அனைவருக்கும்
பொதுவேயாகும்!
விற்புருவம் வளைத்துவிடு! நின்னழகை
அடுத்தவர்கள் விழுங்கட்டும்!
அதனுல் என்ன?
நெற்கதிர் போல் நாணுவதும் நெருப்புவரப்
பார்ப்பதுதான் கற்பென்று
நினைத்தாயோடி?

முன்மார்புக் கோபுரத்தின் மேலாக
நிலாமுகமும் கருங்கூந்தல்
முகிலும் தாவி
என்னோடு மோதுவதை நான்மட்டும்
சுவைத்திட்டால் இயற்கையெழில்
விறைப் போகும்!
மண்பார்த்துச் சுவைக்கவிடு! தமிழ்மகளிர்
மனக்கற்பை நானறிவேன்...
மயங்க வேண்டாம்!
பெண்ணுக வந்தவள் நீ! உன்னழகைப்
பெட்டியிலே வைத்திடவோ
பிறந்தாய் பாவி!

முத்திருக்கும் அழகுமலர் வாய்திறப்பாய்!
மோதிரக்கை விரல்கடித்து
முறுவல் செய்வாய்...
சித்திரப்பொன் இடையசைப்பாய்! செவ்வாழைத்
தொடையிரண்டும் அத்துடனே
சேர்த்துக் கொள்வாய்!
எத்தனை பேர் வந்தாலும் எதிர்நின்று
கண்கொடுப்பாய்! அதிலொன்றும்
இகழ்ச்சியில்லை!
சேத்தபடி கிடக்கின்ருன் என் நண்பன்...
அவனுக்கும் சிறுமுறுவல்
காட்டுவாயே!

# தனித்துவம்

அந்திப் பொழுதெனும் அழகியின் மடியில், தென்றல் தவழ்ந்தனள். பட்சிகள் யாவும் பல்லியம்பாட, மலர்கள், தளிர்கள், கொடிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் கைதேர்ந்த நடன சுந்தரிகளையே வென்று நின்ருடின. மகுடிக்கு ஆடுகின்ற மாபெரிய நாகமென மாநிலம் முழுவதும் மந்த மாருத முயக்கினில் மகிழ்ந்தது.

கவிஞரின் நாவிலும் கவி நடனம் புரிந்தவள்! அவள் இதய நெடுந்தோப்பினிலே எலையற்ற புகழ் மலர்கள் பூத்துக் குலுங்கின. அதன் கள்ளுண்ட வெறியினில் கண்தலை தெரியாது தடுமாறினுள், தென்றல். தலைக்கனத்தில் தலை நிமிர்ந்து நின்றதொரு இயற்கையை ஒரு முறை எடுப்புடன் பார்த்தது.

தென்றலின் பரிசம் பட்டது. ஆனுல் அந்த மரம் மட்டும் அசையவே இல்லை. வேறொரு சிந்தனையில் மூழ்கிக் கிடந்தது.

'என்னையே உலகம் என்றுமே புகழ்ந்து, என்னிலே லயித்திட இதற்கு மட்டும் இத்தனை திமிரா? என்ன செய்கிறேன் பார்!'

நிஷ்டையில் ஆழ்ந்தனள் தென்றல். காற்ருக மாறக் கடுந் தவம் புரிந்தது! பலித்தது, தவம். வீசத் தொடங்கினுள்!

'இது என்ன தான் காற்ரே? முகங்கால் கைகளெல்லாம் காய்கின்ற வரட்சி! பயிர்பச்சைகள் வாடிவதங்கிச் சாகின்றனவே! ஐயோ! பாவமே!' இந்தக் குரல்கள் தென்றலின் செவிகளில் விழுந்ததாய் இல்லை. ஏதோ, நோக்கத்தை நிறைவேற்றும் நெஞ்சழுத்தம் தென்றலுக்கு.

மனத்திருப்தியில்லாத காரியத்தில் பலாத்காரமாக ஈடுபடுத்தியதுபோல வேறு சில மரங்களும் ஆடத்தொடங்கின. தெங்கொடு கமுகு சிரம் பணிந்தாடின. தன் பெருமையைத் தொடர்வது போல மீண்டும் ஒரு முறை உலகினைப்பார்த்தது! ஆனுல் அந்த மரம் மட்டும் ..?

அகிலம் அளந்த அனுபவ-அறிவுச் செருக்கினில் கருகரு வென்று கனிவுற வளர்ந்த ஓர் உருவம்! பற்றெனும் ஓலைகள் பழுத்ததால் விழுந்ததோ? ஆடைக்கும் கோடைக்கும் அதிராது நின்றது!

கலையெனும் புவியினில் ஒளியெனும்வேரினை நேராகப் பாயவிட்டு, நிலையாக ஊன்றிவிட்ட கலைப்பெரு மேதையின் தனித்துவத் தோரணையில் நிமிர்ந்து நின்ருள் அந்தப்பனை! அதில் கருங்கலிதயமும் கரைகின்ற வண்ணம் குருவிகள்கூடி, கருக்கினில் அமர்ந்து தினமொரு ம் பாடும்! அதன் ஒவ்வொரு

"மருதூர்க்கனி"

ராகத்தையும் ரசித்து, ரசித்து தட்டிக் கொடுப்பாள் அந்தப்பனை. அவள் தலைமையில ஒரு கலைவிழாவே நடந்து விடும்! கலைஉளம் கொண்டவர்க்கு கண் கொளாக் காட்சி! ஆனல். காற்றின் கண்களுக்கு...?

காற்றின் எரிச்சல் காட்டாக்கினியாகிக் கண்டபடி வீசியது! கனற்பொறிகளென சொற்கள் தெறித்தன!

'என்னடி பெருமையா?' 'எனக்கா...?'

'வேறு யாருக்கு? உனக்குத்தான்! அன்றேல் என்னிலே உலகம் இழைத்து கிடந்திட, உயிரென மதித்து என்னைப் புகழ்ந்திட, உனக்கு மட்டுமென்ன திமிர் தானே? உன்னினத்தவர்கள் கூட என்னை ஏற்றுக் கொண்டு எனக்குத் தலைவணங்கவில்லையா?'

'ஏற்றுக் கொள்வது வேறு. தலைவணங்குவது வேறு. உனது எண்ணந்தான் என்னவோ? இனத்தவர்கள் தலைவணங்குகிருர்களா...? அது அவர்களின் வளர்ச்சியின் பக்குவம்! உணர்வுகளும் போக்குகளும் மாறுபட்டிருக்கவில்லையா? இது எனது தனித்துவம்!'

'தனித்துவமாம், தனித்துவம்! யாருக்குத் தெரியாது உன் தனித்துவம்? பக்குவம் வேறு பேசுகிருயா? என் வலிமையை அறியாது பிதற்றுகிருய்! என்னை எதிர்த்தவர்கள் வாழ்ந்தது கிடையாது!

'உன்வலிமையை நான் அறியவில்லை என்று வைத்துக் கொள், ஆனுல் உன்னையும் மீறிய வலிமையை நான் அறிந்திருக்கிறேன்! உன்னுல் முடிந்ததைச் செய்!' நிமிர்ந்து நின்றது அந்தப்பனை.

தனதுதன்மான உணர்ச்சிகளுக்கு சவால் விட்டுத் தாபம் போட்டது போலிருந்தது, தென்றலுக்கு. மூண்டது! நெஞ்சில், முப்பெருந் தீயாய்;

'அத்தனை திமிரா? நீ அழிந்தாய்!'

'திமிரல்ல. அசைக்க முடியாதநம்பிக்கை! அழிக்கப் போகிருயா? ஐயோ! பரிதாபமே! அதுவுமநீயா? உன் அறியாமைக்காக அனுதாபப் படுகிறேன்!'

கடவுளை வேண்டிக் கடுந் தவம் புரிந்தாள், தென்றல்.

பலித்தது, தவம்.

ஊழிப் பெருங்காற்ரே? என்னும் படியான உக்கிரமான சூருவளி! உக்கிரக் கெடுபிடியோ? எனும்படியான உக்கிரத் தாண்டவம்! உலகத்தை ஒரு புரட்டுப் புரட்டி விடும் போலிருந்தது!'

ஒரு கணந்தான்.

உலகத்தின் ஓலம் ஒருவனுக்குக் கேட்டது.

ஓரே முடிவு.

ஓய்ந்தது சூருவளி.

தென்றலுக்குப் புரிந்ததோ, என்னவோ?

திரும்பவும் அவள் பெருந்தலைமையில் குருவிகள் கூடின. கலைவிழா தொடர்ந்தது.

உருவகக் கதை

# டாக்டர் சுபாந்திரியோ உயிப் பிச்சை கேட்கிருர்

# இந்தோனேஷிய படுகொலைக்கு பொறுப்பாளிகள் யார்?

# சீனவில் புதிய புரட்சி மலருகிறது

## மாவின் முயற்சிகள் தோல்வியில் முடியும்

ஜனாதிபதி சுகர்ணேவின் வலது கரமாகத் திகழ்ந்த இந்தோனேஷியாவின் இரும்பு மனிதன் முன்ஞள் வெளிநாட்டு அமைச்சர் டாக்டர் சுபாந்திரியோ இன்று சுகர்னேவிடமே உயிர்ப்பிச்சை கேட்டு நிற்கிருர். இந்தோனேஷிய அரசாங்கத்திற்கெதிராக சதி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவரை விளங்கிய விசேட இராணுவ நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்திருக்கிறது. ஒரு வருடத்திற்கு முன்னர் இந்தோனேஷியாவில் நடைபெற்ற சதியும் அதன் விளைவும் இத்துடன் முடிந்து விட்டதாகக் கூறிவிட முடியாது. இதுவரை பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட இந்தோனேஷிய மக்கள் படுகொலை செய்யப் பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. அதன் தொடர்ச்சியாகவே இன்று டாக்டர் சுபாந்திரியோவின் மரண தண்டனை அமைந்திருக்கிறது.

டாக்டர் சுபாந்திரியோவின் இன்றைய பரிதாப நிலைக்கும், இந்தோனேஷிய குடிமக்களான பத்து லட்சம் கம்யூனிஸ்டுகளினதும், கம்யூனிச ஆதரவாளர்களினதும் படுகொலைக்கும் சீனக் கம்யூனிஸ்டுகளின் அதி தீவிரப் போக்கே காரணமாகும். இந்தோனேஷியப் படுகொலைக்குச் சீனத் தலைவர்களே பொறுப்பாளிகளாவர்.

### 'கண்டன்' படுகொலை

[...]ந்த அதி தீவிரப் போக்கு [...]னக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சிரசுதயத்துடனேயே உதயமானதாகும். சியாங்கைஷேக்கின் ஆட்சியில் சீனவில் உள்ள கண்டன் நகரில் நடைபெற்ற படுகொலைக்கும்' இந்த அதி தீவிரப் போக்கே காரணமாயிருந்தது. கண்டன் படுகொலை ஐம்பதிஞயிரத்திற்கும் மேற்பட்ட சீனத் தொழிலாளர்களின் உயிரை அன்று பலி வாங்கியது. அதே கொள்கை இன்று இந்தோனேஷியாவில் 10 லட்சம் பேரைப் பலிகொண்டது.

மார்க்சியத்தின் இளம் பிள்ளை வாதம் என்று கூறப்படும் சீனக் கம்யூனிஸ்டுகளின் அதி தீவிரப் போக்கு இன்று உலக கம்யூனிச மண்டலத்தையே பலவீனப்படுத்தி விட்டது. உலக நாடுகளில் உள்ள கம்யூனிசக் கட்சிகள் இன்று இரண்டு பட்டு விட்டன.

இந்த தீவிரவாதத்தின் தீமையை பலருப் இன்று உணரத் தலைப்பட்டுவிட்டார்கள்.

சீனவுக்குத் துணையாக நின்ற ருமேனியா இன்று ரஷ்ய அணியில் சேர்ந்து விட்டது. கடந்த வாரம் மாஸ்கோவில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் ருமேனியாவும் கலந்து கொண்டிருக்கிறது.

சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு மிகவும் வேண்டியவர்களாகவும் — வேண்டப்படுபவர்களாகவும் இருந்து வந்த ஜப்பான் கம்யூனிஸ்டுகள் அண்மைக் காலத்தில் சீன சென்று திரும்பியதும் சீனக் கம்யூனிஸ்டுகளின் அதி தீவிரப் போக்கைப் பகி

**உலகவலம்**

ரங்கமாகவே எதிர்க்கத் தலைப்பட்டு விட்டார்கள்.

அதே போன்று சீனவின் மறு எல்லையில் உள்ள வட கொரிய கம்யூனிஸ்டுகளும் இந்த அதிதீவிர வாதத்தை இன்று வெறுக்கிருர்கள்.

### அதிகார ஆசை

என்று மில்லாத அளவு இன்று சீனக் கம்யூனிஸ்டுகளின் அதி தீவிர வாதம் அதிகரித்திருப்பதற்கு உட் காரணங்கள் பல உண்டு. கலாசாரப் புரட்சி என்பதும், செங்காவலர் படை என்பதும் சீனவில் உதயமாக விருக்கும் உண்மையான தொழிலாளர் புரட்சியைத் திசை திருப்பும் ஒரு முயற்சியாகும்.

சீனவில் அன்று ஏற்பட்ட விவசாயிகள் புரட்சி இன்று ஒரு தொழிலாளரின் சோஷலிசப் புரட்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. அண்மையில் ஒரு புரட்சி ஏற்படுவதற்கான அறிகுறிகள் அங்கு தென்படுகின்றன. இப்புரட்சி தற்போதைய அதிகார வர்க்கத்தை வீழ்த்தி விடும். ரஷ்ய நாட்டு புரட்சியின் வரலாறும் இந்த உண்மையையே எமக்குக் காட்டுகிறது. அதாவது: ருஷியாவில் ஏற்பட்டதைப் போன்ற ஒரு 'அக்டோபர் புரட்சி' சீனவில் வெடிக்கும் நிலை உருவாகிவருகிறது.

பொங்கிவரும் உண்மையான தொழிலாளர் புரட்சிக்கு இன்றைய சீன ஆளவந்தார் திரையிட்டுத் தடுக்க முயற்சிக்கிருர்கள். ஆட்சி அதிகாரத்தில் ஆழக் குந்திவிட எடுக்கும் நடவடிக்கையே இன்றைய கலாச்சாரப் புரட்சி. கலாசாரப் புரட்சி என்பது மார்க்சீய தத்துவத்திற்கு புதுமையானது. ஒரு சமூகத்தின் வாழ்வியல் முறையே கலாசாரம், அந்த சமூக அமைப்பு மாற்றப்படும்போது அக் கலாசாரமும் அழிந்துபடும். புதிய சமுதாயம் உதயமாகும் போது அதனையொட்டிய கலாசாரமும் உதயமாகும்.

### புரட்சி மாறுகிறது

சீனக் கம்யூனிஸ்டுகளின் கலாசாரப் புரட்சியும், செங்காவலர் படையும் சீனத் தொழிலாளர்களின் எதிர்ப்பையே சம்பாதித்துள்ளன. இது ஒன்றே அங்கு மற்ருெரு புரட்சி மலருகிறது என்பதற்கு தக்க சான்ருகும்: சீனவில் சோஷலிஸப் புரட்சி மலர்வதை இவர்களால் தடுத்துவிடவும் முடியாது.

யதார்த்த உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியாத சீனக் கம்யூனிஸ்டுகள் பழையஸ்டாலினிசக் கொள்கைகளைப் பிடித்துக் கொண்டு தொங்குகிருர்கள்.

தனிநபர் வணக்கம் சீனவில் என்று மில்லாத அளவு தலையெடுத்திருப்பதே இதற்கு ஒரு நல்ல சான்று. புரட்சி என்பது மக்கள் உள்ளத்தில் குமுறி வெடிக்க வேண்டிய ஒன்ருகும். அந்தக் குமுறும் உணர்ச்சியை ஆற்றுப்படுத்துவதே தலைவர்களின் பொறுப்பு. தலைவர்கள் எப்போர் புரட்சியை மக்களிடம் திணித்துவிட முடியாது.

### அதிதீவிரத்தின் அறுவடை

ஸ்டாலின் காலம் புரட்சியைத் திணிக்கும் காலமாக இருந்தது. சீனக்கம்யூனிஸ்டுகளும் புரட்சி என்ற சரக்கை சீனவிலிருந்து ஏற்றுமதி செய்து ஏனைய நாடுகளில் திணித்து விடலாம் என்று நம்புகிருர்கள். 'இது மார்க்சிய தத்துவத்திற்கே முரணை போக்கு.

புரட்சியை ஏற்றுமதி செய்து திணிக்கும் முயற்சி படுதோல்வியில் முடிவடையும் என்பதற்கு இந்தோனேஷிய சம்பவங்கள் நல்ல எடுத்துக் காட்டாகும். சீனவின் சிந்தனையற்ற கண்மூடித்தனமான அதிதீவிரப் போக்கு பத்து லட்சம் இந்தோனேஷியர்களின் உயிரைப் பலி வாங்கியது.

இந்த உண்மைகளைத் தெரிந்து கொள்ள முடியாது எங்கள் நாட்டில் சிலர் சீனக் கம்யூனிஸ்டுகளின் அதிதீவிர போக்கு பற்றி ஒங்கிக் குரல் எழுப்புகிருர்கள்.

இவர்களின் ஆபத்தான போக்கு நாளை இலங்கையிலும் ஒரு 'கண்டன் படுகொலையையோ' அல்லது 'இந்தோனேசிய படுகொலையையோ' ஏற்படுத்திவிடலாம். இதனையிட்டு நாம் விழிப்பாக இருத்தல் வேண்டும்'!

—பூ.

# இந்திரா தலைமைக்கு ஒரு பரீட்சை

## தமிழ் நாட்டில் பரபரப்பு

இந்தியப் பொதுத் தேர்தலுக்கு இன்னும் மூன்று மாதங்களே உள்ளன. அரசியற் கட்சித் தலைவர்கள் அனைவரும் உண்ண, உறங்க நேரமின்றி ஊர் ஊராக அலைந்து திரிகிருர்கள்.

மூன்று மாதங்களுக்கு முன்னரே களைகட்டிய இந்திய தேர்தல் பிரச்சாரம் கடந்த மாதம் சூடுகண்டு, இப்பொழுது அனல் கக்கும் நிலையையும் அடைந்து விட்டது. கொள்கை விளக்கம் செய்ய வேண்டிய அரசியற் கட்சித்தலைவர்கள் எல்லாம் இன்று மாற்றுக்கட்சியினரையும், அவர் தம்கொள்கைகளையும் பெயர்த் தெறியத் தொடங்கிவிட்டார்கள்.

### வேட்பாளர் பட்டியல்

கட்சிகளின் வேட்பாளர்கள் பட்டியல் பெரும்பாலும் தயாராகிவிட்டதாகவும் அவை இம்மாத முடிவுக்குள் வெளியாகலாம் என்றும் தெரிகிறது. சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் டிக்கெட் கேட்டு 800பேர் மனுச் செய்திருப்பதாக முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அறிவித்திருக்கிருர்.

தி. மு. கழக டிக்கெட் கேட்டு 672பேர் மனுச்செய்திருப்பதாக கழகத்தலைவர்களில் ஒருவரான எதிர்க்கட்சித் தலைவர் திரு. இரா. நெடுஞ்செழியன் அறிவித்திருக்கிருர். இதே போன்று ஏனைய குட்டிகட்சிகளிடமும் பலர் டிக்கெட் கேட்டு மனுச் செய்திருக்கிருர்கள்.

சென்னை சட்டசபை மொத்தம் 204 தொகுதிகளைக் கொண்டது. இன்றைய ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சி நிச்சயம் 204 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்தும். எதிர்க்கட்சிகளிடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டிருக்கின்ற காரணத்திஞல் அக்கட்சிகள் அனைத்தும் ஒரு உடன் பாட்டின் கீழ் முழுத்தொகுதிகளிலும் காங்கிரஸ் வேட்பாளர்களுடன் போட்டியிட எண்ணியுள்ளன. இம்முறை எவரும் போட்டியின்றித் தெரிவு செய்யப்படுவதற்கான சாத்தியக்கூறு இருப்பதாகத் தெரியவில்லை.

### பதவி யாருக்கு?

எதிர்க்கட்சிகளுக்குள் தி. மு. கழகம் பெரும் பாலும் 130 தொகுதிகளில் போட்டியிடலாம் என்று தெரிகிறது. கழகத்திற்கு அடுத்த நிலையில் சுதந்திரக்கட்சி அதிகப்படியான வேட்பாளர்களை நிறுத்தலாம். ம. பொ. சி. யின் தமிழரசுக்கழகம் முப்பது தொகுதிகளில் போட்டியிட அனுமதி கேட்டிருப்பதாக ஒரு செய்தி வெளியாகியிருந்த போதிலும் அதற்கு இரண்டு இடங்கள் மட்டுமே ஒதுக்கப்படலாம் என்று தெரிகிறது.

தமிழ் நாட்டுத் தேர்தல் முடிவுகள் எப்படி அமையும் என்பதை சுலபமாக ஊகிக்க முடியாதிருப்பதாக தேர்தல் அவதானிகள் கூறுகிருர்கள். எதிர்க்கட்சிகளுக்கிடையே ஏற்பட்டிருக்கும் தொகுதி உடன்பாடும் ஒற்றுமையும் காங்கிரசிற்கு என்று மில்லாத ஒரு பெரும் சவாலாக அமைந்திருக்கிறது. அதே நேரத்தில் தமிழ் நாடு அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. கு. காமராஜரின் சொந்த மாநிலமாக இருக்கின்ற காரணத்திஞல் அவரின் கையைப் பலப் படுத்த வேண்டுமென்று பொது மக்கள் விரும்புவதும், அதஞல் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதும் சாதாரண சம்பவமாகி விடலாம் என்றும் நம்பப்படுகிறது.

### இந்திரா தலைமைக்கு...

அகில இந்திய ரீதியில் காங்கிரஸ் நிலையை நோக்குகையில் பல மாகாணங்களில் காங்கிரஸ் தோல்வியடைவது தவிர்க்க முடியாததாக இருப்பதாகக் கூறப்படுகிறது. தில்லியிலிருந்து வெளியாகும் 'பேற்றியற்' என்ற தினசரி ஏட்டின் அரசியல் நிருபர் காங்கிரஸ் கட்சி நாலுமாநிலங்களில் தோல்வியடைவது உறுதி என்று கூறியுள்ளார்.

இந்திய நாடு பாரம்பரிய பழம்பெருமைமிக்க நாடு. இத்தகைய ஒரு நாட்டில் ஒருபெண் ஆட்சித் தலைமையை ஏற்றிருப்பதை மக்கள் ஒருமனதாக விரும்புகிருர்களா என்பதை இத்தேர்தல் நிச்சயம் பிரதிபலிக்கவே செய்யும்.

### கிராமதானம்

கிராமமுன்னேற்றச்சங்கத் தலைவர் திரு. வ. முருகப்பன் தலைமையில் 28. 10 66ல் தேற்ருத் தீவில் கிரமதான வேலை ஆரம்பிக்கப்பட்டது. கிராமத்தின் மத்திய வீதி உட்பட பிரதானமான மூன்றிடங்களில் வெள்ளத் தடுப்பு வடிகால்கள் சுமார் 500 யார் நீளத்தில் வெட்டப்பட்டது. இதில் இளம் விவசாயக் கழகத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர். கிராமசேவகரும் சமூகமளித்திருந்தார்.

# 'ஹாலிவூட்டில் நடிக்கவும் தயார்'

## கலைஞர்களுக்கு அரசியல் அவசியம் தேவை

## பழம் பெரும் நடிகை கே. பி. எஸ். கருத்து

"ஏன் நீங்கள் இந்திப் படங்களில் நடிப்பதில்லையென்று பலர் என்னிடம் கேட்கிறார்கள். இதற்குக் காரணம் இதுவரை என்னை எந்த இந்திப்படத் தயாரிப்பாளர்களும் நடிக்க வரும்படி அழைக்காததே. நான் இந்திப்படங்களில் நடிப்பதே மாட்டேனோ என்று சிலர் சந்தேகம் அடைகிறதாக அறிகிறேன். அது தவறு. அழைப்பு வந்தால் இந்திப் படத்தில் மட்டுமல்ல, ஹாலிவூட்டிலும் சென்று நடிக்க என்னால் முடியும்" இவ்வாறு பழம்பெரும் நடிகையும் சிறந்த சங்கீத மேதையுமான கே. பி. சுந்தராம்பாள் ஒரு பேட்டியில் கூறுகிறார்.

தமிழ்த் திரையுலகின் கலைப் பொக்கிஷம் என்று கருதப்படும் சுந்தராம்பாள் புராணப்படங்களில் ஔவையாராக நடித்து புகழ் பெற்றவர் என்பது ரசிகர்கள் அறிந்ததே. சமீபத்தில் அவர் நடித்த 'பூம்புகார்' 'திருவிளையாடல்' ஆகிய இரு படங்களையும் பார்க்கும் வாய்ப்பு இலங்கை ரசிகர்களுக்கு கிடைத்தது.

சென்ற அக்டோபர் மாதம் 11-ம் திகதியுடன் 59-வது வயதுக்குள் காலடி எடுத்து வைக்கும் கே. பி. சுந்தராம்பாள், பிரபல நடிகரான காலஞ்சென்ற எஸ். ஜி. கிட்டப்பாவின் மனைவி என்பதும், சிறந்த முருக பக்தை யென்பதும் தெரிந்ததே. இவர் நடித்த முதல் படம் 'நந்தனார்'. இது 1935ல் வெளி வந்தது. அந்த நாளிலேயே ஒரு படத்தில் நடிப்பதற்கு ஒரு இலட்சம் ரூபா வாங்கியவர் சுந்தராம்பாள். இதுவரை பன்னிரண்டு திரைப்படங்களில் நடித்திருக்கிறார்.

திருமதி சுந்தராம்பாள் தமது பேட்டியில் மேலும் கூறியுள்ளதாவது:—

'கலைஞர்கள் ஒரு நாட்டில் மக்களால் மதிக்கப்படுபவர்கள். மக்களுக்கு ஆபத்து வருகிறதென்றால், கலைஞராக இருந்தாலும், நாட்டுக்குச் சேவை செய்யத் துணிய வேண்டியதுதான். நாட்டுக்கு ஆபத்து ஏற்படாதபடி காப்பது எல்லோருடைய கடமையுமாகும். நாட்டுக்கும் மொழிக்கும் நமது சேவை பயன்பட வேண்டுமே தவிர, சுயநலனுக்காகப் பாடுபடுவது மாபெரும் தவறு. கலைக்குத் துரோகியாகிவிடலாம். ஆனால் நாட்டுக்குத் துரோகியாகிவிடக் கூடாது. இதற்கு மன்னிப்பே கிடையாது. கலைஞர்கள் தான் முதலில் அரசியலில் கலந்துகொண்டு நாட்டை சுபிட்சமாக்க வேண்டும்.

'எம். ஜி. ஆருடன் நடிப்பதில்லை, ஆனால் சிவாஜியுடன் மட்டும் நடிக்கிறீர்களே' என்று கேட்டபோது திருமதி கே. பி. எஸ். பின் வருமாறு சொன்னார்.

'இதற்குக் காரணம் படத் தயாரிப்பாளர்கள் தான். சிவாஜியுடன் நடிக்க வாய்ப்பு கரப்படவில்லை. சந்தர்ப்பம் கிடைத்தால் மக்கள் திலகத்துடன் நடிக்க காத்திருக்கிறேன்'—

## ரகசியப் போலீஸ் 115

ஜேம்ஸ் பாண்ட் படங்களின் பாணியிலே ஒரு துப்பறியும் படத்தினை ஈஸ்ட்மன் கலரில் தயாரிக்க திட்டமிட்டிருக்கிறார் பந்துலு.

எண்களைத் தலைப்பில் வைத்து தமிழில் வெளிவரப் போகும் முதல் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

எம். ஜி. ஆர். பிரதம பாகத்தில் நடிக்கும் இந்தப் பத்மினி பிக்சர்ஸ் தயாரிப்பு ஒரு நவம்பர் வெளியீடாக இருக்கும்.



இப்பொழுது மருதானை எல்பின்ஸ்டன் திரையில் காண்பிக்கப்படும் 'சுதுதுவ' சிங்களப்படத்தில் சந்தியாகுமாரி இப்படி வருகிறார்.

### திரை விமர்சனம்.

## ஆண்டவன் கட்டளை

காதல் உணர்வு ஒருவனை வாழ்வில் முன்னேற விடாது அடிமைப்படுத்திவிடும் என்ற கொள்கையுடைய பிரம்மச்சாரிப் பேராசிரியர் ஒருவரை அவரது மாணவியொருத்தியே தன்காதல்வலையில் சிக்க வைத்து விடுகிறாள். காதல் கூடாது என்று தத்துவம் பேசிய பேராசிரியர் காதலே கடவுள் என்ற தத்துவம் பேசுகிறவராக மாறுகிறார். காதல் புரியத் தொடங்கிய பேராசிரியரை அவமானமும், தொல்லைகளும், கஷ்டங்களும் மாறி மாறி தாக்குகின்றன. ஈற்றில் காதல் நிறைவேறுகிறது. இதுதான் கதையம்சாரம்.



பேராசிரியர் கிருஷ்ணனாக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தோன்றுகிறார். பேராசிரியர் கிருஷ்ணனுடைய பாகம், சில புதிய உத்திகளைக் கையாளும் வாய்ப்பை நடிகர் திலகத்துக்கு கொடுத்திருக்கிறது. அந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்தியிருக்கிறார் அவர்.

நடிகர்திலகம், நடிப்பில் 'ஓவராக' போய்விடுகிறார் என்ற ஒரு குற்றச்சாட்டுக்கு சமீபகாலமாக இலக்காகி வருகிறார். சிவாஜியின் 'ஓவரான' நடிப்பினால், மதிப்புக்குரிய மேதையென்று கருதப்படவேண்டிய பேராசிரியர் கிருஷ்ணன், ஒரு படித்த 'பபூன்' போல சில சந்தர்ப்பங்களில் தோன்றுகிறார். ஆங்கிலச்சொற்களை வைத்து விளையாடுகிறார். ஆங்கிலச் சொற்களைக்கலந்து பேசுவதுதான் பேராசிரியருக்கு அழகு என்பது என்ன வரை விலக்கணமோ தெரியவில்லை!

இறந்துவிட்டாள்என்றுஎண்ணியிருந்த ராதாவைத் திடீரெனக் கண்டதும், 'ராதா' என்று உணர்ச்சிபொங்க அழைக்கும் கட்டமும், கோமதியையும் அவள் காதலனையும் ஒன்றுசேர்த்துவைத்துவிட்டு, அன்பொழுகச்சிரித்து ஆசிகூறி விடைபெறும் கட்டமும் சிவாஜியின் நடிப்பின் எல்லையைத் தொடுகின்றன. எது எப்படியிருந்தாலும், நடிகர்திலகத்தின் பண்பட்ட நடிப்பு படம் முழுவதும் நிறைந்துநிற்கிறது.



பிரம்மச்சாரிப் பேராசிரியரை மயக்கும் ராதாவாக வரும் தேவிகா குற்றஞ்சொல்ல இடமின்றி நடித்திருக்கிறார். முற்பாதியில் பேராசிரியரை சொக்க வைக்கும் காந்தச்சிலையாகவும் பிற்பாதியில் சித்தப்பிரமை பிடித்தவராகவும் நல்லமுறையில் நடித்திருக்கிறார்.

சிவாஜியின் மாணவனாக ராஜனும், சிவாஜியின் அக்கா மகள் கோமதியாக (ராஜனின் காதலி) புஷ்பலதாவும் நடித்திருக்கிறார்கள்.

கல்லூரி மாணவிகளுக்கு 'மார்க்' போடும் மாணவனாக வரும் சந்திரபாபு, நம்மை சிரிக்கவைக்கிறார் சிறிது நேரம்வரை!

ராதாவின் மாமாவராக அசோகனும், ராதாவை பெண்பார்க்க வரும் சங்கராகபாலாஜியும் வருகிறார்கள்.

ஜாவர்சீதாராமனின்வசனம் நன்றாக இருக்கிறது. பல மேதைகளின் கருத்துக்கள் அவரது வசனத்திலே பளிச்சிடுகின்றன.

ஆறே ஆறுபாடல்கள்: கவிஞர் கண்ணதாசனின் கற்பனையில் எழுந்த இந்தப் பாடல்களில் ஐந்தும் சுற்கண்டு. மெல்லிசை மன்னர்களின் இசையமைப்பு இனிமையாக உள்ளது.

படத்தில்வரும் 'கோர்ட்' காட்சி அநாவசியமான ஒன்று.

மொத்தத்தில்—

நடிகர் திலகத்துக்கு ஒரு பெரிய வெற்றியான இப்படத்தை தீபாவளிக்கு ரசிகர்களுக்குத் தரவென 'செலக்ட்' பண்ணியிருக்கிறார்கள் சினிமாஸ் ஸ்தாபனத்தார்.

சிறந்த 'செலக்ஷன்'!

—மகேஸ்.

## "பறக்கும் பாவை"

## படப்பிடிப்பின் போது.....

ஆர். ஆர். பிக்சர்ஸ் 'பறக்கும் பாவை' படப் பிடிப்பு வெகு வேகமாக நடைபெற்று வருகிறது. எம். ஜி. ஆர். மிகவும் சுறுசுறுப்புடன் நடித்து வருகிறார்

சமீபத்தில் இந்தப்படத்துக்காக ஒரு சர்க்கஸ் கம்பெனியை ஆர் ஆர். பிக்சர்சார் ஏற்பாடு செய்திருந்தார்கள். சென்னையை அடுத்த விருகம்பாக்கத்தில் அந்தச் சர்க்கஸ் கம்பெனி 'டேரா'ப் போட்டிருந்தது.

ஒவ்வொரு நாள் இரவும் படப் பிடிப்புக்காக தன்னுடைய வழக்கமான கறுப்பு வண்ணக்காரில் வராமல் நீண்ட 'வான்' ஒன்றில் வந்திறங்கினார் எம். ஜி ராமச்சந்திரன். அதற்கான காரணத்தையும் அவரே கூறினார். 'இரவு படப்பிடிப்பு முடிந்து திரும்பிப் போக இரண்டு அல்லது மூன்று மணி ஆகிறது. அந்த நேரத்தில் கால்களை நீட்டி படுத்துக்கொண்டு போக இந்த 'வான்'தான் வசதியாக இருக்கிறது.'

### மாதவியும் காலணியும்

படப்பிடிப்பு ஆரம்பமாவதற்கு முன்பு, சரோஜாதேவி சர்க்கஸ் கூடாரத்தினுள் ஒரு நாள் மாலை உட்கார்ந்திருந்தார். அவரை யாரோ 'ஹலோ' என்று அழைத்த குரல் கேட்டுத் திரும்பினார் சரோஜாதேவி - அந்தக் குரலுக்கு சொந்தமான நகைச்சுவை நடிகை மாதவி அவருக்கு அருகில் வந்து அமர்ந்தார்.

மாதவி அணிந்திருந்த புது விதமான காலணிகள் சரோஜாதேவியின் கவனத்தைக் கவர்ந்தன.

'மாதவி, நீ சுயநலக்காரிடி, புது பேஷன் 'சேப்பல்ஸ்' எதுவந்தாலும், நீயே வாங்கிப்போட்டுக் கொண்டு வந்து விடுகிறாயே' என்று சரோஜாதேவி சொல்லி விட்டு, அவரது கன்னத்தைச் செல்லமாக நிமிண்டினார்.

# "பத்மினி என்னிடம் மன்னிப்பு கேட்டார்"

# எம். ஜி. ஆர், சிவாஜியுடன் என்றோ ஒரு நாள் நடிப்பேன்

## விஜய நிர்மலா அளிக்கும் சுவையான பதில்கள்

கே: உங்களுடைய தாய் மொழி தமிழ் தானே?

ப: இல்லை, தெலுங்கு தான் எனது தாய்மொழி. ஆனால் தமிழை நன்றாக எழுதவும் பேசவும் எனக்குத் தெரியும். எப்படி என்கிறீர்களா? நான் பிறந்ததும் வளர்ந்ததும் சென்னையில். படித்ததும், தமிழ் மொழிதான்.

கே: நீங்கள் சினிமாவில் எப்படிச் சேர்ந்தீர்கள்? உங்களுக்கு முறைப்படி 'டெஸ்ட்' எடுத்துத்தான் சேர்த்தார்களா?

ப: நான் புதுமுகமா? இல்லையே. பழைய முகம் தானே. புதுமுகங்களுக்குத் தான் எல்லாவித 'டெஸ்டு களும்' தேவை.

கே: அப்படியானால் நீங்கள் நடித்த முதல் தமிழ் படம் 'எங்க வீட்டுப் பெண்' இல்லையா?

ப: இல்லை. நான் சிறுமியாக இருந்த போது டி. ஆர். மகாலிங்கத்தின் 'மச்சரேகை' படத்தில், இளங்கதாநாயகனை நடித்தேன். அதன் பின்பு 'சிங்காரி' படத்தில் சின்னப் பத்மினியாகவும் நடித்திருக்கிறேன்.

கே: அதன் பின்பு எப்படித் திரையுலகுக்கு வந்தீர்கள்? யார் உங்களுக்கு 'சான்ஸ்' கொடுத்தார்கள்?

ப: நான் வளர்ந்தேன். பெரியவள் ஆனேன். சினிமாவில் கதாநாயகியாக நடித்து பேரும் புகழும் பெற ஆசைப்பட்டேன். ஆனால் அதற்காக புதுமுகங்களைப் போல ஒவ்வொரு சினிமாக் கம்பெனி களாக ஏறி இறங்கவில்லை. பிரபல நடிகர்களைச் சந்தித்து சான்ஸ் கேட்கவும் இல்லை. டைரக்டர்களையோ பட அதிபர்களையோ தனியாகச் சென்று அணுகவும் இல்லை. என்னைத் தேடி தயாரிப்பாளர்கள் வரட்டும் என்று காத்திருந்தேன்.

கே: அப்படியானால் முதன் முதலில் உங்களுக்கு வாய்ப்பு தந்தவர் யார்?

ப: எனக்கு, முதன் முதலில் துணிந்து 'சான்ஸ்' கொடுத்தவர் என். டி. ராமராவ் தான். 'பாண்டுரங்க மகாத்மியம்' என்ற அவரது படத்தில் முக்கிய வேடத்தில் நடித்தேன். எனினும் எதிர்பார்த்த வெற்றி எனக்கு கிடைக்க வில்லை.

இதன் பின்பு 'பார்கவி நிலையம்' என்ற மலையாளப் படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்தப்படம் எனக்குப் புகழைத் தேடிக் கொடுத்தது. இதைத் தொடர்ந்து எனக்குப் பல மலையாளப் படங்கள் 'புக்' ஆகின. 'கல்யாண ராத்திரி' என்ற படத்தில் பிரேம் நசீருக்கு ஜோடியாக நடித்து வருகிறேன். இந்தப் படம் வெளி வந்ததும் எனக்கு இன்னும் புகழ் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

கே: 'எங்க வீட்டுப் பெண்ணுக்கு' எப்படி ஒப்பந்தமானீர்கள்?

ப: நான் மலையாளப் படம் ஒன்றில், வாகினி ஸ்டுடியோவில் நடித்துக் கொண்டிருந்த நேரம். அங்கு, ஒரு நாள் வின்சென்டும் நாகிரெட்டியாரும் பேசிக் கொண்டிருந்தனர். 'எங்க வீட்டுப் பெண்' என்ற தமது குறுகிய காலத் தயாரிப்புக்கு ஒரு புதுமுக நடிகையைத் தேடிக் கொண்டிருப்பதாக வின்சென்டிடம் கூறினார் நாகி ரெட்டி. என் திறமையை உணர்ந்திருந்த வின்சன்ட் நாகிரெட்டியிடம் என்னைச் சிபார்சு செய்தார். அதன் பயனே 'எங்க வீட்டுப் பெண்' ஆனேன்.

கே: திரு. நாகிரெட்டியாரைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?


ப: அவரது பெருந்தன்மையும், அன்பும் பண்பும் எனக்கு மிகவும் பிடித்து விட்டது.

கே: நிர்மலா என்ற பெயருக்கு முன்னால் 'விஜய' என்ற அடை மொழியை ஏன் சேர்த்துக் கொண்டீர்கள்?

ப: வெறும் நிர்மலாவான என்னை 'விஜய நிர்மலா' வாக்கியது நாகிரெட்டிதான். பல நிர்மலாக்கள் திரையுலகில் மலிந்து விட்டதே அதற்குக் காரணம்.



கே: 'சித்தி' படத்தில் முத்துராமனின் ஜோடியாக வந்து அருமையாக நடித்திருக்கிறீர்கள். ரசிகர்களின் பாராட்டுகளையும் பெற்றிருக்கிறீர்கள். அப்படியிருந்தும் ஏன் நிறைய படங்கள் 'புக்' ஆகவில்லையென்று கூற முடியுமா?



மக்கள் திலகமும், ஜெயலலிதாவும் அப்படி என்ன அதிசயத்தை வைத்த கண் வாங்காமல் பார்க்கிறார்களோ? — தேவர் பிலிம்சின் 'முகராசி' திரையிடப்பட்டதும் தெரிந்து விடும். எம். ஜி. ஆரின் வெற்றிச் சித்திரங்களில் ஒன்றான 'முகராசி' நல்ல பல தமிழ்ப்படங்களை அளித்து வரும் சினிமாஸ் ஸ்தாபனத்தாரின் திரைகளில் விரைவில் காட்சி தரும்.

ப: 'சித்தி' படத்துக்குப் பின் பல படங்கள் எனக்கு கிடைக்கும் என்று எண்ணியிருந்தது உண்மை: ஆனால் எதிர்பார்த்தது நடக்க வில்லை. என்ன காரணம் என்று எனக்கும் புரியவில்லை.

கே: 'சித்தி' படத்தில் பத்மினி உங்கள் கன்னத்தில் அறைகிறாரே. அது உண்மையான அறைதானா?

ப: (இலேசாகக் கன்னத்தை தன்னுடைய விரல்களால் தடவிப் பார்த்துவிட்டு சிரித்துக் கொண்டே) ஆமாம். காட்சி தத்ரூபமாக அமைய வேண்டும் என்பதற்காக உண்மையாகவே பலமாக கன்னத்தில் அறைந்துவிட்டார் பத்மினி. ஒரு 'டேக்' சரியில்லாமல் போனதால் இரண்டாவதாகவும் ஒரு 'டேக்' எடுத்தார் கோபாலகிருஷ்ணன். இதனால் இருதடவைகள் பத்மினியிடம் அறை வாங்கவேண்டி நேரிட்டது. பின்பு, இதற்காக பத்மினி எனக்கு ஆறுதல் கூறி என்னிடம் மன்னிப்புக் கேட்டார்.

கே: இப்பொழுது எந்தெந்தப் படங்களில் நடிக்கிறீர்கள்?

ப: 'சித்தி' படத்தை தெலுங்கில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் நடிக்கிறேன். மற்றும், பந்தயம், ஜோடிப்புறா, கல்யாண ராத்திரி, இன்னும் இரண்டொரு தெலுங்கு மலையாளப் படங்களிலும் நடித்து வருகிறேன் நாகிரெட்டியார் தயாரிக்கும் அடுத்த படத்திலும் வாய்ப்பு இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன். 'பந்தயம்' வெளிவந்ததும், தமிழ்ப் பட உலகில் எனக்கு நல்ல திருப்பம் ஏற்படும் என்றும் எண்ணுகிறேன்.

கே: உங்களுக்கு எத்தனை மொழிகள் தெரியும்?

ப: தமிழ், தெலுங்கு, மலையாளம் இந்தி, நான்கு மொழிகளிலும் எழுதுவேன், பேசுவேன்.

'எங்க வீட்டுப் பெண்'ணில் முதன் முதலாகக் கதாநாயகியாகத் தோன்றி துடிப்புள்ள இளம் சிட்டாக நடித்து ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட விஜய நிர்மலா, 'சித்தி' மூலம், ரசிகர்களின் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்துக் கொண்டவர். எதிர் காலத்தில் நட்சத்திர நடிகையாக வரக் கூடிய திறமையும், உழைப்பும் உடைய அவர், இந்த பல சுவையான தகவல்களைத் தருகிறார்.

கே: ஓய்வு நேரத்தை எப்படிக் கழிப்பீர்கள்?

ப: வீணை வாசிப்பேன், நடனமாடுவேன் இப்போது முறைப்படி பரதநாட்டியம் பயின்று வருகிறேன். அத்துடன், ரசிகர்களின் கடிதங்களுக்குப் பதில் எழுதுவேன்.

கே: ரசிகர்கள் உங்களுக்கு எப்படி கடிதம் எழுதுகிறார்கள்?

ப: மிகவும் பண்புடன் 'சகோதரி' என்றுதான் பலர் எழுதுகிறார்கள். முறைகேடாக எழுதுவதில்லை. வெளிநாட்டிலிருந்துதான் ஏராளமான கடிதங்கள் வருகின்றன. உங்கள் சிலோன் உட்பட! தமிழ் ரசிகர்களின் ரசிப்புத்தன்மைக்கு ஈடு கிடையாது.

கே: உங்களுக்கு நாடகங்களில் நடிக்கும் எண்ணம் இல்லையா?

ப: ஐயையோ, வேண்டாம்.

கே: உங்கள் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று கருதுகிறீர்கள்?

ப: எதிர் காலத்தைப் பற்றி எனக்கு நிறைய நம்பிக்கையுண்டு. இப்போது எனக்கு சிவாஜி எம். ஜி. ஆர். போன்ற பெரிய நட்சத்திரங்களுடன் நடிக்கும் வாய்ப்பு கிடைக்காமல் இருக்கலாம் ஆனால், என்றாவது ஒருநாள் அவர்களுக்கு ஜோடியாக நடிப்பேன் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கிருக்கிறது.'

---

## ரவி சொன்ன ரகசியம்



மலன் பிக்சர்சாரின் 'நாம் மூவர்' படப் பிடிப்பு வாஹினி ஸ்டுடியோவில் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம். படத்தில் நடிக்க வந்திருந்த ரவிச்சந்திரன் தனியே அமர்ந்து தன் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்.

அச்சமயம் அவரது நண்பர் ஒருவர் இருபத்தேழாந் திகதி தன் படத்திற்குப் பாடல் பதிவு செய்யப்போவதாகச் சொன்னார்.

அதனைக் கேட்ட ரவிச்சந்திரன், '27-ம் திகதி நல்ல நாள்தான்' என்றார்.

உடனே அருகிலிருந்த நண்பர் ஒருவர், 'அதெப்படி, அப்படி உறுதியாகச் சொல்கிறீர்கள்? 27-ந் திகதி என்றால், அதில் அவ்வளவு முக்கியம் என்ன இருக்கிறது' என்றார்.

'அந்தத் தேதி எனக்கு மிகவும் உகந்தது. 27 என்னுடைய லக்கி நம்பர். அந்த நம்பருக்கும் எனக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. எப்படித் தெரியுமா? நான் மலேயாவிலிருந்து சென்னைக்கு வந்தது 27-ம் திகதி. நான் நடித்த முதல் படமான 'காதலிக்க நேரமில்லை' திரையிடப்பட்டது 27-ம் திகதி எனக்குத் திருமணம் நடைபெற்றதும் 27-ம் திகதி. ஒவ்வொரு மாதமும் 27-ம் எனக்கு அதிர்ஷ்டம் அடித்துக்கொண்டே இருக்கும்'' என்றார் ரவிச்சந்திரன்.

---

பஞ்சசீலத்துக்கு மறுபெயர் உதாரணம் தேவிகா. சின்னி, ராணி, மோகன கிருஷ்ணா, பிரமீளா, தேவிகா என்று இவருக்கு ஐந்து பெயர்கள் உண்டு.

# திருமலை மீது ஜப்பான் குண்டு

முதலாவது உலகயுத்தத்தைநேரடியாகப் பார்க்கும் வாய்ப்பு இலங்கை மக்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அந்தக் குறையை நிறைவு செய்துவிட்டது இரண்டாவது உலக யுத்தம். இந்த யுத்தத்தைப் பார்த்து அனுபவிக்கும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது ஒரு வகையில் எமது அதிர்ஷ்டமே.

1942ம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? அன்றுதான் ஜப்பான்காரன் கொழும்பில் குண்டுபோட்டான்.

திருமலை, திருகுணமலை என்றெல்லாம் கூறப்படும் திருகோணமலையிற்தான் நான் அப்பொழுது ஒருகடையில் சாப்புச் சிப்பந்தியாக வேலைபார்த்துக்கொண்டிருந்தேன். எனவே கொழும்பில் நடைபெற்ற குண்டுவீச்சைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை.

## எம். டி. தியாகராசன்

ஆனால் ஜப்பான்காரன் என்னை அந்த நிலையில் விட்டு வைக்கவில்லை. கொழும்பில் குண்டுவீசி ஒருவாரத்துக்குப் பின்னர், அவன் திருமலையிலும் குண்டைப்போட்டு, அந்தக் காட்சியை நேரடியாகக் காணும் வாய்ப்பை எனக்குப் பெற்றுக்கொடுத்தான்.

ஜப்பான் படைகள் மலேயா, சிங்கப்பூர், பர்மா என்று நாடுகளைக் கபளீகரம் செய்து மேற்கு நோக்கி மின்வேகத்தில் முன்னேறிவந்த காலம் அது. இந்தியாவின் கிழக்கெல்லையில் இம்பால் வரை ஜப்பான்காரன் வந்துவிட்டான்.

### பனைமரம் பீரங்கியானது

கீழ்த்திசையிலே வெள்ளைக்காரனின் மாபெரும் இராணுவக் கோட்டைகள்தான் சிங்கப்பூரும் திருமலையும். இலங்கையின் முன்னணிக்கோட்டைதான் சிங்கப்பூர். அந்தக் கோட்டையேஜப்பான்காரனைக் கண்டதும் பொலபொலவென்று உதிர்ந்து விழுந்துவிட்டதென்றால், திருமலைஎம்மட்டு என்று திருமலை வியாபாரிகள் பேசிக்கொண்டனர்.

மற்றொரு வதந்தியும் அப்பொழுது திருமலையில் பரவியது. வெள்ளைக்காரன் பனைமரங்களை வெட்டிக்கொண்டு வந்து அவற்றைப் பெரிய பீரங்கிகளைப்போல ஒருமுனை பருமனாகவும், மறுமுனை பீரங்கிக் குழாயைப்போல சிறியதாகவும்செதுக்கி, தார் அடித்து, இலங்கைக்கு அப்பால் தென்னகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரை நெடுகிலும் ஓரளவு சாய்வாக நிறுத்தி வைத்திருந்தானாம்.

ஜப்பானியன் விமானத்திலோ, கப்பலிலோ வெகுதூரத்திலிருந்து பார்க்கும்போது இப் பனங்கட்டைகள் பிரமாண்டமான பீரங்கிகளைப்போல காட்சியளிக்க வேண்டுமென்பதற்காகவே இந்தத் தந்திரமாம். இதைக் கேட்டு நாங்கள் விழுந்து விழுந்து சிரித்தோம்.

இந்தக் கதை உண்மையோ பொய்யோ, பிரிட்டிஷாரிடம் ஜப்பானை எதிர்த்து யுத்தம் செய்வதற்கு போதுமான ஆயுதங்கள் இருக்கவில்லை என்பதை இக்கதை எமக்கு அன்று எடுத்துக்காட்டியது.

### மக்கள் திகில்

சிங்கப்பூர்தளம் ஜப்பான் காலடியில் விழுந்துவிட்டதால் திருமலைத் தளமும் இனி எந்த நிமிடத்திலும் வீழ்ச்சியடையக்கூடும் என்று திருமலை மக்கள் திகில் கொண்டிருந்தனர்.

திருமலைத் தளம் வீழ்ந்துவிட்டாலும், கொழும்பில் செய்ததைப்போல், ஜப்பான்காரன் குண்டுகளை மட்டும் வீசிவிட்டு ஓடிப்போய் விடமாட்டானென்றும், படைகளைக் கொண்டுவந்து இறக்கி நாட்டைக் கைப்பற்றத் தொடங்கி விடுவானென்றும் நாங்கள் அஞ்சினோம்.

ஜப்பானிய யுத்தக்கப்பல்களும், விமானந்தாங்கிக் கப்பல்களும், நாசகாரிகளும் இலங்கைக்கு அண்மையில் இந்து மகா சமுத்திரத்தில் நடமாடுவதாகவும் செய்திகள் பல காட்டுத் தீபோல இங்கு பரவிக்கொண்டிருந்தன.

### அன்றைய திருமலை

வெள்ளையர் திருமலைத் தளத்தை நன்கு பலப்படுத்தியிருந்தனரெனினும் மக்களில் பலருக்கு ஏனோ அவர்களின் பலத்தில் பூரண நம்பிக்கையிருக்கவில்லை. சிங்கப்பூர் தளத்தின் வீழ்ச்சியும், ஜப்பானியன்சுலபமாக நாடுகளைக் கைப்பற்றி வந்ததும் அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

திருமலையில் இராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்க அதிகரிக்க தொழிலாளர்கள், சிப்பந்திகளின் தொகை அதிகரித்தது. வர்த்தகர்களுக்கு நல்ல வியாபாரம். நல்ல வருமானம்! பணம் தாராளமாகப் புரண்டது. சிங்கப்பூரில் பிரிட்டிஷ் தளம்இருப்பதால் தேசிய வருமானத்தில் 20 சதவிகிதம் அதன் மூலம் இன்றும் கிடைத்துவருகிறது என்று அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த சிங்கப்பூர்பிரதமர் கூறினாரல்லவா? இந்த நிலைதான் அன்று திருமலையில் இருந்ததென்று கூறின் மிகையாகாது. எங்கள் வர்த்தகம்செழித்தோங்கியது.

### அபாயம் நிறைந்த அந்தநாள்

கொழும்புக் குண்டுவீச்சின் விளைவாகநாங்கள் கதிகலங்கியிருந்தபோது, நாங்கள்எதிர்பார்த்திருந்த அந்த நாளும் வந்துவிட்டது.

அன்றுகாலை சுமார் 8 மணி இருக்குமென்று நினைக்கிறேன். திடீரென காது செவிடுபடும்படி அபாயச் சங்குகள் ஒலித்தன. ஆம், எதிரிவிமானங்கள் வந்துவிட்டன என்பதே இந்த எச்சரிக்கை. அடுத்த நிமிடம் யார் தலைமீது ஜப்பான் குண்டு விழுமோ என்று சொல்லமுடியாத நிலையில் இருந்தோம்.

அபாயச் சங்கொலியைக் கேட்டதும் நாங்கள் வாரிச் சுருட்டிக்கொண்டு ஓடிப் போய் பாதுகாப்புக் குழிகளுக்குள் பதுங்கினோம். அக்குழிகள்மீது குண்டுகள் வீழ்ந்திருந்தால் அவற்றுள்ளேயே சமாதியாகி இருப்போம்.

இதே சமயத்தில் ஜப்பானியக் கப்பல்கள் கடலிலிருந்து திருமலை மீது பீரங்கிப் பிரயோகம் செய்யும் சப்தம் கேட்பதாக எங்களுடன் குழியினுள் பதுங்கியிருந்த இராணுவத் தளத்தின் தொழிலாளர் சிலர்கூறினர். ஆனால் எந்தக் கப்பலும் திருமலையைத் தாக்கவில்லை என்பது பிறகுதான் தெரியவந்தது. ஒரே பீரங்கி முழக்கமாகக் கேட்டதால் யார் யார் எங்கிருந்து சுடுகிறார்களென்பதைக் கூறமுடியாமலிருந்தது.

### நகரைவிட்டு ஓட்டம்

நாங்கள் நடு நடுங்கிக் கொண்டிருந்தோம். அந்திம காலம் வந்துவிட்டதாகவே நான் கருதினேன்.

சிறிதுநேரத்தில் அபாயம் நீங்கிவிட்டதாக அறிவிக்கும் சங்கு ஒலித்தது. எல்லோரும் குழிகளைவிட்டு வெளியே வந்தோம்.

அடுத்து நகரை விட்டு மக்கள் திமு திமு வென்று ஓடும் படலம் ஆரம்பமாயிற்று. பலர் அத்தியாவசியமான சாமான்களை மட்டும் எடுத்துக் கொண்டு வீடு வாசல், கடை சாய்ப்புகளை விட்டுவிட்டு வெளியேறினர். அநேகர் அவசியமான பொருட்களையும் கூட ஆங்காங்கு போட்டு விட்டு ஓட்டம் பிடித்தனர்.

வியாபாரிகளோ கடைகளை மூடிவிட்டு, தத்தம் சிப்பந்திகளுக்குச் சொல்லாமலே கம்பிநீட்டிவிட்டனர். என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. கட்டின வேட்டியுடன் நானும் ஒரு நண்பருடன் சேர்ந்து வெகு தூரத்தில் ஒரு கிராமத்தில் வசித்து வந்த நண்பரின் உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றோம். அங்கு சென்றபிறகு தான் எனது பதட்டம படிப்படியாக நீங்கியது.

### இறங்குதுறை நாசம்

ஜப்பான்காரன் மீண்டும் திருமலையைத் தாக்குவான் என்று மக்கள் பேசிக் கொண்டனர். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை.

நாங்கள் நகரை விட்டு வெளியேறும் போது ஆங்காங்கு புகை மண்டலம் கிளம்புவதைக் கண்டோம். குண்டு விழுந்து ஒரு எண்ணைத்தாங்கிதீப் பிடித்துக் கொண்டதாம். துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த மூன்று கப்பல்களும் தீப்பிடித்துக் கொண்டதாகக் கூறினர். இறங்குதுறை குண்டு வீச்சால் நாசமாக்கப்பட்டது.

நேச நாடுகளுக்கு இக்குண்டு வீச்சால் பலத்த சேதம் ஏற்பட்டதாம் தரையில் நிறுத்தப்பட்டிருந்த சில விமானங்கள் கூட நாசமாகிவிட்டனவாம்.

### விசித்திரக் கதை

பின்னர், இது பற்றி ஒரு விசித்திரமான கதை கூறப்பட்டது.

'ஜப்பானின் விமானந்தாங்கிக் கப்பல்கள், சில நூறு மைல்களுக்கப்பால் நிறுத்தப்பட்டு. அதிலிருந்து வந்த விமானங்கள்தான் திருமலையைத் தாக்கின' பின்னர் திரும்பிக் கப்பலுக்குச் சென்ற விமானங்கள் கப்பல்கள் அங்கு இல்லாதிருந்ததைக் கண்டு, சிங்கப்பூர் தளத்தை நோக்கி தொடர்ந்து பறந்தனவாம். ஆனால் ஒரே பாய்ச்சலில் அவ்வளவு தூரம் பறப்பதற்கு போதிய எண்ணெய் இல்லாதிருந்ததால் அந்த விமானங்கள் ஆங்காங்கு கடலில் விழுந்து மூழ்கிவிட்டனவாம். நடந்தது என்ன வெனில், அந்த விமானங்கள் திருமலையைத் தாக்கிக் கொண்டிருக்கும் போது, வேறு வழியாகப் பறந்து சென்ற பிரிட்டிஷ் விமானங்கள் அந்தக் கப்பல்கள் மீது குண்டுகளை வீசி அவற்றை மூழ்கடித்துவிட்டன. இது நேச நாடுகளின் திறமைமிக்க இராணுவ தந்திரத்திற்கு ஓர் எடுத்துக் காட்டல்லவா?

**வானத்தில் அங்குமிங்கும் பறக்கும் விமானங்களின் இரைச்சல் கேட்கத் தொடங்கியது. எங்கள் தலைக்கு மேல் ஜப்பான் விமானங்கள் பறப்பதைப்போல தோன்றின. விமான எதிர்ப்பு பீரங்கிகள்முழங்கின. மின் வேகத்திற் பாய்ந்து சென்ற நேச நாட்டுச் சண்டை விமானங்கள் வானத்திலே ஜப்பான் விமானங்களுடன் மோதின. அந்த விமானங்கள் இயந்திரப் பீரங்கிப் பிரயோகம் செய்த ஒலிவேறுபயங்கரமாகக் கேட்டது.**

## அன்னிய...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

முதன் முதலாக 1680 ம் ஆண்டு ஐரோப்பாவில் செய்யப்பட்டன.

### மிகப் பெரிய முத்து

வரலாற்றில் காணப்படும், மிகப் பெரிய விலை உயர்ந்த முத்து வெனிசுலாகடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டது. அதனை 1579 ல் ஸ்பெயின் நாட்டை ஆண்ட இரண்டாவது பிலிப்வாங்கினார். அதன் எடை 250 காரட்.

மிகச்சிறந்த முத்தொன்று 1905ல் இலங்கையில் நடைபெற்ற முத்துக்குளிப்பின்போது, ஓர் ஏழையின் கையிற் சிக்கியது. அவர் வாங்கிய மூன்று முத்துச் சிற்பிகளில் ஒன்றில் இந்த முத்து இருந்தது.

நம்முடைய நாட்டை வர்ணிக்க வந்த புலவர்கள் 'இந்தியாவின் நெற்றியிலிருக்கும் முத்து' என்றும் 'கிழக்கு நாடுகளின் முத்து' என்றும் வர்ணித்திருக்கிறார்கள்.

பண்டைக் காலத்திலிருந்தே முத்துக்குப் பெயர் போன நம்முடைய நாட்டை, முத்துவளம் கொழிக்கும் நாடாக மாற்ற, முத்துக் குளிப்புத் தொழிலுக்கு அரசாங்கம் வேண்டிய உதவிகளைச் செய்து தரவேண்டியது அவசியம். பண்டைய முத்துக் குளிப்பு முறைகளுக்குப் பதிலாக விஞ்ஞான ரீதியான நவீன முறைகளைக் கையாண்டால், முத்து அறுவடையை பன்மடங்கு பெருக்கமுடியும்.

## கருத்தற்றது

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலா நாம் உள்ளோம்? மேலும்...அதை உணர்ந்தவர்கள் தான் உண்டா?

'அதிகப் பிரசங்கித்தனம்?' செய்யவில்லையே. அளவுடன்தான் கூறுகின்றேன்! அவ்வளவுதான். மேலும்...

'விரசம்?' இந்த நிலையினை அடைந்தது...இதுபற்றித்தான் முதலில் கூறியிருக்கவேண்டும்! அப்படித்தானே? அப்படிச் செய்வதுதான் நியாயம்.

'சொல்வேன்?' காலம் நெருங்குகின்றது? உணர்கின்றேன். சொல்கின்றேன். மனதை ஒருமைப்பாடு செய்துகொள்ளவும்.

'அவசியம்?' மிகவும் அவசியம். நான் கூறப்போவது கருத்தற்ற விடயமில்லை. சோரம்போன எனது வரலாறு...அது கேட்கப்படுவதை மட்டும் நான் விரும்பவில்லை! உண்மை நிலையினை உணர்ந்துகொள்ளப்படவேண்டும். இதுதான் என் எதிர்பார்ப்பு!

'அப்படியா?' ஆம்! கேளுங்கள், என்னை வாடகைக்கு விடுகின்றேன். உங்களைப்போல பலர், எனது வாடிக்கைகாரர்கள்! ஆனால்...முதல் நான். முதலாக்குபவன் நான்.

'விளங்கவில்லை'யா? புரியவில்லை? நான் விரும்பினேன்! நான் சோரம் போனேன்! நான் முதலானேன்! ஆகையால்...இந்த நிலைக்குத தள்ளப்பட்டேன். இதற்குக் காரணம்...நானேதான்! வேறு எவருமேயில்லை!

'விடை தருவியா?' காலமாகின்றதா? காசைத் தந்தீர்கள், என்னைத்தந்தேன். போகமுன்..., கூறவும் ஓர் வார்த்தை!

'என்ன?' உங்கள் வினவுக்கு, உண்மைகள் பல பகர்ந்தேன்., கூறவும் உங்கள் கருத்தினை. இந்த... ...விபச்சாரம் வேதாந்தம் எப்படி?

!......!......!

..................

(யாவும் கற்பனை)


## ஜீ. சீ. ஈ. (சா. த) 1966

மேற்படி பரீட்சைக்கான
புதிய/பழைய
பாடத்திட்டத்திற்கமைந்த

பயிற்சிக் கோவைகள்

| | |
|---|---|
| ★ எண் கணிதம் | ரூ. 5/- |
| ★ குடியியல் | ரூ. 5/- |
| ★ சரித்திரம் | ரூ. 5/- |
| ★ சுகாதாரவியல் | ரூ. 5/- |
| ★ இஸ்லாம் | ரூ. 5/- |
| ★ தமிழ்ப்பாஷை | ரூ. 5/- |
| ★ புவியியல் | ரூ. 5/- |
| ★ 101கட்டுரைகள் | ரூ. 7-50 |

தபாற் செலவு -/50

போஸ்டல் ஓடர் அனுப்பவும்.

சர்வகலாசாலை
போதனு கழகம் (UTI)
540, மருதானை வீதி,
த. பெ இல. 1079
கொழும்பு

# ஓடிப்போனவன்

...நவசோதி...

## (16)

## நான் திருடனு

பிணம்போல் நடுரோட்டிலே இருக்கும் வசந்தனின் உடலைச் சப்பையாக்கும் வேகத்தில் அல்லவா கார் வருகிறது. கிறீச் என்னும் பிறேக் சத்தத்தைத் தொடர்ந்து கார் நின்றது. இந்தச் சத்தத்தில் உறங்கி இருந்த ஊரும் விழித்தது.

கோட்டும் சூட்டும் அணிந்த ஒருவர் காரை விட்டு இறங்கினர். அவரின் வாய் சிகரட் புகையை ஊதித் தள்ளியது. வசந்தனுக்கு அண்மையில் சென்ற அவர் 'ஏய்' என்றார். சப்பாத்துக்காலினல் ஒரு முறை வசந்தனின் வலது கையை உதைத்தார்.

மனித உருவத்தில் தன்னை ஒரு மிருகம் உதைவதைக் கூட உணராமல் கிடந்தான் வசந்தன். விமலாவுக்காக அவன் வாங்கிய புத்தகத்தையும் உதைந்து கொண்டே காரினுள் ஏறிக்கொண்டது அந்த மிருகம்பல மனிதர்கள் வந்து கூடுமுன்னரே கார் புறப்பட்டுச் சென்றது.

அங்கு வந்த பலர் அந்தக் கார்தான் வசந்தனை அடித்திருக்க வேண்டும் என்று பேசிக்கொண்டனர். அப்பொழுது வசந்தனை தேடி அங்கு வந்த இரத்தினம் சனக்கூட்டத்தைக் கண்டு என்னவென்று விசாரித்தான். கூட்டத்தை இடித்து விலக்கிக்கொண்டு முன்னே சென்ற இரத்தினம் எதிர்பாராது வசந்தனை அங்கு கண்டதும் அவனுக்கே மயக்கம் வரும் போல் இருந்தது.

'வசந்தா, தம்பி வசந்தா' என்று அலறினன். அவ்வழியாக வந்த ஒருகார் நிறுத்தப்பட்டு வசந்தன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான். சிதறிக்கிடந்த புத்தகத்தையும், பார்சலையும் ஒருவர் எடுத்து இரத்தினத்திடம் ஒப்படைத்தார்.

மயக்கம் தெளிந்த வசந்தன் நடந்ததைக் கூறும் வரையில் டாக்டர்கள் உட்பட அனைவரும் 'கார் விபத்து' என்றே நம்பி இருந்தனர்.

முரடர்கள் வசந்தனைத் தாக்கி கொள்ளை அடித்துச் சென்ற பேர்சுக்குள் இருந்த நூற்றிநாற்பது ரூபாய் பற்றி பொலிசிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. பலமான அடியினல் மயக்கமடைந்த வசந்தனை அன்றிரவு ஆஸ்பத்திரியில் தங்கி ஓய்வெடுக்கும்படி டாக்டர் ஆலோசனை தெரிவித்தார். அதை விரும்பாத வசந்தன் இரத்தினத்துடன் வீடு திரும்பினன்.

தன்னை ஒரு மாதமாகக் கவனித்ததற்காக இரத்தினத்திடம் கொடுக்க எண்ணியிருந்த நூறு ரூபாவைத் தன்னல் கொடுக்க முடியாது போய்விட்டதே என்று கலங்கினன் வசந்தன். தனக்கு இனி பால் வேண்டாமெனத் தெரிவித்தான்அவன். 'தம்பி, கஞ்சியைக் குடித்தாலும் நாங்கள் மூவரும் ஒன்றையே குடிப்போம். நீ பச்சைத் தண்ணியைப்பருக, நாங்கரெண்டு பேரும் மட்டும் பாலைக்குடித்திடுவமா...' என்றான் இரத்தினம்.

அதைக் கேட்டதும் அவர்களின் மனதைப் புண்படுத்திவிட்டேனே என்ற உணர்வு வசந்தனை வாட்டியது.

விமலாவுக்கு வாங்கிய புத்தகத்தையும் துணிப்பார்சலையும் அவளிடம் கொடுத்தான். 'விமலா, என்னல் இவ்வளவுதானம்மா செய்ய முடிந்தது. என்னை உன் சொந்த அண்ணனக எண்ணி, எது வேண்டுமோ அதையெல்லாம் கேளம்மா...' என்று அவன் கூறியபோது கண்ணீரை அடக்கிக்கொண்டாள் இரத்தினம்.

அடுத்த நாள் காலையிலேயே வசந்தனின் கன்னத்தைப்பதம் பார்த்து பணத்தைக் கொள்ளையடித்த முரடர்கள் பொலிசாரிடம் அகப்பட்டுவிடுவார்கள் என்று விமலா, இரத்தினம், வசந்தன் மூவருமே எதிர்பார்க்கவில்லை. அன்று மத்தியானம் அடையாளத்தைக் கூறி பணத்தையும் பேர்சையும் பொலிஸ் இன்ஸ்பெக்டரிடமிருந்து பெற்றுக்கொண்டான் வசந்தன்.

காலையில் பொலிஸ் ஸ்டேசனுக்குச் செல்ல வேண்டி இருந்ததால் நண்பகல் உணவை முடித்துக்கொண்டு கடைக்குப் புறப்பட்டான் வசந்தன்.

அன்று காலையில் வேலைக்கு வராததினல் முதல்மாதச் சம்பளத்துடன் வேலையே வேண்டாமென்று ஓடிப்போய் விட்டேன் என்று முதலாளி எண்ணி விடுவாரோ என்ற சந்தேகத்துடன் முதல் நாள் ஏற்பட்ட சம்பவத்தை அவரிடம் தெரிவிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் விரைந்தான் அவன்.

ஆனல் பேரிடிதரும் செய்தியுடன் தன்னை எதிர்நோக்கிய வண்ணம் வாசலிலேயே முதலாளி காத்து நிற்பார் என்பதை அவன் எப்படி அறிவான்.

முதல்நாள் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் விற்ற பணத்தில் இருபத்தைந்து ரூபாயைக் காணவில்லை. பணத்தைச்சரியாக எண்ணிப் பார்த்து கடையில் வேலை பார்க்கும் சுந்தரத்திடம் கொடுத்து விட்டுதான் விமலாவுக்குரிய பொருட்கள் வாங்கச் சென்றிருந்தான் வசந்தன்.

பணத்தை உண்மையிலேயே திருடிய சுந்தரம் பழியை வசந்தன் மேல் போட்டுவிட்டான். காலையில் வசந்தன் வேலைக்கு வராதிருந்ததும் முதலாளிக்கு அவன்மேல் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

'டேய் பொடி பயலே' திருட்டு ருஸ்கல்... பெரிய இடத்துப் பிள்ளை என்று உன்னையுமா நம்பிறது. உன்னை, பொலிசிலை பிடிச்சுக் குடுத்து ஜெயிலுக்கு அனுப்பனும்...' என்று வசந்தன வந்ததும் வராததுமாக அவன்மேல் எரிந்து விழுந்தார் முதலாளி.

தான் பணத்தை திருடவில்லை என்று வசந்தன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். மன்றாடினன். வேலைதராவிட்டாலும் திருட்டுப்பழியைத் தன் மீது சுமத்தவேண்டாமென கண்ணீர் விட்டு வேண்டினன். முதலாளி நம்பினல் தானே! வசந்தன் கொடுக்கும் போதே பணம் குறைந்திருந்துதாகச் சுந்தரம் கூறியதையே முதலாளி நம்பினர்.

'இனி திருடும் பயலுக்கு இங்கே என்ன வேலை —முதலாளியால் விரட்டப்பட்ட வசந்தன் தன்னை வேலையிலே சேர்த்து ஒரு மாதமாக ஆதரித்து வந்த இரத்தினத்தின் முகத்தில் திருடன் என்ற பழியுடன் எப்படி விழிப்பது என்று கலங்கினன்.

எங்கு போவது என்று தெரியாமலே அவனின் கால்கள் நடந்தன. பைத்தியம் பிடித்தவனைப்போல தெருவிலே நடந்தான் வசந்தன்.

அப்பொழுது—

தனக்கு பக்கத்தில் வந்து நின்ற காரின் 'ஹோர்ன்'சத்தத்தைக்கேட்டுத் திடுக்கிட்டுப் போனன்—

## பிரிவுத் துயர்

வசந்தன் வீட்டை விட்டு வெளியேறி ஒரு மாதங்களாகி விட்டன.

வசந்தன் இல்லாததைப் பற்றி ஆரம்பத்தில் கவலைப்படாத சின்னம்மா கூட தனது தவறை உணர்ந்து கொண்டாள். வசந்தனைக் கனவிலும் நனவிலும் எண்ணித் தவித்த மாலதியின் உடல் வாடி வதங்கி விட்டது. பலநேரம் பட்டினி கிடந்த அவளின் நெஞ்சை துயரமே நிறைத்தது. அண்ணன் விரைவில் வந்திடுவான் என்று அவளைத் தேற்றுமளவிற்கு அன்னையின் மனம் மாறிவிட்டது.

தீய நண்பர்களின் சகவாசத்தால் பாவியாகித் திரிந்த நாட்களை எண்ணி மனதிற்குள்ளேயே வெதும்பினன் விமலநாதன்.

—சதிக் கூட்டத்தோடு சேர்ந்து வசந்தனை விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள முடியாதவாறு ஆக்கியது; அண்ணன் பாடம் சொல்லித் தரவில்லை என்று அபாண்டப் பழியைச் சுமத்தியது; பலமுறை தங்கையின் கன்னத்தை 'பளார்' என்று பதம் பார்த்தது— போன்ற பழைய நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் அவனின் நினைவிற்கு வந்து கண்ணீராகப் பெருக்கெடுத்தது. தான் இழைத்த குற்றங்களுக்கெல்லாம் தன்னை மன்னிக்கும்படி இறைவனை வேண்டிப் பிரார்த்தித்தான் அவன்.

வசந்தன் இல்லாத அருமையை இப்பொழுதாவது வீட்டில் மற்றவர்கள் உணர்ந்தனரே என்று நிம்மதி அடைந்தார் சித்தப்பா. வீட்டில் உள்ள நால்வருமே கண்ணீர் சிந்தாத நாட்களே இல்லை என்று கூறிவிடலாம்.

வீட்டில்தான் இந்த நிலைமை என்றால் கல்லூரியில் கூட வசந்தனைக் காணது எத்தனையோ இதயங்கள் ஏங்கின. மத்திய கல்லூரியின் புகழுக்கே சுடர்விளக்காகத் திகழ்ந்த வசந்தன் இல்லையே என்று ஆசிரியர்களிடம் குறைபாடு தெரிவித்தார் தலைமையாசிரியர்.

ஏழாம் வகுப்பில் வசந்தனைப் பற்றிய செய்தியால் மனவாட்டமடைந்தனர் இருவர். அவர்களில் ஒருவர் மாணவன் செல்வம்தான். 'வாழைப் பழத்தையும் பாணையும் திருடிய பாவி நான், என்னை மன்னித்து விடு செல்வம்' என்று நடுவீதியில் தலைதெறிக்க ஓடி வந்து வசந்தன் மன்னிப்புக் கேட்ட சம்பவத்தை பலமுறை நினைவு படுத்திய போது அவனின் கன்னத்திலே கண்ணீர் முத்து முத்தாக உருண்டோடியது. மனம் மாறிய விமலநாதனையும், மனம் கலங்கும் மாலதியையும் கல்லூரியிலே காணும் போதெல்லாம் வசந்தனின் நினைவே நெஞ்சை நிறைத்தது.

மனவாட்டமடைந்த மற்றவர் வகுப்பாசிரியர் வேலுப்பிள்ளை வாத்தியார் தான். சில சமயங்களில் வரிசையாக மாணவர்களிடம் கேள்வியைக் கேட்டுக் கொண்டு வரும்போது வசந்தன் இருந்த பெஞ்சுக்கு வரும் போதே அவரை அறியாமலே கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுக்கும் தவறாமல் கிழமைக்கு இருமுறை தன்னும் வீட்டிற்குச் சென்று வசந்தனின் பிரிவால் கலங்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி வந்தார்.

ஆனல், சதிக்கூட்டத்தைச் சேர்ந்த சண்முகத்தினதும் கந்தசாமியினதும் போக்கில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. தற்பொழுது விமலநாதன் இவர்களோடு கூட்டுச் சேர்வதும் இல்லை.

மாலதி தனியாகக் கல்லூரிக்குச் செல்வது அவனின் மனதைப் புண்படுத்தியது. ஏதோ ஒரு குற்றத்தை, தான் செய்துவிட்டதாக அவனின் மனம் உறுத்தியது. அன்றொரு நாள் காலை— மாலதி தனியாகவே கல்லூரிக்குப் புறப்பட்டாள்.

வழமையாகக் கல்லூரிக்குப் புறப்படும் போதெல்லாம் அவளின் கண்கள் கலங்குவதை அவன் அவதானிக்கத் தவறவில்லை. அன்றும் அவள் புறப்பட்டுச் செல்லும் போது அவளின் கண்கள் பனித்ததை அவனல் தாங்க முடியவில்லை.

தெருவிலே மாலதி இறங்கி நடந்தபோது அவளின் வலது கை கண்களைத் துடைப்பதைக் கண்ட விமலநாதன் அவளை அழைப்பதற்காக வாயெடுத்தான். ஆனல் அவனின் குரல் தொண்டையிலேயே சமாதியாகிவிட்டது.

வசந்தனும் இருந்தால் அவனுடனேயாவது மாலதி கைகோர்த்து ஒன்ருகச் செல்வாளே என்பதை அவனல் எண்ணிக்கூட பார்க்க முடியவில்லை.

மாலதி தெருச் சந்தியின் திருப்பத்திற்கு அண்மையில் சென்றிருப்பாள். எதையோ செய்வதற்கு விமலநாதனின் மனம் தூண்டியது.

அன்னையிடம் விடைபெற்று புத்தகங்களை எடுத்துக் கொண்டு சித்தப்பிரமை பிடித்தவன் போல் தெருவழியே ஓடினன்.

சந்தியைக் கடக்கும் மாலதியைப் பார்த்தான். உலகத்தையே மறந்த நிலையில் மாலதி! மாலதி!' என்று அலறிக் கொண்டே தெருவைக் கடந்தான் அவன். அந்த நேரத்தில் ஒரு டாக்ஸி அசுர வேகத்தில் எதிர்ப்புறமாக வந்ததைக்கூட அவனல் அவதானிக்க முடியவில்லை.

விமலநாதனை மோதிக்கொண்டு அந்தத் தெருவையே திடுக்கிட வைத்தாற்போல காதை அடைக்கும் பிரேக் சத்தத்துடன் நின்றது அந்த டக்ஸி. தெருவிலே சென்ற அனைவரும் ஒரு கணம் ஆடாமல் அசையாமல் மலைத்து நின்றனர்.

புத்தகங்கள் சிதறுண்டன. காரினல் அடிபட்ட விமலநாதன் ஐந்தடி தள்ளி விழுந்து கிடந்தான். உணர்வற்றுக் கிடந்த அவனின் வலது காலின் பாதத்திலிருந்து இரத்தம் பெருக்கெடுத்தது. அவனைச் சுற்றி ஒரு கூட்டமே கூடிவிட்டது.

ஐந்து நிமிடத்திற்குள் அவனைச் சுமந்த வண்ணம் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்கு ஒரு கார் விரைந்தது. நடந்ததை அறிந்த வீட்டாரும் அடுத்து காரில் ஆஸ்பத்திரிக்குவிரைந்தனர்.

விமலநாதன் காரில் அகப்பட்ட செய்தி காட்டுத் தீ போல் கல்லூரிக்கும் பரவியது. மாலதியை அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தார் வேலுப்பிள்ளை வாத்தியார்.

ஆப்பரேஷன் தியேட்டரிலிருந்து பத்துமணிக்குத் தான் விமலநாதனை வெளியே கொண்டுவந்திருந்தனர். கார்ச் சில்லு ஏறியதால் அவனின் வலது பெருவிரல் சிதைந்துவிட்டபடியால் அதை வெட்டி எடுத்துவிட்டனர், டாக்டர்கள்.

பெருவிரல் வெட்டப்பட்ட செய்தியைக் கேட்ட அனைவருமே விக்கி நெஞ்சம் வெடித்து அழுதனர். பெருவிரலை வெட்டாது விட்டால் அது முழுக்காலையுமே நாளடைவில் பாதித்து சிலநேரம் முழங்காலைக்கூட வெட்ட வேண்டி வரும் என்று டாக்டர்'கள் கூறியதன் பின்பே அவர்கள் ஓரளவு அமைதி அடைந்தனர். ஆனல் விமலநாதனைப் பத்து மாதம் சுமந்து பெற்ற அன்னையின் அழுகையை அடக்க முடியவில்லை. வேதனை அழுத்தும் நெஞ்சுடன் தன் கண்ணீரை தானே விழுங்கிக் கொண்டு அனைவர்க்கும் ஆறுதல் கூறினர் வேலுப்பிள்ளை வாத்தியார்.

வசந்தனுக்கு விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள முடியாதவாறு மண்டையிலே காயத்தை விளைவித்ததற்காகத் தனக்குக் கடவுள் நல்ல தண்டனையைக் கொடுத்துவிட்டார் என்று அமைதி அடைந்தான் விமலநாதன்.

ஆனல் அவனை ஒரு எண்ணம் வாட்டி வதைத்தது. அதுதான்— வசந்தன் எங்கே?




SATHYAVALAYAM'S
KASA NASINI
ஸத்ய வலயம் காச நாசனி

"காச நாசனி" எல்லாவிதமான இருமல்களையும், அவை, எவ்வளவு நாள் பட்டதானாலும், கடுமையானதானாலும், விரைவில் சுகப்படுத்துகிறது. பீனிசம், நெஞ்சுச் சளி (ப்ரோங்கைடீஸ்) சயரோகம் முதலிய வருத்தங்களுக்கும் மிகச் சிறந்தது.

"ப்ரதிச்யாய தகோகாஸ: காஸால் ஸம்ஜாயதேக்ஷய"

என்னும் பிரமாணப்படி, பீனிசத்திலிருந்து இருமலும், இருமலிலிருந்து சயரோகமும் உண்டாகிறது. ஆதலால் இருமலை வளர விடாமல், தகுந்த மருந்தை உடனே பாவிக்க எவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நீண்டகால ஆராய்ச்சியின் பயனுகக் கண்டுபிடிக்கப்பட்ட இம் மருந்தின், சீக்கிரமாயும், நிரந்தரமாயும் குணமளிக்கும் தன்மை, மற்றெரு இருமல் மருந்துக்கும் இல்லை என்பதை பாவித்தவர்கள் சொல்லுகிறார்கள்.

அளவு: 15 - 25 சொட்டுகள் விதம் தினம் மூன்று முறை.
விலை: 1 அவு. போ. ரூ. 5/-

எஸ் என் குரு மெடிகல் ஹால்
80 புதுச்செட்டித் தெரு
கொழும்பு-13

# இப்பொழுது 100-வது நாளாகக் காட்சி அளிக்கிறது

## சென்ட்ரல் மற்றும் சிலோன் எண்டடெயின் மென்ட்ஸ் திரைகளில்

சித்ரா புரொடக்ஷன்ஸ்

# சித்தி

திரைக்கதை — வசனம் — டைரெக்ஷன்
இயக்குனர் திலகம்
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

## அதி விரைவில் எதிர்பாருங்கள்

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்

### கந்தன் கருணை

(ஈஸ்மன் கலரில்)
* சிவாஜி கணேசன்,
* ஜெமினி கணேசன்,
* சாவித்திரி * ஜெயலலிதா
* கே. ஆர். விஜயா * நாகேஷ்

சன்பீம்ஸாரின்

### சாது மிரண்டால்

* நாகேஷ்,
* டி. ஆர். ராமச்சந்திரன்
* கல்பனா * பாலையா
திரைக்கதை — வசனம்
ஏ. பீம்சிங்

எம். ஜி. ஆர். புரொடக்ஷன்ஸ்

### அடிமைப் பெண்

(ஈஸ்மன் கலரில்)
* எம். ஜி. ஆர்.
* சரோஜாதேவி
ஜெயலலிதா, ரத்னு
கே. ஆர். விஜயா, நாகேஷ்



## ஜனத்திரள் மிகுந்த திரைகளில் இப்பொழுது காட்சி தருகிறது

எம்பயர் (கொழும்பு) செல்லமஹால் (கொழும்பு) வின்சர் (யாழ்ப்பாணம்)
இம்பீரியல் (மட்டக்களப்பு) நெல்சன் (திருமலை) கிங்ஸ் (பதுளை) ரீகல் (கண்டி) ரீகல் (நூரளை)

★ கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய 'ஆயிரத்தில் ஒருவன்' நட்சத்திரங்களான

● எம். ஜி. ஆர். ● ஜெயலலிதா
நடித்த
தேவர் பிலிம்ஸ் அளிக்கும்

# கன்னித்தாய்

பலரின் வேண்டுகோளுக்கிணங்க
கெயிட்டி திரையில் காண்பிக்கப்படுகிறது

எம். ஜி. ஆர். சாவித்திரி,
வீரப்பா, சந்திரபாபு நடித்த

# மகாதேவி

## தீபாவளித் திரை விருந்து
### நவம்பர் 9-ம் திகதி முதல்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (நம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) மொடேன் (பண்டாரவளை) மொடேன் (பதுளை) விஜிதா (அட்டன்)
ஆகிய திரைகளில்

சிவாஜி கணேசன், தேவிகா, சந்திரபாபு
அசோகன், பாலாஜி, ராஜன், புஷ்பலதா,
நாகேஷ், வீரப்பா நடித்த

பி. எஸ். வி. பிக்சர்சாரின்

# ஆண்டவன் கட்டளை

இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
டைரக்சன்: சங்கர்



கடைசி வாரம்
கிங்ஸ்லி
பிளாசா
வெலிங்டன்

# பணம் படைத்தவன்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஆகாரால் கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை, 194 ஆம் இலக்கத்தில் 1966-ம் வருடம் நவம்பர் மாதம் 4-ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.